## பகுதி IV

### இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1990 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்

பக்கம்

1. 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்* i

2. 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஈடு (திருத்தச்) சட்டம் xvi

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் xxiv

*குறிப்பு:—தனிசு அறவிடல் சூழ்நிலையை மேம்படுத்தும் நோக்கில் அவசியமானதும் தொடர்ந்து வருவதுமான திருத்தங்களின் வடிவில் தனிசு அறவிடல் சட்டவாக்கத்தின் பாகமொன்றாகக் கீழ்வரும் நியதிச்சட்டங்கள் விதிப்பாக்கப்பட்டன:—

(1) 1990 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஆவணங்களின் பதிவு (திருத்தச்) சட்டம்.

(2) 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கக் குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்.

(3) 1990 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டம்.

(4) 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கப் பகிரங்கச் சேவையாளர் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டம்.

(5) 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்.

4. 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் (திருத்தச்) சட்டம் xxxvi

5. 1990 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமநலச்சேவைகள் (திருத்தச்) சட்டம் xxxviii

6. 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம் xxxxi

7. 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம் xxxxii

8. 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டம் xxxxvi

9. 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம் Lii

10, 1990 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட் டரசிறை (திருத்தச்) சட்டம் Lxviii

11. 1990 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஒதுக்கீடு (திருத்தச்) சட்டம் Lxxxii

12. 1990 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம் Lxxxiii

13. 1990 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறை (திருத்தச்) சட்டம் Lvxxvii

14. 1990 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் Cxviii

15. 1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம் Cxxvi

16. 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம் Cxxxv

17. 1990 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் CLv

# 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*(1990, மார்ச் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

**பணம் வழங்கும் நிறுவனங்களினால் தனிசு அறவிடப்படுதல் தொடர்பிலான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது, 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## வழக்குத் தொடுத்தல்

2. (1) (இதனகத்துப்பின்னர் 'நிறுவனம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடன் வழங்கும் நிறுவனம் ஒன்று, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அதற்கு வருமதியான தனிசு எதனையும் இச்சட்டத்தினால் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறையின் நியதிகளின்படி எந்த நீதிமன்றத்தின் உள்ளூர் எல்லையின் ஆட்சியெல்லைக்குள் :—

(அ) ஒரு திறத்துப் பிரதிவாதி வசிக்கிறாரோ; அல்லது

(ஆ) வழக்கிற்கான காரணம் எழும்; அல்லது

(இ) வினைப்படுத்தத் தேடப்படும் ஒப்பந்தம் செய்யப்பட்ட, மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்கொன்றின் மூலம் அறவிடப்படலாம்.

(2) எக்கடனில் கடனாக வழங்கப்பட்ட அல்லது முற்பணமளிக்கப்பட்ட முதலானது ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறைவாக இருக்கின்றதோ, அக்கடனை அறவிடுவதற்காக, இச்சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறையின் நியதிகளின்படி நிறுவனமொன்றினால் வழக்கெதுவும் தொடுக்கப்படலாகாது.

3. இச்சட்டத்தின் கீழான வழக்கொன்று, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் பிராது ஒன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் தொடுக்கப்படுதல் வேண்டும்.

4. (1) வழக்குத் தொடுக்கின்ற நிறுவனமானது, பிராதைச் சமர்ப்பித்ததன் மேல், கோரப்பட்ட பணத்தொகையானது எதிராளியிடமிருந்து நிறுவனத்துக்கு நீதியாக வருமதியாயிருக்கின்றதென்ற பயன்படச் சத்தியக் கடதாசி

யொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், எச்சாசனத்தின்மீது உடன்படிக்கையின்மீது, அல்லது ஆவணத்தின்மீது நிறுவனத்தினால் வழக்குத் தொடரப்படுகிறதோ அல்லது நிறுவனம் தங்கியிருக்கிறதோ அதை மேலதிகமாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சாசனம், உடன்படிக்கை அல்லது ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு. (அத்தகைய சாசனம், உடன்படிக்கை அல்லது ஆவணம் மீது முத்திரையச்சிடப்பட வேண்டுமெனச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து), அதன்மீது சரியாக முத்திரையச்சிடப் பட்டிருக்கிறது எனவும், அத்துடன் அதன் வெளித் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடும்போது, அதில் ஏதேனும் மாற்றம் அல்லது அழித்தல் அல்லது வேறு விடயம் இருத்தல் காரணமாக அது ஐயத்துக்குட்பட்டதல்லதெனவும் அல்லது கால விதிப்பினால் தடை செய்யப்பட வேண்டியதொன்றல்ல என நீதிமன்றத்துக்குத் தோன்றினால், நீதிமன்றமானது (4) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சத்தியக் கடுதாசியின் உறுதிக்கூற்றுக்களையிட்டு திருப்திப்படுத்துமிடத்து, பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையை விஞ்சாத தொகையொன்றை கொடுப்பனவுத் தேதி வரையிலான வட்டியுடனும், அத்துடன் நைசைத் தீர்வையை இடுகின்ற நேரத்தில் நீதிமன்றம் அனுமதியளிக்கக் கூடியவாறான அத்தகைய செலவு தொகைகளுடனும், நீதிமன்றத்தினால் வேண்டப்பட்டு, நீதிமன்றத்தினால் தகுந்தவரெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிறுவனங்களுடனும், பணத்தொகையொன்றினைச் செலுத்துமாறு, இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் நைசைத் தீர்வொன்றினைப் பதிதல் வேண்டும் என்பதுடன், நைசைத் தீர்வானது, இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு எதிராளிடம் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) நைசைத் தீர்வைக்கு எதிராக, காரணம் எதுவும் இருந்தால் அதைக் காட்டி எதிராளி எத்தேதியன்று சமூகமளிக்க வேண்டுமென நைசைத் தீர்வில் குறிப்பிடப்பட வேண்டுமோ, அத்தேதியானது, எதிராளியின் வதிவிடத்திலிருந்து நீதிமன்றங்களுக்குள்ள தூரத்தைக் கருத்திற்கொண்டு, வசதியாகக் குறிப்பிட முடிகின்றவாறு குறைந்த கால அவகாசமான ஒரு நாளாக இருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நிறுவனத்தினால் கோப்பிடப்பட வேண்டிய சத்தியக்கடதாசியானது அத்தகைய, நிறுவனத்தின் பணிப்பாளர் எவரினாலும் முதன்மை அல்லது அலுவலர் ஒருவரினாலும் அல்லது, நிறுவனத்தின் சார்பில் வழக்கைத் தொடுத்து நடாத்துவதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட சட்டத்தரணியினாலும் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன், சத்தியக்கடதாசியானது, வழக்குகளுக்கான காரணத்தின் நிகழ்வுகள் பற்றிச் சொந்த அறிவுள்ள அத்தகைய ஆளினால் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய ஆள், தமது சத்தியக் கடதாசியில் அதிலுள்ள விடயங்கள் பற்றித் தமக்குள்ள சொந்த அறிவின் பிரகாரம் தாம் வாக்குமூலம் கொடுப்பதாகச் சத்தியம் செய்தல் வேண்டும் அல்லது உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன், நீதிபதியின் தற்றுணிபின் பேரில், அதன் விடயப் பொருள் பற்றி விசாரணை செய்யப்படுதலுக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) நிறுவனம், பின்வருவனவற்றைப் பிராதுடன் சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சத்தியக் கடதாசி அத்துடன் சாசனம், உடன்படிக்கை அல்லது ஆவணம்;

(ஆ) நைசைத் தீர்வின் வரைவு; அத்துடன்

(இ) நைசைத் தீர்வுக்கும் அதைச் சேர்ப்பிப்பதற்கும் வேண்டிய முத்திரைகள்.

5. நாலாம் பிரிவின்கீழ் நைசைத்தீர்வையொன்று பதியப்படுமிடத்து, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 705 அ, 705 ஆ ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், எதிராளிமீது அத்தகைய நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்படுவது தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. (1) இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்படும் வழக்கொன்றில் தோன்றிக் காரணங்காட்டுவதற்கு நீதிமன்றத்திலிருந்து எதிராளி அனுமதி பெற்றாலொழிய தீர்வைக்கெதிராக அவர் தோன்றுதலோ அல்லது காரணம் காட்டுதலோ ஆகாது.

(2) நீதிமன்றமானது, எதிராளி செய்த விண்ணப்பத்தின்மீது—

(அ) நைசைத் தீர்வையில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையை எதிராளி நீதிமன்றத்திற்குச் செலுத்தியதன்மேல்; அல்லது

(ஆ) நைசைத்தீர்வை முடிவான தீர்வையாக ஆக்கப்படும் பட்சத்தில் நைசைத் தீர்வில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையைப் பெறுவதற்கு நியாயமானதும் போதுமானதுமானதென, நீதி மன்றத்துக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்பை எதிராளி கொடுத்தன்மேல்; அல்லது

(இ) விசாரிக்கப்படவேண்டிய பிரச்சினையொன்று அல்லது பிணக்கிலுள்ள வினாவொன்று உள்ளதென நீதிமன்றத்தின் திருப்திக் கேற்பச் சத்தியக்கடதாசியைச் சமர்ப்பித்ததன்மேல், (எதிராளியின் சத்தியக் கடதாசியானது குறிப்பாக வழக்காளியின் உரிமைக் கோரிக்கை பற்றியதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், எதிராளியின் வாதம் பற்றியும், அதற்கு ஆதரவாக எந்நிகழ்வுகள் சார்ந்தனவாக இருக்கின்றன என்பதுபற்றியும் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுதல் வேண்டும்.)

நைசைத் தீர்வுக்கெதிராகத் தோன்றிக் காரணம் காட்டுவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

(3) தோன்றுவதற்கும் காரணம் காட்டுவதற்கும் அத்தகைய அனுமதி பெற எதிராளி தவறுகின்றவிடத்து நீதிமன்றம் நைசைத் தீர்வையை முடிவான தீர்வையாக ஆக்குதல் வேண்டும் என்பதுடன், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 389 ஆம் பிரிவு அத்தகைய கட்டளைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இந்நோக்கத்துக்காக, நீதிபதியானவர், நைசைத் தீர்வையின் மீது ''நைசைத் தீர்வையானது, முடிவான தீர்வையாக்கப்பட்டது'' என்ற சொற்களை (அல்லது அதே பயன்தரக்கூடிய சொற்களை) புறக்குறிப்பிட்டு, தேதியிட்டு, அத்தகைய புறக்குறிப்பில் ஒப்பமிடுதல் வேண்டும்.

7. எதிராளியானவர், அவ்வாறு தோன்றிக் காரணம் காட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டால், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 387 ஆம், 388 ஆம், 389 ஆம், 390 ஆம் அத்துடன் 391 ஆம் பிரிவுகள், வழக்கு விசாரணைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

8. இச்சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கை எதிலும், பிராதுடன் நீதி மன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் அல்லது எச்சாசனத்தின்மீது, உடன்படிக்கைமீது அல்லது வேறு ஆவணங்களின் மீது வழக்குத் தொடரப்படுகின்றதோ, அச்சா தனத்தை, உடன்படிக்கையை அல்லது வேறு ஆவணங்களை நீதிமன்றத்தின் அலுவலர் ஒருவரிடம் உடனடியாக ஒப்படைக்கும்படி நீதிமன்றம் கட்டளை யிடலாம், அத்துடன் அதற்கான செலவு தொகைகளுக்கான பிணைப்பொறுப்பை நிறுவனம் அளிக்கும்வரை எல்லா வழக்கு நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கு மாறு மேலும் கட்டளையிடலாம்.

9. ஏற்கமறுக்கப்பட்ட மாற்றுண்டியல் ஒன்றை அல்லது வாக்குறுதிப்பத்திரம் ஒன்றை நிறுவனம் வைத்திருக்குமிடத்து, ஏற்றுக்கொள்ளாமைக்காக அல்லது கொடுப்பனவு செய்யாமைக்காக, அதன் மீது குறிப்புச் செய்வதில் உறப்பட்ட செலவுகளை அறவிடுவதற்காக அல்லது அத்தகைய ஏற்க மறுத்தல் காரண மாக வேறுவகையாக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிறுவனம் அத்தகைய உண் டியலில் பத்திரத்தின் தொகையை அறவிடுவதற்காக கொண்டிருக்கும் அதே நிவாரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10. இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்படக் கூடிய விடத்து, நைசைத் தீர்வுக்கு எதிராகத் தோன்றிக் காரணம் காட்டுவதற்கு எவ்வழக்குகளில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதோ, அவ்வழக்குகள் பற்றிய விசேட விசாரணை இடாப்பொன்று வைத்திருக்கப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய நீதிமன்றத்தின் விதி எதுவும் அல்லது நடைமுறை எதுவும் அதற்கு முரணாக இருப்பது எவ்வாறு இருப்பினும், திறத்தவர்களுக்கு விசாரணைத் தேதி பற்றி நியாயமான அறிவித்தல் கொடுத்த பின்னர், அத்தகைய வழக்குகள் விரைவில் கையுதிர்க்கப்படுவதை வசதியாகச் செய்யக்கூடியவாறுன அத்தகைய நாட்களில் விசாரிக்கப்படுவதற்காக அவை நிரலிடப்படுவதற்குக் கட்டளையிடுதல் அத்தகைய நீதிமன்றத்துக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

11. போதுமானதல்லாத ஏதுக்களின் மீது நைசைத் தீர்வை பெறப் பட்டது என நீதிமன்றத்துக்குத் தோன்றினால், அல்லது நைசைத் தீர்வை யொன்று பதியப்பட்ட பின்னர் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு, தவறுகை மூலமோ அல்லது வேறு விதமாகவோ நைசைத் தீர்வையானது விலக்கப்பட்டு, அத்துடன் நைசைத் தீர்வை பதியப்படுவதற்கு நியாயமான ஏது எதுவும் இருக்கு வில்லையென நீதிமன்றத்துக்குத் தோன்றினால், நீதிமன்றமானது, எத்திறத் தவருக்கு எதிராக நைசைத் தீர்வை பதியப்பட்டதோ அத்திறத்தவர் விண்ணப் பம் செய்வதன்மேல், அதே வழக்கில் நைசைத் தீர்வைபெற்ற நிறுவனத்துக்

கெதிராக, நைசைத் தீர்வை பதியப்பட்டதன் மூலம் அத்தகைய திறத்தவருக்கு உண்டான செலவுக்கு அல்லது ஊறுக்கு நியாயமான நஷ்ட ஈடென அது கருது கின்ற அத்தகைய பணத்தொகையை அளிக்கலாம், அத்துடன், இப்பிரிவின் கீழான அளிப்பு ஒன்று, நைசைத் தீர்வையைப் பதிதல் தொடர்பான நட்டஈட்டுக் கான ஏதேனும் வழக்கைத் தடை செய்தல் வேண்டும்.

*12.* நைசைத் தீர்வையைப் பின்பற்றி எதிராளி நீதிமன்றத்தில் தோன்றித் தீர்வைக்கெதிராக ஆட்சேபனை எழுப்பாமல் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனி சைத் தவணை முறைகளில் ஒழித்துக்கட்ட வேண்டுகின்ற விடத்து, நீதிமன்ற மானது, பதிவேட்டில் இந்நிகழ்வு பற்றிக் குறித்தல் வேண்டு மென்பதுடன், அதற்கான எதிராளியின் கையொப்பத்தைப் பெறுதலும் வேண்டும். அதன் பின்னர், நீதிமன்றமானது, தீர்வையை முற்றுனதாக்குதல் வேண்டுமென்பதுடன் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 408 ஆம் பிரிவின் நியதி களின்படி வழக்குத் தொடரப்பட்ட தனிசை ஒழித்துக்கட்டுவதற்கான தவணை முறைகள் பற்றியதான தீர்த்துவைத்தல் நியதிகளைப் பதிதலும் வேண்டும். அத்தகைய தீர்த்து வைத்தலானது, தீர்த்துவைத்தல் நியதிகள் எவற்றையும் மீறி எதிராளி செயலாற்றினாலொழிய, வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்துதலின் நிறுத்தி வைப்பு ஒன்றாக நடைமுறையிலிருத்தல் வேண்டும். எதிராளி அவ்வாறு மீறி நடந்தால் தீர்வையை நிறைவேற்றுவதற்கு நிறுவனம் உரித்துடையதாதல் வேண்டும்.

## பாகம் II

### நிறைவேற்றுதல் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்

*13.* நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கு அமைய, இச்சட்டத்தின் கீழ் தொடுக் கப்பட்ட வழக்கொன்றில் பதியப்பட்ட நைசைத் தீர்வையொன்று முற்றான தீர்வையாக ஆக்கப்படுமிடத்து, அது குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 225 (3) ஆம் பிரிவின் நியதிகளின்படி முறையாகப் பிசுக்காலுக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று எழுத்தாணையொன்றாகக் கருதப்படல் வேண்டும். அத்துடன் எழுத்தாணையை நிறைவேற்றுவதற்குக் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதத்தில் அதை நிறை வேற்றுவது பிசுக்காலின் கடமையாதல் வேண்டும்.

*14. (1)* பதினைந்தாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எழுத்தாணை ஒன்றை நிறைவேற்றும்போது பிசுக்கால் ஆளெவரினாலும் தடுக்கப்பட்டால், பிசுக்கால், அத்தகைய தடுத்தல் பற்றி நீதிமன்றத்துக்கு அறிவித்தல் வேண்டும், அத்துடன் நீதிமன்றமானது அதன்மேல் அத்தகைய தடுத்தலினால் எழுந்த நீதிமன்ற அவமதிப்புக்காக அவர் ஏன் தண்டிக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு தடுத்த ஆளைத் தேவைப் படுத்துகின்ற அறிவித்த லொன்றை அவருக்கு எதிராக வழங்குதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் எழுத்தாணை ஒன்றை நிறைவேற்றும் போது பிசுக்காலைத் தடுக்கின்ற ஆளெவரும், நீதிமன்ற அவமதிப்புக்கான குற்ற வாளி ஆவார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், கைப்பற்றப்பட

வேண்டிய ஆதனமானது தீர்ப்புப்பெற்ற கடனாளி தவிர்ந்த வேறோர் ஆளுக்குச் சொந்தமானது என அவர் எண்பித்தாலொழிய, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தினாலும் (101 ஆம் அத்தியாய மான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினாலும் நீதிமன்ற அவம திப்புக்காகவென விதித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) பிசுக்காலை தடுக்கின்ற ஆள் நீதிமன்றத்தில் தோன்றி பிசுக்காலி னால் கைப்பற்றப்பட வேண்டிய ஆதனமானது தீர்ப்புப் பெற்ற கடனாளி தவிர்ந்த ஆளெவருக்காக அல்லது அத்தகைய தீர்ப்புப் பெற்ற கடனாளி யின்கீழ் அதை வைத்திருக்கும் ஆளுக்காகத் தம்மால் வைத்திருக்கப்படுகிறது என உரிமைகோரினால், அத்தகைய ஆள் அவரது உரிமைக் கோரிக்கை வெற்றி அளிக்காதவிடத்து, முற்றான தீர்வையை திருப்திப் படுத்துவதற்காக பிணைப் பொறுப்பு வழங்குமாறு அழைக்கப்படுதல் வேண்டும். அல்லது நீதிமன்றத்தின் தற்றுணிபின்பேரில், உரிமைக் கோரிக்கை விசாரணை முடிவுறும் வரை கைப்பற்றப் பட வேண்டிய ஆதனமானது ஆக்கபூர்வமான பிசுக்கால் கட்டுக்காவலில் இருக்கும் என்பதற்கான பொறுப்பொன்றினைக் கொடுப்பதற்கு அத்தகைய ஆள் அனு மதிக்கப்படலாம்.

15. (1) இச்சட்டத்தின் கீழ் வழக்கொன்று தொடுக்கப்படும் போதெல்லாம் அது நீதிமன்றத்தினால் பேணப்பட்டுவரும் விசேட இடாப்பொன்றில் இச்சட்டத் திற்கான 2 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் பதியப்படல் வேண்டும்.

(2) நைசைத் தீர்வை வழங்கப்பட்டபின்னர், எதிராளி அல்லது அவரது அக்கறையுள்ள பிரதிநிதி அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்கள் எவற் றையும் பராதீனப்படுத்துமிடத்து அல்லது எத்தன்மைத்தான எவ்விதத்திலும் அவற்றை வேறுவிதமாகக் கையுதிர்க்குமிடத்து, அத்தகைய பராதீனப்படுத்த லானது வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தில் எவ்வலுவோ அல்லது பயனோ உள்ளதாதல் ஆகாது. அத்தகைய ஆதனமானது எத்தன்மைக்காக எவரிடமும் இருந்தாலும் அது கைப்பற்றப்படுவதற்கு உரிய தாதல் வேண்டும்.

ஆயின், மேலும், அத்தகைய பராதீனப்படுத்தலானது வழக்கானது தள்ளு படி செய்யப்பட்டால் அல்லது நைசைத் தீர்வை விலக்கப்பட்டால் செல்லுபடி யானதாதல் வேண்டும்.

ஆயின், மேலும் அத்தகைய பராதீனப்படுத்தல், பராதீனப்படுத்தப்பட்ட அத்தகைய ஆதனத்தின் கைமாற்றப்படாதவாறான அத்தகைய ஆதனம் தொடர்பில் மட்டும் முற்றான தீர்வை திருப்திப்படுத்தப்பட்டும் அத்துடன் முற்றான தீர்வை திருப்திப்படுத்தப்படுதலில் ஏற்புடைத்தாக்கப்பட்டு இருப்பின் செல்லுபடியானதாதலும் வேண்டும்.

ஆயின், மேலும் இரண்டாம் உட்பிரிவானது கொள்வனவுப் பணம் செலுத் தப்பட்டபோதோ அல்லது உரித்துமாற்றல் நிறைவேற்றப்பட்ட போதோ நைசைத் தீர்வை பற்றிய அறிவித்தல் இல்லாமல் பிரதிபயனுக்காக நன்னோக்கத்துடன் அத்தகைய ஆதனத்தை பெற்றுக்கொண்ட பராதீனப்படுத்தப்பட்ட ஒருவரிடம் அல்லது அத்தகைய பராதீனப்படுத்தப்பட்ட ஒருவரிடம் இருந்து இன்னொரு

பராதீனப்படுத்தப்பட்ட ஒருவருக்கு வந்தடைந்த ஆதனத்திற்கு ஏற்புடைத்தாதல் ஆகாது, பிரதிபயனுக்கான நன்னோக்குடன் பெற்றதென்ற நிகழ்வுகளை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய பராதீனப் படுத்தப்பட்டவர் மீதாதல் வேண்டும்.

(3) நீதிமன்றப்பதிவாளர், இப்பிரிவின் கீழ் பேணப்பட வேண்டிய இடாப்புடன் சேர்த்து இச்சட்டத்தின்கீழ் எவ்வெதிராளிகளுக்கு எதிராக வழக்குகள் கோப்பிடப்பட்டிருகின்றனவோ அவ்வெதிராளிகளின் பெயர்ப்பட்டியல் ஒன்றையும் பேணுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய பட்டியலானது அகரவரிசை ஒழுங்கில் இருத்தல் வேண்டும்.

(4) அத்தகைய இடாப்பும் அட்டவணையும் பொதுமக்கள் பார்வைக்கு விடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றில் உள்ள பதிவுகள் பொது மக்களுக்கு முதற்றோற்ற அறிவித்தலாக அமைதலும் வேண்டும்.

(5) எத்தகையவராலும் கைப்பற்றப்பட்ட ஆதனத்திற்காக செய்யப்பட்ட எல்லா உரிமைக்கோரிக்கைகளும் அந்த வழக்கில் கையுதிர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உரிமைக்கோரிக்கை மீதான முடிபு, கைப்பற்றப்பட்ட ஏதேனும் ஆதனத்தை மீளப்பெறுவதற்கு அல்லது அத்தகைய ஆதனத்திற்கான ஏதேனும் உரிமையை நிறுவுவதற்கு அல்லது நிறுவனத்திற்குச் சாதகமான தீர்வையை நிறைவேற்றுவதில் விற்பனை செய்யப்படுவதற்குப் பொறுப்பானதாக அதனை வெளிப்படுத்துவிப்பதற்கு வேறு ஏதேனும் வழக்கைத்தொடர்வதற்கான தடையொன்றாதலும் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவிலுள்ள எதுவும், பணம் அல்லது நாணயத்தாள்கள் அவற்றின் புழக்கத்தில், நல்லெண்ணத்துடன் கொண்டிருக்கின்ற எவரைச் சென்றடைந்துள்ளனவோ அவரது கையிலுள்ள பணத்திற்கு அல்லது நாணயந் தாள்களுக்கு அல்லது பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் கொண்டிருக்கின்றவரின் கையிலுள்ள கைமாற்றத்தகு சாதனங்களுக்கு ஏற்புடையதாக மாட்டாது அல்லது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுகளை அல்லது எந்த உரித்தாவணத்தின் மூலம் அது தொடர்புபடுத்தும் பொருட்களின் சொத்தாண்மை புறக்குறிப்பினால் அல்லது ஒப்படைப்பினால் சட்டப்படி கைமாறுகின்றதோ அந்த ஏதேனும் உரித்தாவணத்திற்குப் பிரதிபயனாக நல்லெண்ணத்துடன் கொண்டிருக்கின்றவரான எவரது உரிமைகளை அல்லது ஒரு தனிசு அல்லது பொறுப்பு எந்த ஆளுக்கு மாற்றப்படுகின்றதோ அந்த ஆளின் பொறுப்பை அல்லது நியதிச்சட்டத்தின் மூலம் அல்லது அவரது உரித்திலுள்ள பின்னுரிமையாளரால் இலதாக்கற்கரியதாக வெளிப்படுத்தப்பட்ட உரித்தொன்றின் கீழ் ஆதனத்தைக் கொண்டிருக்கின்ற ஆளொருவரின் உரிமையைப் பாதிப்பதாக பொருள் கொள்ளப்படுதலாகாது.

## பாகம் III

### மேன்முறையீடுகள் பற்றியது

16. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச்சட்டத்தில் 756 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு, அதன் இறுதியில் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

''ஆயின், எவ்வாறாயினும், 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தனிசு அறவிடுதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கின் நெறிமுறையில் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை தொடர்பில் மேன் முறையீடு செய்வதற்குரிய அனுமதிக்கான விண்ணப்பமொன்றில், மேன்முறை யீட்டு நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலன்றி மேன்முறையீடு செய்வதற் கான அனுமதி வழங்கப்பட்டவிடத்து, தொடக்கநிலை நீதிமன்றத்திலுள்ள நடவடிக்கைகள் நிறுத்தப்படுதலாகாது என்பதுடன் மேன்முறையீட்டு நீதிமன்ற மானது, மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியை அது வழங்கத் தீர்மானிக்கு மிடத்து, மேன் முறையீடு தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில், வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுகின்றவாறு வழக்காளி யின் முழு உரிமைக்கோரிக்கையையும் அல்லது அத்தகைய பாகத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பணமாக அல்லது வங்கியாளரொருவரிடமிருந்து உத்தரவாதமொன் றாகப் பணப்பொறுப்பு அளிக்குமாறு மேன்முறையீட்டாளரைக் கோருதலும் வேண்டும்.''

*17.* குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 763 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''ஆயினும் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தனிசு அறவிடுதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதியப்பட்ட தீர்வைகளின் விடயத்தில், தீர்ப்புக் கடனாளியால் வழங்கப்படவேண்டிய பிணைப்பொறுப் பானது, வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளிலும், நீதிமன்றம் தகுந்ததெனக் கருது கின்றவாறு தீர்வையிடப்பட்ட முழுப் பணத்தொகையாக அல்லது அதன் அத்தகைய பாகமாக இருத்தல் வேண்டும்.''

*18.* ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவால் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகிறது:—

''ஆயினும் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தனிசு அறவிடுதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழ் பதியப்பட்ட தீர்வைகளின் விடயத்தில், செய்துகொள்ளப்படவேண்டிய முறியின் தொகையானது வழக்கின் எல்லா விட யங்களிலும், நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுகின்றவாறு தீர்வையிடப்பட்ட பணத் தொகையாக அல்லது அதன் அத்தகைய பாகமாக இருத்தல் வேண்டும்''.

## பாகம் IV

### சிறப்பேற்பாடுகள் பற்றியது

*19.* இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாத நடவடிக்கை முறை பற்றிய ஏதேனும் கருமத்தில் அல்லது பிரச்சினையில், இதே போன்றதொரு கருமத்தில் அல்லது பிரச்சினையில், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறையானது, இச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாதிருப்பின் அத்தகைய நடவடிக்கை முறையானது, நீதிமன்றத்தால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

20. இச்சட்டத்தின் நோக்கத்திற்காக ஏதேனும் குறிப்பிடப்பட்ட வழக்கில் அல்லது ஏதேனும் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படவேண்டிய படிவம் எதுவும் விதித்துரைக்கப்படாதவிடத்து அவ்வழக்கில் அல்லது அந்நோக்கத்திற்கு நீதிமன்றம் அங்கீகரிக்கக்கூடியதான அத்தகைய படிவம் பயன்படுத்தப்படலாம்.

21. கடன்வழங்கு நிறுவனமொன்றுக்குப் போமதியான—

(அ) இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சாத; அல்லது

(ஆ) ஐந்தாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குள் அறவிடற்பாலதான,

கடனொன்றை அறவிடுவதற்கென அத்தகைய கடன்வழங்கு நிறுவனத்தினால் இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளின்படி தொடுக்கப்படும் வழக்கு எதுவும், அத்தகைய கடனின்மீது வட்டியாகக் கோரப்படும் தொகை முதலாகப் போமதியான தொகையை விஞ்சுமாயின், ஏதேனும் நீதிமன்றத்தினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது.

22. தனிசொன்றின் கொடுப்பனவுக்கான தவறுகைக்காக அல்லது தாமதத்துக்காகத் தண்டமொன்றாக அமைகின்ற பணத்தொகை எதுவும், இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறையின் நியதிகளின்படி, அத்தகைய தனிசை அறவிடுவதற்காகத் தொடுக்கப்படும் வழக்கொன்றில் அறவிடப்படற்பாலதாதல் ஆகாது.

23. இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கொன்றில், நீதிமன்றமானது, நைசைத் தீர்வையில் கட்சிக்காரர்களுக்கிடையில் நைசைத் தீர்வையின் தேதிவரை உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வட்டியையும் அத்துடன் நைசைத் தீர்வையின் தேதியிலிருந்து முழுக் கொடுப்பனவுத் தேதிவரை நைசைத் தீர்வையின் கூட்டுமொத்தத் தொகையின்மீது அதே வீதப்படியான வட்டியையும் கட்டளையிடுதல் வேண்டும். கட்சிக்காரர்கள் வட்டி வீதத்தின்மீது உடன்பட்டுக் கொள்ளாதவிடத்து நீதிமன்றமானது நைசைத் தீர்வையில், வழக்குத் தொடரப்பட்ட தேதியிலிருந்து நைசைத் தீர்வையின் தேதிவரை சந்தைவீதப்படியும் அத்துடன் அதன் பின்னர் நைசைத் தீர்வையின் தேதியிலிருந்து முழுக் கொடுப்பனவுத் தேதிவரை கூட்டுமொத்தத் தொகைமீதும் வட்டியைக் கட்டளையிடுதல் வேண்டும்.

## பாகம் V

## நானாவிதம்

24. கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்திலும் (அத்தியாயம் 81) அத்துடன் பணம் கொடுத்தல் கட்டளைச் சட்டத்திலுமுள்ள (அத்தியாயம் 80) எதுவும் நிறுவனமொன்றிற்கு அல்லது அதன் தொடர்பிலும் ஏற்புடையதாதல் ஆகாது.

25. (1) (அ) வங்கியில் நிதியில்லை அல்லது காசோலைக்குப் பணம் கொடுக்கப் போதிய நிதி வங்கியில் இல்லையெனத் தெரிந்துகொண்டு காசோலை ஒன்றை முன்வைக்கின்ற ஆளெவரும்; அல்லது

(ஆ) கொடுப்பனவு செய்வதற்கு வங்கியாளருக்குக் கடப்பாடு இல்லை என்ற காரணத்தினால் அல்லது கொடுப்பனவுக்குத் தடையுத்தரவிடப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் எந்தப் பணத்தொகை கொடுப்பனவு செய்யப்படவில்லையோ அந்தப் பணத்தொகையைச் செலுத்துமாறு அத்தகைய வங்கியாளரொருவருக்குக் கட்டளையொன்றைச் செய்கின்ற ஆளெவரும்; அல்லது

(இ) எந்த ஆள் நிறுவனமொன்றுக்குக் கடன்பட்டிருக்கும் ஒரு தனிசின், கடனின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவாக அத்தகைய ஆளினால் அத்தகைய நிறுவனத்துடன் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து அல்லது வைப்பீடு செய்யப்பட்ட நிதியங்களிலிருந்து அத்தகைய நிறுவனத்துக்குப் பணம் செலுத்துமாறு அத்தகைய நிறுவனத்திற்கு அதிகாரமளித்து அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய கணக்கில் போதியளவு நிதியங்களை இடவில்லையென்ற காரணத்தினால் அல்லது வைப்பீடு செய்யப்பட்ட நிதியங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன என்ற காரணத்தினால் அல்லது அத்தகைய ஆள் வழங்கப்பட்ட அதிகாரத்திற்குத் தடையுத்தரவிடுவதன் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் ஏதேனும் ஒரு காரணத்திற்காக அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக அத்தகைய நிறுவனம் அதற்கு அத்தகைய கொடுப்பனவைச் செய்ய முடியாதிருக்கின்றதோ அத்தகைய ஆளெவரும்; அல்லது

(ஈ) உண்ணாட்டு உண்டியலொன்றை ஏற்றுக்கொண்டு, கொடுப்பனவு செய்யாததன் மூலம் அதனை மதிக்க மறுக்கின்ற ஆளெவரும்,

இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் நீதிவானொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டுவரை நீடிக்கக்கூடியவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் அல்லது பத்தாயிரம் ரூபா, அல்லது எந்தக் காசோலை, கட்டளை, அதிகாரம் அல்லது உண்ணாட்டு உண்டியல் தொடர்பில் குற்றம் புரியப்பட்டதோ அந்தக் காசோலையின், கட்டளையின், அதிகாரத்தின் அல்லது உண்ணாட்டு உண்டியலின் முழுப் பெறுமதியின் பத்து வீதம் அவற்றில் எது கூடியதோ அக்குற்றப்பணத்துடன் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) ''காசோலை'', ''மதிக்கப்படாத'', ''வங்கியாளர்'', ''உண்ணாட்டு உண்டியல்'', ''உண்டியல்'' என்னும் சொல்லமைப்புகள் முறையே (82 ஆம் அத்தியாயமான) செலவாணி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்தப் பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ''நேர்மையற்ற'' என்னும் பதம் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 22 ஆம் பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

26. காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் நிறுவனமொன்று அதற்கு வருமதியாகவுள்ள ஏதேனும் தனிசை அறவிடுவதற்காக வழக்கொன்றைத் தொடர்ந்திருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய

வழக்கு இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறாதிருக்குமிடத்தும் அத்தகைய நிறுவனம் அத்தனிசை மீட்டுப்பெறுவதற்கு இச்சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்வதற்கு உரித்துடையதாதல் வேண்டும்;

ஆயினும், தனிசு மீதான வழக்குக் காரணம் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய வழக்குத் தொடரப்பட்ட தேதியன்றுள்ளவாறு விதித்துரைக்கப்பட்டவிடத்து, இப்பிரிவானது முடிவுறாதிருக்கும் ஏதேனும் வழக்கிற்கு ஏற்புடையதாதலாகாது.

27. (1) நிறுவனமொன்றின் எவரேனும் கடனாளி, நிறுவனத்திற்குக், கொடுக்குமதியான ஏதேனும் தனிசு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வழக்கொன்று தொடரப்படுவதற்கு முன்னர் இறக்குமிடத்து அல்லது நிறுவனமொன்றின் எவரேனும் கடனாளி அல்லது இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கொன்றிற்குக் கட்சிக்காரராக இருக்கின்ற அல்லது கட்சிக்காரரொருவராகின்ற எவரேனும் ஆள் வழக்குத் தொடரப்பட்ட பின்னர் இறக்கின்றவிடத்து அத்துடன் இறுதி விருப்பாவணத்தின் மரண சாதன அதிகாரப் பத்திரம் அளிக்கப்படாமலும் அல்லது மரணமடைந்தவரின் மரணச் சொத்தின் நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படாமலும் இருக்குமிடத்தும் எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளதோ அல்லது தொடரப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி அத்தகைய ஆட்கள் எவரேனுமிருப்பின் அவர்களுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட பின்னரும் அத்துடன் நீதிமன்றம் அவசியமெனக் கருதுகின்ற வாறான அத்தகைய விசாரணையின் பின்னரும், வழக்கின் நோக்கங்களுக்காக மரணமடைந்தவரின் மரணச்சொத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆளொருவரை நியமிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆள் வழக்கிற்குக் கட்சிக்காரரொருவராக ஆக்கப்படலாம் அல்லது சேர்க்கப்படலாம்.

(2) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் நியமனத்தைச் செய்கையில், சுருக்கமுறை விசாரணையின் பின்னர் மரணமடைந்தவரின் இறுதி விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச் சொத்துக்கான மரணச்சொத்து நிருவாகப் பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படலாம் என நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்றதோ அந்த ஆளொருவரைப் பிரதிநிதியாக நியமித்தல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு உரித்துடையவர்களாக உரிமை கோரும் ஆட்களுக்கிடையே பிணக்கொன்று இருக்குமிடத்து, நீதிமன்றமானது, மரணமடைந்தவரின் மரணச்சொத்தின் நலன் கருதி நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி தோதாகின்றவாறான (அவ்வாட்களுள் ஒருவரினதாயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளினதாயினுஞ்சரி) அத்தகைய நியமனத்தைச் செய்தல் வேண்டும்.

28. இருபத்தேழாம் பிரிவின்கீழ் ஏதேனும் நியமனம் செய்யப்படுமிடத்தும் அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் வழக்கிற்குக் கட்சிக்காரரொருவராக இருக்குமிடத்தும் இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கில் ஒவ்வொரு கட்டளையும் நைசைத் தீர்வையும் முற்றான தீர்வையும் அத்துடன் செய்யப்பட்ட விற்பனையும் அல்லது விடயமும் (மரணமடைந்த கடனாளியின் அல்லது மரண

மடைந்த கட்சிக்காரரின் ஆதனத்தின் நிறைவேற்றத்தில் கைப்பற்றுதலும் விற்பனையும் உட்பட) மரணமடைந்தவரின் நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி வழக்கிற்குக் கட்சிக்காரர் ஒருவர் என்றாற்போன்று அதே பயனையுடையதாதல் வேண்டும்.

29. நிறுவனமொன்றின் கடனாளியெவரும் இச்சட்டத்தின்கீழ்த் தொடரப்பட்ட வழக்கொன்றில் முற்றான தீர்வை பதியப்பட்ட பின்னரும் அத்துடன் தீர்வை நிறைவேற்றப்படுதற்கு முன்னரும் ஏதேனும் நேரத்தில் மரணமடைகின்றவிடத்து அல்லது கடனிறுக்க வகையற்றவரென அல்லது சித்தசுவாதீனமற்றவரென நீதித் தீர்ப்புப்பெறுமிடத்து முற்றான தீர்வையை நிறைவேற்றுவதற்கு அல்லது வலியுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது அல்லது எடுக்கப்படின் முறைப்படி நியமிக்கப்பட்ட இறுதி விருப்பாவணத்தின் நிறைவேற்றுநர் அல்லது மரணமடைந்தவரின் மரணச்சொத்தின் நிருவாகி அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது விடயத்துக்கேற்றவாறு கடனிறுக்க வகையற்ற அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளுடைய மரணச்சொத்தின் சாட்டுதல்காரர் அல்லது முகாமையாளர் வழக்கிற்குக் கட்சிக்காரரொருவராக ஆக்கப்பட்டாலன்றி பயனெதுவும் உடையதாதல் ஆகாது.

30. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''தனிசு'' என்பது பொறுப்பாக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி அல்லது கூட்டாகவோ அல்லது தனியாகவோ உரிமை கொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அத்துடன், பணம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் வங்கி, பணம் வழங்குகை, நிதி அல்லது அதனோடு இணைந்த வேறு தொழில் அலுவலை அந்நிறுவனம் செய்யும் போதான கொடுக்கல் வாங்கலிலிருந்து எழுந்துள்ளதென அந்நிறுவனத்தினால் சார்த்தப்படுவதும் அத்துடன் வழக்குத் தொடரப்படும் நேரத்தில் ஆய்ந்தறியப்பட்ட அல்லது ஆய்ந்தறியப்படக்கூடிய பணத்தொகையொன்று என்று பொருள்படும், ஆனால் எழுத்தளவிலில்லாத ஒரு வாக்குறுதியை அல்லது உடன்படிக்கையை உள்ளடக்கமாட்டாது.

''கடன் வழங்கும் நிறுவனம்'' என்பது,

''(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று;

(ஆ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி;

(இ) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி;

(ஈ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய, சேமிப்பு வங்கி;

(உ) (165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்; அத்துடன்

(ஊ) நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கென 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி.''.

என்று பொருள்படும்;

''சந்தை வீதம்'' என்பது அப்போதைய வங்கி வட்டி வீதங்களைக் கவனத்திற் கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் மத்திய வங்கியின் பணச் சபையால் நிர்ணயிக்கப்பட்ட வருடத்திற்குரிய நூற்று வீதம் என்று பொருள்படும்.

''முதன்மை அலுவலர்'' என்பது அத்தகைய நிறுவனத்தின் முகாமையாளர் பதவி வரிசைக்குக் குறையாத பணிப்பாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலர் ஒருவர் என்று பொருள்படுவதுடன், முகாமையாளர் பதவி வரிசைக்குக் குறையாத அத்தகைய பணிப்பாளரினால், செயலாளரினால் அல்லது வேறு அலுவலரினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய நிறுவனத்தின் வேறு எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

31. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

[பிரிவு 4 (27)]

## முதலாம் அட்டவணை

### நைசைத் தீர்வைப் படிவம்

(பெயர்)

இவ்வழக்கு 19———ஆம் ஆண்டு———மாதம்———ஆம் தேதி (நீதிபதியின் பெயரும் பதவியும்)———முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பிராதையும் ஆவணங்களையும் வாசித்து, கோப்பிடப்பட்ட சத்தியக்கடதாசியின் உள்ளடக்கத்தையிட்டுத் திருப்திப்பட்டபின்னர் எதிராளி பணத் தொகை———ரூபாவையும் அத்துடன் (தேதி)———ஆம் தேதியிலிருந்து ———ஆம் தேதி வரை———நூற்றுவீதப்படி வட்டியையும் அதன் பின்

னர் இத்தேதியிலிருந்து கொடுப்பனவு முழுவதும் வழக்குச் செலவுடன் சேர்த்துச் செலுத்தப்படும்வரை அதே வீதப்படி வட்டியையும் வழக்காளிக்குச் செலுத்த வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டுத் தீர்வையிடப்படுகிறது. (தீர்வையானது அசைவற்ற ஆதனத்தை ஒப்படைக்கப்படுவதற்காகவாயின் ஆதனத்தை விவரிக் கவும்), (நிவாரணம் பணமோ அல்லது அசைவற்ற சொத்தோ அல்லது வேறு ஏதேனுமாயின் நிவாரணத்தைக் குறிப்பிடவும்). ஆதலால்,வழக்காளி நீதிமன்றத் தின் இந்தத் தீர்வையின் மூலம் சொல்லப்பட்ட—————என்பவருக்கு எதிராக அறவிட்டுள்ள பணத்தொகை—————ரூபாவை விதிப்பதற்கும் மேற்கூறப்பட்ட —————என்பவரின் வீடுகளையும், காணிகளையும் பொருட்களையும், தனிசு களையும், வரவுகளையும் கைப்பற்றுவதன் மூலமும் அவசியமானால் அவற்றை விற்பனை செய்வதன் மூலமும், இவற்றினின்று பெறுவதற்கும் அத்துடன் இந்த பின் முற்றுகுந் தீர்வையானது முற்றுக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் அல்லது இந்நீதிமன்றம் அனுமதிக்க வேண்டியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத் திற்குள் அப்பணத்தை இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் வைத்திருக்குமாறும் அத்துடன்—————மாகாணத்தின் பிசுக்கால் ஆதனத்தை முறையே என்ன பணத்தொகைக்கு அல்லது பணத்தொகைகளுக்கு எந்த ஆளுக்கு அல்லது ஆட் களுக்கு விற்பனை செய்துள்ளார் என இந்நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறும் —————மாகாணத்தின் பிசுக்காலுக்கு ஆணையிடுவதற்காகும். அத்துடன் இந்த பின்முற்றுகுந் தீர்வையானது அது முற்றுக்கப்பட்டவிடத்து அத்தகைய நோக்கத் திற்கான பணிப்பாணையொன்றுக அமைதலும் வேண்டும்.

இவை, 19...... ஆம் ஆண்டு .......... மாதம் ..... ஆம் திகதி (நேரம்) ...........மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன் சமுகமளித்து இந்த பின் முற்றாகுந் தீர்வை ஏன் முற்றாக்கப்படுதலாகாது என்பதற்கான காரணம் ஏதுமிருப்பின் அக்காரணத்தைக் காண்பிக்குமாறு எதிராளியான மேலே சொல்லப்பட்ட......... ஆகிய உங்களுக்கு மேலும் கட்டளையிடப்படுகின்றது என்பதுடன் இவை அவ் வாறே உங்களுக்கு ஆணையிடுவதற்குமாகும்.

(ஒப்பம்)......................... (நீதிவானின் பெயரும், பதவியும்) 19..... ஆம் ஆண்டு .................. மாதம்................. ஆம் தேதி.

## இரண்டாம் அட்டவணை

(பிரிவு 17(1))

(பதிவுப் படிவம்)

| வழக்கு இல. | வழக்காளியின் பெயர் | எதிராளியின் பெயர் | உரிமைக் கோரிக்கை | பின்முற்றா குந்தீர்வை (முற்றாக்கப் பட்டதா அல்லது நீக்கப் பட்டதா) | பெறு பேறு | நிறைவு செய்த தேதி | வேறுளவையேனும் விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|

## 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஈடு (திருத்தச்) சட்டம்

*(1990 மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**ஈட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் ஈட்டுச் சட்டத்தின் 46 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:—

46. இப்பிரிவு நடைமுறைக்கு வந்ததன் பின்னர் உருவாக்கப்பட்ட காணி யின் ஏதேனும் ஈட்டின் மீதான அடைமான வழக்கெதிலுமான தீர்வை எதுவும் அத்துடன் அத்தகைய ஏதேனும் ஈட்டின்மீது வருமதியான எவையேனும் பணங் களை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கிலான தீர்வை எதுவும் ஈடு வைக்கப் பட்ட ஆதனம் தவிர்ந்த எத்தன்மைத்தான ஆதனம் எதனையும், ஆதனத்தின் கீழ் வருமதியாகவுள்ளதெனக் காணப்படும் எவையேனும் பணங்களை அறவிடு வதற்காக விற்கப்படவேண்டுமெனக் கட்டளையிடுதலாகாது; அத்துடன் ஈடு வைக்கப்பட்ட ஆதனம் தவிர்ந்த எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் அத்தகைய ஏதேனும் தீர்வையை நிறைவேற்றுகையில் விற்கப்படுதலோ விற்கப்படுவதற்கு ஏதுவாதலோ ஆகாது.

இப்பிரிவில் ''ஈடொன்றின் மேல் வருமதியான பணங்களை அறவிடுவதற் கான வழக்கு'' என்பது வழக்கிற்கான காரணமானது ஈட்டின் காரணமாக எழுவதாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக எழுவதாயினுஞ்சரி ஈடொன்றின் மூலம் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட ஏதேனும் கடனை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கை உள்ளடக்கும்''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் பிரிவானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்ட வாக்கத்தின் 47அ எனும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:—

47அ. (1) எக்கடன் ஒன்றின் கொடுப்பனவின் முதல், ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதோ, அக்கொடுப்பனவுக்காக கடன் வழங்கு நிறுவனம் ஒன்றின் சார்பில் ஈட்டுமுறி ஒன்றை நிறைவேற்றும் நேரத்தில் ஈடு வைப்பவர் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதும் முறியை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசுகளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் முறிக்கான சாட்சிகளைக் கொண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான தனிவேறானதொரு சாதனத்தை நிறைவேற்றுகின்ற விடத்து:—

(அ) ஈடுவைப்பவர் 46 ஆம் பிரிவின் நலனைத் துறக்கின்றார் எனவும் அவ்வாறு துறப்பதன் பயனை நொத்தாரிசுவினால் அவருக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளதெனவும் அவரினால் செய்யப்படும் ஒரு சிறப்பு வெளிப்படுத்துகை; அத்துடன்

(ஆ) அத்தகைய துறத்தலின் பயனை ஈடுவைப்பவருக்குத் தாம் விளங்கப் படுத்தியுள்ளார் என்னும் பொருள்பட நொத்தாரிசுவினுல் கையொப்பமிடப்பட்ட புறக் குறிப்பொன்று,

அப்போது ஈடுவைக்கப்பட்ட ஆதனத்துடன் மேலதிகமாக ஈடுவைத்தவருக்குச் சொந்தமான வேறு ஏதேனும் ஆதனம் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக் கமைவாக ஈட்டின் மீதான வழக்கொன்றிலான தீர்வையின்கீழ் விற்கப்படவேண்டுமெனச் கட்டளையிடப்படுவதற்கும் விற்கப்படுவதற்கும் ஏதுவாதல் வேண்டும் என்பதுடன், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 218 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய வேறு ஆதனத்தின் கைப்பற்றுதலுக்கு அத்துடன் விற்பனைக்கு, ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், ஈடுவைக்கப்பட்ட ஆதனமானது விற்கப்பட்டு அதன் விற்ற வரும்படிகள் தீர்வையைத் திருப்தி செய்வதற்குப் பிரயோகிக்கப்படும் வரை ஈடுவைக்கப்பட்ட ஆதனம் தவிர்ந்த ஈடுவைப்பவரின் ஏதேனும் ஆதனத்தைக் கைப்பற்றுதலுக்கும் விற்றலுக்கும் மன்றாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தனி வேறொரு சாதனம் எவரேனும் ஈடுவைப்பவரால் நிறைவேற்றப்பட வேண்டியவிடத்து, 46 ஆம் பிரிவின் நலனைத் துறந்து விடுவதற்குச் சாதனம் ஏற்பாடு செய்கின்றதெனவும் அத்தகைய துறத்தலின் பயன் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தோடு மேலதிகமாக ஈடுவைப்பவருக்குச் சொந்தமான வேறு ஆதனம் ஈட்டின் மீதான வழக்கொன்றிலான தீர்வையை நிறைவேற்றுகையில் விற்பனை செய்யப்படுவதற்கு ஏதுவாகும் என்பதேயாகும் எனவும் ஈடுவைத்தவருக்கு விளங்கப்படுத்துவது நொத்தாரிசுவின் கடமையாதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேலதிக சாதனத்தின் மீது முத்திரைத் தீர்வை எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது.

(5) கடன் வழங்கு நிறுவனமொன்றின் அலுவலரொருவரால், அத்தாட்சிபடுத்தப்பட்ட 69 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனமொன்றின் மூலம் ஈடானது உருவாக்கப்பட்டுள்ளவிடத்து, அப்போது இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் (3) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அவ்வேற்பாடுகளில் ஈட்டு முறியை அத்தாட்சிப்படுத்துகின்ற நொத்தாரிசு பற்றிய குறிப்பீடு எதுவும் அத்தகைய அலுவலர் பற்றிய குறிப்பீடு ஒன்ருகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில் உள்ள எதுவும் இப்பிரிவு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஈடொன்றின் மீதான வழக்கெதற்கும் ஏற்புடையதாகாது.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக ''கடன் வழங்கு நிறுவனம்'' என்பது:—

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்று என்று;

(ஆ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்று;

(இ) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபி விருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி என்று;

(ஈ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று; அத்துடன்

(உ) 165 ஆம் அத்தியாயமான இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்று.

பொருள்படும்.'

4. 62 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் II அ ஆகப் பயனுறுதலும் வேண்டும்:—

'பாகம் 11அ

**அசைவற்ற ஆதனத்தின் நீதிமன்றக் கட்டளையிலாக் கைப்பற்றல் நிறைவேற்றுகை தத்துவமளிக்கப்படுமிடத்து அறவிடுகைக்கான சிறப்பேற்பாடுகள்**

62அ. தவணை தவறும் பட்சத்தில் குறித்த சில வங்கிகளாலும் வேறு நிறுவனங்களாலும் அசைவற்ற ஆதனத்தின் பிணைப்பொறுப்பின்மீது வழங்கப் பட்ட கடன்களை அறவிடும் நோக்கத்திற்காக, நீதிமன்றக் கட்டளையிலாக் கைப்பற்றல் நிறைவேற்றுகைக்கான தத்துவத்தைப் பிரயோகிப்பதனை அவற்றிற் குத் தத்துவமளிக்கும் எவையேனும் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமன்றி மதிப்புக் குறைப்பன வாக இருத்தலாகாது.

62ஆ. (1) வங்கி அல்லது நிறுவனமொன்று, ஈடுவைக்கப்பட்ட ஆதனத் தினுள் நுழைவதற்கு அல்லது அதனை அத்துடன் முகாமை செய்வதற்கும் ஆளெவருக்கும் அதிகாரமளிப்பதற்குத் தத்துவமளிக்கப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய ஆள், முனையப்பட்டுள்ளதான அல்லது முனையப்படக்கூடியதான

ஏதேனும் முட்டுக்கட்டை அல்லது தடை இருக்கின்றமை காரணமாக, அந்தக் காணியை உடைமையில் எடுத்துக்கொள்ள இயலாதவராக இருக்குமிடத்து அல்லது இயலாதவராக இருப்பாரென்று அஞ்சுகின்றவிடத்தும் அத்தகைய அலுவலரானவர், எந்த இடத்தில் அந்தக் காணி அமைந்திருக்கின்றதோ அந்த இடத்தின் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் நீதிவான் நீதிமன்றத்திற்கு, அதன் சார்பில் விண்ணப்பமொன்றைச் செய்ததன்மேல், அந்தக் காணியின் உடைமையை அவருக்கு ஒப்படைப்பதற்காகப் பிசுக்காலைப் பணிக்கின்றதான, அந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நீதிவான் நீதிமன்றமொன்றினால், (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று பிசுக்காலுக்கு வழங்கப்படுமிடத்து, அவர் அத்தகைய கட்டளையை உடனடியாக நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், கட்டளை நிறைவேற்றப்பட்ட விதம் பற்றி அந்த நீதிமன்றத்திற்கு எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பிசுக்கால் அல்லது அவரின் பணிப்பின்கீழ் செயலாற்றும் எவரேனும் ஆள், எந்தக் காணியை அந்தக் கட்டளை தொடர்புபடுத்துகின்றதோ அந்தக் காணியுள் நுழைவதற்கும், அந்தக் காணியை இருப்பாட்சி செய்கின்றவரான ஆளெவரையும் வெளியேற்றுவதற்கும் அத்துடன் வங்கிக்காக அல்லது நிறுவனத்திற்காக அல்லது வங்கியின் அல்லது நிறுவனத்தின் சார்பில் அந்தக் காணியை உடைமையில் எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரான அலுவலருக்கு அந்தக் காணியின் உடைமையை ஒப்படைப்பதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

62இ. ஈடுவைக்கப்பட்ட காணியைப் பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்து, அத்துடன் கொள்வனவுக்காரரிடம் விற்பனைச் சான்றிதழொன்றை ஒப்படைத்த பின்னர், கொள்வனவுக்காரர் அதனைப் பயனுறு உடமையாக எடுத்துக்கொள்ள முடியாதவிடத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது எந்த இடத்தில் ஆதனம் அமைந்திருக்கின்றதோ அந்த இடத்தில் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்திற்குச் செய்த விண்ணப்பத்தின்மீதும் விற்பனைச் சான்றிதழைக் காண்பித்ததன்மீதும் காணியின் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

62ஈ. பிரிவு 62இ என்பதன் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுருக்கமுறை நடவடிக்கை வாயிலாகச் செய்யப்பட்டு அத்துடன் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் நோக்கத்திற்காகக் கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்கள் மீதும் அதன்மீது நடாத்தப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகள் மீதுமான முத்திரைத் தீர்வைகளும் ஏனைய விதிப்பனவுகளும், அத்தகைய விண்ணப்பமானது தொடர்புறுத்துகின்றதான ஆதனத்தைப் போன்ற அதே பெறுமானமுடைய ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கென மாவட்ட நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட தீர்வையொன்றை நிறைவேற்றுவதற்காகவும், அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான வழக்கு

நடவடிக்கைகளுக்காகவும் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ்ச் செலுத்தப்படற்பால தான அந்த வீதங்களிற் செலுத்தப்படுதல் வேண்டும்.

62உ. ஈடுபெறுநருக்கு விற்பனைசெய்யத் தத்துவமளிக்கின்ற சட்டத்தைப் பின்பற்றி ஏதேனும் அசைவற்ற ஆதனமானது, கடனாளியின் தனிவேறான உரித்தொன்றின்கீழ் அல்லது ஈட்டுக்கு முன்பு, முறையாக நிறைவேற்றப்பட்டு, முறையாகப் பதிவுசெய்யப்பட்ட சாதனமொன்றின்மூலம் ஈட்டுக்குமுன்பு, கடனாளியால் உருவாக்கப்பட்ட உரித்தொன்றின்கீழ், ஆளொருவரின் உடைமையில் அல்லது இருப்பாட்சியில் இருக்கின்றவிடத்து, அத்தகைய முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் கொள்வனவுகாரர், அத்தகைய அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைத்ததற்கான கட்டளையொன்றிற்கு உரித்துடையவராகார்.

62ஊ. முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம், வங்கிக்கு அல்லது நிறுவனத்திற்கு அவ்வாதனம் ஈடுவைக்கப்பட்டதைத் தொடர்ந்து கடனாளியின் அல்லது அவரது சார்பில் வேறெவரேனும் ஆளின், அல்லது கடனாளியால் உருவாக்கப்பட்ட உரித்தொன்றின்கீழ் உரிமை கோரும் வேறோர் ஆளின் இருப்பாட்சியில் இருக்கின்ற விடத்து, மாவட்ட நீதிமன்றமானது கொள்வனவுகாரரை அல்லது அவரது சார்பில் உடைமையைப் பெறுவதற்கென அவர் நியமிக்கக்கூடிய வேறெவரேனும் ஆளை ஆதனத்தின் உடைமையில் வைப்பதன்மூலம் ஒப்படைப்பைச் செய்யுமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

62எ. (1) ஈடு பெறுநருக்குத் தத்துவமளிக்கும் சட்டத்தினைப் பின்பற்றி விற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஈடு நிறைவேற்றப்பட்ட தேதிக்குமுன்னர் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பயனைக் கொண்டு அதனை இருப்பாட்சி செய்வதற்கு உரித்துடைய வாடகைக் குடியிருப்பாளர் ஒருவரின் அல்லது வேறு ஆளின் இருப்பாட்சியில் இருக்கின்றவிடத்து ஆனால் அச்செயற்கோவை முறையாகப் பதிவுசெய்யப்படாதவிடத்து பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) (1) ஈடு பெறுநர் அவ்வாடகைக் குடியிருப்பாளருக்கு அல்லது இருப்பாட்சியிலுள்ள ஆளுக்கு, காணியின் பெயர், முறி பதிவு செய்யப்பட்ட தொகுதியும் பக்கமும் என்பன பற்றிய பூரண விபரங்களுடன் தமது சார்பில் ஈடு நிறைவேற்றப்பட்டமை பற்றிய அறிவித்தலை அது நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்துக்குள்ளாகக் கொடுத்திருந்து அவ்வாடகைக் குடியிருப்பாளர் அல்லது இருப்பாட்சியிலுள்ள வேறு ஆள் அத்தகைய அறிவித்தலைப் பெற்ற ஒரு மாத காலத்துக்குள்ளாக அறிவித்தலைப் போன்ற அதே தொகுதியிலும் பக்கத்திலும் இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் தரப்பட்ட பொருளளவில் 6 ஆம் இலக்கப் படிவத்திலான ஆவணம் ஒன்றைப் பதிவுசெய்வதற்குத் தவறினல், அப்போது நீதிமன்றமானது கொள்வனைகாரரை அல்லது அவரது சார்பில் உடைமையைப் பெறுவதற்கு அவர் நியமிக்கக்கூடிய

வேறு எவரேனும் ஆளை உடைமையில் வைப்பதன்மூலம் உடைமையை ஒப்படைக்குமாறு கட்டளையாக்குதல் வேண்டும்.

(2) பந்தி (அ) என்பதன்கீழ் கொள்வனைகளுள் அல்லது வேறு ஆள் உடைமையில் வைக்கப்பட்டதன் விளைவாக இருப்பாட்சியில் உள்ள வாடகைக் குடியிருப்பாளர் அல்லது ஆள் உடைமையை இழந்துள்ளவிடத்து, வாடகைக் குடியிருப்பாண்மை அல்லது இருப்பாண்மைக் காலப்பகுதியைக் கருத்திற்கொண்டு நியாயமான தென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு கட்டளையிடப்பட்ட நட்டஈடு கொள்வனைக்காரர் உடைமையைப் பெற்றதன்பின்னர் மாத்திரம் வாடகைக் குடியிருப்பாளருக்கு அல்லது உடைமையில் உள்ள ஆளுக்கு கொள்வனைக்காரரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) (1) ஈடு பெறுநர், வாடகைக் குடியிருப்பாளர் அல்லது இருப்பாட்சி கொள்பவருக்கு அவர் சார்பாக ஈட்டை நிறைவேற்றுவதற்கான அறிவித்தலை, காணியின் பெயர் மற்றும் முறி பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதி, பக்கம் பற்றிய முழு விபரங்களுடன் அது நிறைவேற்றப்பட்டு ஒரு மாதகாலத்திற்குள் கொடுப்பதுடன், வாடகைக் குடியிருப்பாளர் அல்லது வேறு இருப்பாட்சி கொள்பவர் அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அதே தொகுதி மற்றும் பக்கத்தில் இச்சட்டத்தின்கீழ் 1 ஆம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட 6 ஆம் இலக்கப் படிவத்தில் பொருளளவில் உள்ள ஆவணம் ஒன்றை அவரால் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் முறையாகப் பதிவு செய்து கொள்வதுடன், இந்நிகழ்வை ஈடு பெறுநருக்கு உடனடியாக எழுத்துமூலமாக அறிவிப்பாராயின்; மாவட்ட நீதிமன்றமானது காணியின் துலாம்பரமான இடத்தில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் விற்பனை நடைபெறும் என்பதற்கான அறிவித்தலை ஒட்டுதல் மூலமும் அத்துடன் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் வசதியான ஓர் இடத்தில் கடனாளியின் அக்கறைகள் கொள்வனவுக்காரருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வாடகைக் குடியிருப்பாளருக்கும், அல்லது இருப்பாட்சியாளருக்குப் பிரகடனப்படுத்தல் மூலமும் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும். அத்தகைய பிரகடனத்தின் செலவு நீதிமன்றத்தால் குறிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கொள்வனவுக்காரரால் மீளச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) வாடகைக் குடியிருப்பாளர் அல்லது குடியிருப்பதற்கு உரித்துடைய ஆள் அவரது வாடகைக் குடியிருப்பு உரிமைகள் அல்லது இருப்பாட்சி கொள்வதற்கான உரிமைக்குப் பதிலாக ஒரு பணத்தொகையை நட்டஈடாக ஏற்றுக்கொள்வதற்குச் சம்மதிப்பாராயின், நீதிமன்றமானது கொள்வனவுக்காரரால் நீதிமன்றத்தில் அத்தகைய நட்டஈடு வைப்புச் செய்யப்பட்டபின்பு மட்டுமே, எந்தக் கொள்வனவுக்காரரை அல்லது எவரேனும் ஆளை அவர்

சார்பாக உடைமையைப் பெறுவதற்கு நியமிக்கலாமோ, அந்தக் கொள்வனவுகாரரை அல்லது எவரேனும் ஆளை நியமிப்பதன் மூலம், உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்;

(3) நட்டஈட்டு அளவுத்தொகை, ஆதனம் வியாபாரமாகவோ அல்லது வதிவிட வளவாகவோ இருக்குமிடத்து ஐந்து வருட வாடகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மற்றைய ஆதனத்தின் விடயத்தில் நட்டஈடு வழக்கில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீதிமன்றம் நியாயமானதெனக் கருதும் அத்தகைய தொகையாக இருத்தலும் வேண்டும்.

62ஏ. அறுபத்திரண்டு ஊ என்னும் பிரிவின் கீழான ஒவ்வொரு கட்டளையும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 287 ஆம் பிரிவின் கீழ் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளை ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் 62ஏ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் 288 ஆம் பிரிவின் கீழ் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளை ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும். அத்துடன் கட்டளை ஆக்கப்பட்டதான அதே முறையில் வலுவுக்கிடவும்படலாம்.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணை அதன் முடிவில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"படிவம் 6

காணியில் குடியிருப்பதற்கான உரிமை தொடர்பாக ஆவணத்தைப் பதிவுசெய்வதற்கானதொரு விண்ணப்பம்

காணிப் பதிவாளருக்கு..............

'ஆ' இன் கீழ்க் கொடுக்கப்பட்ட விபரங்களுடைய உடன்படிக்கையின் காரணமாக, காணியில் இருப்பாட்சி கொள்வதற்கான எனது உரிமையை 'அ' இன் கீழ்க் குறித்துரைக்கப்பட்ட பக்கங்களில் பதிவுசெய்வதற்கு அல்லது தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு.............. ஈட்டுச் சட்டத்தின் ........... ஆம் பிரிவின்கீழ் ............................(முழுப்பெயர் மற்றும் விலாசம்) ஆகிய நான் விண்ணப்பிக்கின்றேன்.

(அ) தொகுதி:
பக்கம்:
தொகுதி:
பக்கம்:

(ஆ) அதன் சொந்தக்காரர் ..................... ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்டு ........... ...... திகதியிடப்பட்ட உறுதி அல்லது ஆவணத்தின் காரணமாக அல்லது சொந்தக்காரருடன் வாய் மூலமான

வாடகை உடன்படிக்கையின் காரணமாக இருப்பாட்சி கொள்வதற்கான எனது உரிமை.

பதிவுக் கட்டணம் ரூபா ............ முத்திரைக் கட்டணமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் அல்லது * ''முகவரின் கையொப்பம்.''

* ''முகவர்'' என்பது விண்ணப்பதாரரினால் எழுத்து மூலமாக அனுமதியளிக்கப்பட்ட முகவர் என்று பொருளாகும்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*(1990, மார்ச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கென வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின், 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) (அ) ஆதனத்தின்மீது எவ்வாளுக்கு வங்கியினால் ஏதேனும் கடன் வழங்கப்பட்டிருக்கிறதோ அவ்வாள் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) எவ்வாளொருவருக்கு ஆதனத்தை ஈடுவைத்ததன் மூலம் கடன் எதுவும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருக்கிறதோ, அவ்வாளொருவரின் மரணச் சொத்துக்கான விருப்பாவணத்தின் மரணசாதனத் தத்துவப்பத்திரத்தை அல்லது நிருவாகத் தத்துவப்பத்திரங்களைப் பெற்றிருக்கின்ற ஆள் அல்லது எவ்வாள், சபையினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது அத்தகைய மரணச்சொத்தைப் பிரதிநிதித்துவம் செய்யுமாறு நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ, அவ்வாள் ஒவ்வொருவரும்; அல்லது

(இ) கடன் எதற்கும் பிணைப்பொறுப்பாக வங்கியொன்றில் ஈடு வைக்கப்பட்ட ஆதனமெதிலும், தன்னிச்சையான உரித்து மாற்றம் மூலம் அல்லது சட்டச் செயற்பாட்டின்மூலம் எவ்வாளுக்கு எத்தன்மைத்தானதுமான உரிமை, உரித்து அல்லது அக்கறை சென்றடைகின்றதோ, அவ்வாள் ஒவ்வொருவரும்,

எல்லா அறிவித்தல்களும் அவருக்கு எம்முகவரிக்கு அனுப்பப்படலாமோ அம்முகவரியொன்றினை வங்கியில் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) எவ்வாளுக்கு (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ, அவ்வாள் எவருக்கும் ஒப்படைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் எதுவும், அவ்வுட்பிரிவின்கீழ் அவரினால் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு முகவரியிடப்பட்டு அவ்வாளுக்கு அது பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டால் அவ்வாளுக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதெனக் கருதப்படல் வேண்டும்.

அத்துடன், அத்தகைய சேர்ப்பிப்பானது, கடிதத்தின் சாதாரண நெறி முறையில் எந்நேரத்தில் சேர்ப்பிக்கப்படுமோ, அந்நேரத்திலிருந்து பயனுறுத்தப்பட்டுவிட்டதெனக் கருதப்படல் வேண்டும்;

ஆயின், அத்தகைய ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தமது முகவரியைப் பதிவுசெய்யத் தவறுகின்றவிடத்து, வங்கியானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவருக்கு முகவரியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றை கசெற்றிலும், அத்துடன் ஆகக் குறைந்தது மூன்று நாளிதழ்களிலும் வெளியிடுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய அறிவித்தலானது, எந்நாளன்று கடைசியாக வெளியிடப்பட்டதோ அந்நாளன்று அவருக்கு முறையாகக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

3. ஏதேனும் கடன்மீது, முதல் என்ற வகையாகவோ அல்லது வட்டி என்ற வகையாகவோ அல்லது இவையிரண்டும் என்ற வகையாகவோ வருமதியாக இருக்கும் பணத்தொகை எதனதும் மீள் கொடுப்பனவில் தவறுகை புரியப்படும் போதெல்லாம், கடனின் மீளச் செலுத்தப்படாத முழுப் பகுதி அத்துடன் அது நாள் வரைக்கும் அதன் மீது வருமதியான வட்டி தொடர்பில் தவறுகை புரியப்பட்டு விட்டது எனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் சபையானது அதன் தற்றுணிபின் பேரில் 5 ஆம் அல்லது 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கலாம்.

ஆயின், எவ்வாறாயினும், சபையானது 5 ஆம் பிரிவுக்கு இணங்க ஏதேனும் விடயத்தில் நடவடிக்கை எடுத்திருக்குமிடத்து அல்லது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருக்கின்றவிடத்து, அவ்வாறு செய்வது உசிதமானது அல்லது அவசியமானதென சபை கருதினால், 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தின் மூலம் அவ்விடயத்தில் பின்னர் எந்நேரத்திலும் நடவடிக்கை எடுப்பதிலிருந்து சபையை எதுவும் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

4. எக்கடனுக்காக எந்த அசைவற்ற ஆதனம் பிணைப்பொறுப்பாக வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ளதோ, அக்கடன் தொடர்பில் தவறுகை புரியப்பட்டிருக்கின்றவிடத்து, அக்கடனின் செலுத்தப்படாத முழுப் பகுதியையும், அதன் மீது விற்பனைத் தேதியன்று வரைவருமதியாயிருக்கும் வட்டியையும் அறவிடுவதற்காக, 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்துடன் 11 ஆம் பிரிவின் கீழ் அறவிடற்பாலதான பணங்களுடனும் செலவு தொகைகளுடனும் சேர்த்து சபையானது, எழுத்தில் பதிவீடு செய்யப்பட வேண்டிய தீர்மானத்தின் மூலம், அத்தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆளெவருக்கும் அந்த அசைவற்ற ஆதனம் எதனையும் பகிரங்க ஏலம் மூலம் விற்பதற்கு அதிகாரமளிக்கலாம்.

5. (1) நாலாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபையானது எழுத்தில் பதியப்பட வேண்டிய தீர்மானத்தின் மூலம், எக்கடன் தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ, அக்கடனுக்காகப் பிணைப் பொறுப்பாக வங்கியில் ஈடு வைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்துக்குள் அல்லது அத்தகைய ஆதனம் தொடர்பில் ஏதேனும் கடன் உடன்படிக்கை பற்றிய நியதிகள் மீறப்பட்டுள்ளவிடத்து அவ்வாதனத்துக்குள் புகுந்து உடைமையில் எடுத்து, அதை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும், அத்துடன், ஈடுவைத்தவர், தவறுகை புரியாமல் இருந்திருந்தால் அல்லது அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளை அவர் மீறா

திருந்திருந்தால் அவரினால் பிரயோகிக்கப்பட்டிருக்கக் கூடியளவான அத்தகைய ஆதனத்தின் கட்டுப்பாட்டிலும் முகாமையிலும் உள்ள அதே தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆளெவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

(2) ஏதேனும் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சிக்காக வங்கியிடம் வைக்கப்படும் ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரத் தொகுதியின் அல்லது வேறு அசைவுள்ள ஆதனத்தின் பிணைப் பொறுப்பின் மீது அளிக்கப்பட்ட ஏதேனும் கடன்மீது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகை செலுத்தத் தவறியதாகவுள்ள போதெல்லாம், அல்லது அத்தகைய ஆதனம் தொடர்பில் எவையேனும் கடன் உடன்படிக்கைகளின் நியதிகள் மீறப்படுமிடத்து, எந்தக் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் அத்தகைய பொறித் தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது அசைவுள்ள வேறு ஆதனம் அமைந்துள் ளதோ அந்தக் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியுட் புகுவதற்கும் அதன் உடைமையை எடுப்பதற்கும், அத்துடன் அத்தகைய அசை வற்ற ஆதனம் அடைவு வைக்கப்பட்டிருப்பின் அல்லது ஈடுவைக்கப்பட்டிருப்பின், அத்தகைய பொறுப்பு முயற்சியின் கட்டுப்பாட்டிலும் முகாமையிலும் பிரயோகிக் கப்பட்டிருக்கக்கூடியவாறான அதே தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கும் சபை யானது எழுத்தில் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாளுக்கு அதிகாரமளிக்கலாம்.

6. (1) ஏதேனும் ஆதனம் தொடர்பில் 4 ஆம் பிரிவின் கீழ் சபையின் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், தீர்மானத்தின் நியதி களின்படி பொதுவாக நடவடிக்கை எடுக்கவும் குறிப்பாகப் பின்வருவனவற்றைச் செய்யவும் உரித்துடையவராதல் வேண்டும்:—

(அ) அத்தகைய ஆதனத்தின் விளைவுகளை விற்றல்;

(ஆ) எந்தப் பொறித்தொகுதியின் அல்லது எந்திரத் தொகுதியின் பிணைப் பொறுப்பின் மீது ஏதேனும் கடன் வழங்கப்பட்டு அத்தகைய கடன் தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அப்பொறித்தொகுதியி லிருந்து அல்லது எந்திரத்தொகுதியிலிருந்து முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை விற்றல்;

(இ) அத்தகைய ஆதனத்திலிருந்து வாடகைகளையும், இலாபங்களையும் அல்லது வேறு வருமானத்தையும் பெறுதல்;

(ஈ) அத்தகைய ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதிலும் முகாமை செய்வதிலும் உறப்படும் செலவுகளை அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து செலுத்துதல்;

(உ) அவரது சேவைகளுக்கான ஊதியமாக நிர்ணயிப்பதற்குத் தகுதியா தெனச் சபை கருதக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை (எதுவுமிருப்பின்) அத்தகைய வருமானத்திலிருந்து தனக்கென்று ஒது க்குதல்;

(ஊ) அத்தகைய ஆதனத்தின் மீதான ஈட்டின் கீழ் வங்கிக்கு வருமதியாக வுள்ள எல்லாப் பணங்களும் முழுமையாகச் செலுத்தப்படும் வரை

அல்லது அத்தகைய ஆதனத்தின் உடைமையை விட்டுக்கொடுக்குமாறு (2) ஆம் உட்பிரிவின் கீழ் சபையினால் பணிக்கப்படும் வரை அத்தகைய ஆதனத்தை உடைமையில் வைத்திருத்தல்.

(2) ஏதேனும் ஆதனம் தொடர்பில் 4 ஆம் பிரிவின் கீழ் சபையின் தீர்மானத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும்—

(அ) ஈடுவைத்தவருக்கு, அவரது பராமரிப்புக்காக, சபையானது அதன் தற்றுணிபில் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை (எதுவுமிருப்பின்) அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்;

(ஆ) இதனகத்து முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் ஆதனத்திலிருந்து பெறப்பட்ட எஞ்சியிருக்கும் அத்தகைய வருமானத்தின் மிகுதியை சபை பணிக்கக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் காலாண்டிற்கொருமுறை அல்லது சபையினால் பணிக்கப்பட்டவாறான வேறு வகையில் செலுத்துதல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆதனம் தொடர்பில் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது அவரால் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளினதும் தெளிவானவையும் செம்மையானவையுமான பதிவேடுகளை வைத்திருந்து சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் அவற்றைச் சபைக்கு அளித்தல் வேண்டும்;

(ஈ) சபையினால் பணிக்கப்பட்டவாறான ஈடுவைத்தவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆதனத்தின் உடைமையை விட்டுக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், இதனகத்துப் பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் அவர் வசம் எஞ்சியிருக்கும் அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் ஏதேனும் மிகுதியைச் சபைக்குச் செலுத்துதலும் வேண்டும்.

(3) சபையானது, ஈட்டின் கீழ் வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாப் பணத்தொகைகளும் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ள போது, ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் உடைமையை ஈடுவைத்தவரிடம் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய, ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுத்தலும் வேண்டும்.

7. (1) இரண்டாம் உட்பிரிவில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் தவிர, கடன்பெறுநர் இறந்துவிட்டார், அல்லது கடனுக்காகப் பிணைப் பொறுப்பாக வங்கியில் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் மீதுள்ள எத்தன்மைத்தான உரிமை, உரித்து அல்லது அக்கறை எதுவும் இன்னோராளுக்குத் தன்னிச்சையான உரித்து மாற்றமூலம் அல்லது சட்டச் செயற்பாட்டின்மூலம் சென்றடைந்திருப்பது எவ்வாறிருப்பினும், தவறுகை எதனதும் விடயத்தில் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) கடன் பெறுநர் ஒருவர் இறந்து, அத்துடன் அவரின் மரணச்சொத்துக்கான விருப்பாவணத்தின் மரணசாதனத் தத்துவப்பத்திரம் அல்லது நிருவாகத் தத்துவப்பத்திரங்கள் ஆளெவருக்கும் வழங்கப்பட்டிராதவிடத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது கடன்பெறுநரினால் வங்கியில் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் எம்மாவட்டத்தில் அமைந்துள்ளதோ, அம்மாவட்டத்து மாவட்ட நீதிமன்றம், வங்கியினால் அதற்கென விண்ணப்பம் செய்யப்பட்டதன்மீதும், அத்துடன், நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறாக அத்தகைய ஆட்களுக்கு (எவரும் இருந்தால்) விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் சேர்ப்பித்த பின்னரும், அத்துடன், மரணசாதனத் தத்துவப்பத்திரம் அல்லது நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் வழங்குவதில் மிக்க தாமதமாகின்ற சாத்தியக்கூறு இருக்கின்றதெனத் திருப்திப்பட்டால், இப்பிரிவின் நோக்கங்களுக்காக கடன்பெறுநரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு ஆளொருவரை நியமிக்கலாம்; அத்துடன், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய கடன்பெறுநரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்கு இவ்வுட்பிரிவின்கீழ் ஆளொருவர் நியமிக்கப்பட்டாலொழியவும் நியமிக்கப்படும்வரையும், தவறுகை எதனதும் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

8. ஆதனம் எதனதும் விற்பனைக்கு அதிகாரமளிக்கின்ற 4 ஆம் பிரிவின் கீழான ஒவ்வொரு தீர்மானம் பற்றிய அறிவித்தலும், கசெற்றிலும், அத்துடன், ஆகக் குறைந்தது மூன்று நாளிதழ்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படவேண்டுமென்பதுடன், கடன்பெறுநர் உயிரோடிருந்தால், அவருக்கும் அத்துடன் அவ்வாதனம் தொடர்பில் எவ்வாள் தமது முகவரியை 2 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவுசெய்து கொண்டிருக்கிறாரோ அவ்வாள் ஒவ்வொருவருக்கும், அத்துடன் அவ்வாதனமானது, அரசாங்கத்தின் கீழான குத்தகையொன்றின் கீழுள்ள குத்தகை பெறுநர் ஒருவரின் அக்கறையைக் கொண்டிருக்குமானால், காணி ஆணையாளருக்கும் அத்தகைய அறிவித்தலின் பிரதிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

9. நாலாம் பிரிவின்கீழ்த் தீர்மானம் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு விற்பனை பற்றிய அறிவித்தலின் தேதி, நேரம், அத்துடன் இடம் விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குமுன் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் பிரதிகள்—

(அ) கடன்பெறுநர் உயிரோடிருந்தால் அவருக்கும், 2 ஆம் பிரிவின்கீழ் எவ்வாளுக்கு ஏதேனும் தீர்மானம் பற்றிய அறிவித்தல் அனுப்பப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ, அவ்வொவ்வொரு ஆளுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விற்கப்படவிருக்கும் ஆதனத்தின் மேல் அல்லது அதற்கு அருகாமையில் ஒட்டப்படுதல் வேண்டும்.

10. (1) விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன் எந்நேரத்திலும் 13 ஆம் பிரிவின் கீழ், சபையினால் அறவிடப்படற்பாலதான கடனின் செலுத்தப்படாத பகுதியின் முழுத்தொகையும் செலுத்தப்படற்பாலதான வட்டியுடனும் அத்துடன் பணங்கள் எவையும் இருப்பின் செலவு தொகைகளுடன் அவற்றைச் சேர்த்து சபைக்கு வழங்கப்பட்டால், ஆதனம் விற்கப்படுதலாகாது என்பதுடன்

4 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தைப் பின்பற்றி ஆதனத்தை விற்பதற்கு மேலும் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது.

(2) எத் தவணைப்பணம் தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அத் தவணைப் பணத்தொகையும், அத்துடன் 13 ஆம் பிரிவின் கீழ் சபையினால் அறவிடற்பாலனவான பணங்கள், செலவு தொகை எவையும் இருந்தால் அவையும், விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் சபைக்கு வழங்கப் பட்டால், சபையானது, அதன் தற்றுணிபின்பேரில், ஆதனம் விற்கப்படுதலாகா தெனப் பணிக்கலாம் என்பதுடன் அவ்வாதனத்தை விற்பதற்கு 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தைப் பின்பற்றி மேலும் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப் படுதலும் ஆகாது.

11. சபையானது, ஆதனம் எவ்வங்கியில் ஈடுவைக்கப்பட்டதோ அவ் வங்கி தவிர்ந்த வேறு ஆளெவருக்கும் எம் முதற்கூறு விலைக்குக்கீழ் ஆதனம் விற்கப்படலாகாதோ அம் முதற்கூறு விலையொன்றினை நிர்ணயிக்கலாம்.

12. (1) ஒரே ஆதனத்தின் பிணைப்பொறுப்பின்மீது வங்கியொன்றினால் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கடன்களோ வழங்கப்பட்டு, அத்துடன் அத்தகைய ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கள் மீது வருமதியான பணத்தொகை எதனதும் கொடுப்பனவில் தவறுகை புரியப்பட்டிருக்கும் விடயம் எதிலும், வேறு கடன் அல்லது வேறு எவையேனும் கடன்கள் எவற்றினதும் தொடர்பில் தவறுகை புரியப்பட்டிருக்காதது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன், சபையானது, அத்தகைய விடயம் எதிலும் விடயத்துக்கேற்ப இரண்டோ அல்லது எல்லாக் கடன்கள் தொடர்பில் வங்கிக்கு வருமதியான மொத்தத் தொகையை அறவிடு வதற்கு ஆதனத்தின் விற்பனைக்கு 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தின் மூலம், அதிகாரமளிக்கலாமென்பதுடன் இவ்வேற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(2) மூன்றாம் பிரிவிலிருந்து 15 ஆம் பிரிவு வரையுள்ள எதுவும் (இவ் விரண்டு பிரிவுகளும் உட்பட), வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஈட்டுப் பிணைமுறியொன்றின் மீது வருமதியான தொகையை வங்கியொன்று அறவிடுவதைத் தடைசெய்வதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

13. கடன் எதன்மீதும் வருமதியாயிருக்கின்ற தொகையோடு சேர்த்து, கடன் பெறுநரிடமிருந்து அல்லது அவர் சார்பில் செயலாற்றும் எவரேனும் ஆளிடமிருந்து, சபையானது—

(அ) எவ்வாளுக்குக் கடன் வழங்கப்பட்டதோ, அவ்வாளினால் நிறைவேற் றப்பட்ட ஈட்டுப்பிணைமுறியிலுள்ள கூட்டு ஒப்பந்தத்துக்கு இணங்க, அத்தகைய வங்கியில் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் மீது நிறை வேற்றப்பட்ட ஏதேனும் காப்புறுதிப்பத்திரம் தொடர்பிலான ஏதே னும் குத்தகைக் கட்டுப்பணம் மற்றும் வேறு விதிப்பனவுகள் ஆகிய வற்றின் கொடுப்பனவில், அத்துடன், கடன்பெறுநரினால் நிறைவேற் றப்பட்ட அத்தகைய ஈட்டுப்பிணை முறியிலுள்ள கூட்டு ஒப்பந்தங்

களின்கீழ், வங்கியினால் உறப்பட அதிகாரமளிக்கப்பட்ட வேறு எல்லாச் செலவு தொகைகளினதும் விதிப்பனவுகளினதும் கொடுப்பனவில், வங்கியொன்றினால் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்களையும்;

(ஆ) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை விற்பதற்குச் செய்யப்பட்ட விளம்பரத்துக்கும் அதை விற்பதற்கான செலவுத்தொகைகளையும்;

அறவிடலாம்:

ஆயின், (ஆ) என்னும் பந்தியின்கீழ் உறப்படும் செலவுதொகைகள், விதித்துரைக்கப்படக்கூடியவாறு கடனின் அத்தகைய வீதத்தை விஞ்சுதலாகாது.

14. ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்கப்பட்டால், வங்கியானது 13 ஆம் பிரிவின் கீழ் ஈட்டின்மீது, வருமதியான தொகையையும், அத்துடன் அறவிடற்பாலனவான பணங்களையும் செலவுதொகைகளையும் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து கழித்தபின்னர், எஞ்சியுள்ள மீதத்தை (எதுவும் இருந்தால்), கடன்பெறுநருக்கோ அல்லது கடன் பெறுநருக்குப் போமதியான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளச் சட்டரீதியாக உரித்துள்ள ஆளெவருக்குமோ, கொடுப்பனவு செய்தல் வேண்டும், அல்லது எவ்வாளுக்குப் பணம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென்பதில் வங்கி ஐயப்படுமிடத்து, பணமானது, எம்மாவட்டத்தில் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ளதோ, அம்மாவட்டத்து மாவட்ட நீதிமன்றத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

15. (1) ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்கப்பட்டால், சபையானது, விற்பனைக்கான சான்றிதழொன்றினை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அதன்மேல், கடன்பெறுநருக்கு ஆதனத்தின் மீதுள்ள எல்லா உரிமையும், உரித்தும், அக்கறையும் கொள்வனவுகாரருக்கு உரித்தாதல் வேண்டும்; அதன்பின்னர், வங்கியில் ஆதனம் ஈடுவைக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் ஆக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஆதனத்துக்கு அல்லது அதன்மீது எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனவளிப்பு மூலம் அல்லது அதன்கீழ் உரிமை, உரித்து, அல்லது அக்கறை கோருகின்ற ஆளெவரும், கொள்வனவுகாரருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் எத்தன்மைத்தான எக்காரணத்துக்காகவும் விற்பனையின்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது விற்பனையைச் செல்லாதபடி செய்வதற்கோ அல்லது ஆதனத்துக்கான அல்லது ஆதனத்தில் உள்ள ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையைப் பேணுதற்கோ தகுதி வாய்ந்தவராதலாகாது.

(2) ஏதேனும் ஆதனத்தின் விற்பனை தொடர்பில் சபையினால், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்பமிடப்பட்ட சான்றிதழொன்றானது, அவ்வாதனத்தின் விற்பனை தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளதென்பதற்கான, முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(3) கொள்வனவுகாரர் வங்கியல்லாத வேறோர் ஆளாக இருந்தால், சான்றிதழானது, பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும், அத்துடன் கொள்வனவுகாரர் வங்கியாக இருந்தால், சான்றிதழானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) விற்பனைக்கான சான்றிதழ் ஒவ்வொன்றும், அது அசைவற்ற ஆதனத்தின் உரித்துமாற்றல் என்றாற்போன்று, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவையேனும் பதிவுசெய்தல் மற்றும் வேறு விதிப்பனவுகளுக்கும் முத்திரைத் தீர்வைக்கும் வேறு விதிப்பனவுகளுக்கும் உள்ளாதல் வேண்டும். இவையெல்லாம் கொள்வனவுகாரரினால் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

(5) அரசாங்கத்திலிருந்தான குத்தகையொன்றின் கீழ்க் குத்தகை பெறுநர் ஒருவரின் அக்கறையை விற்கப்பட்ட ஆதனம் கொண்டிருக்குமிடத்து, ஆதனத்தின் கொள்வனவுகாரர் வங்கி தவிர்ந்த வேறோர் ஆளாக இருந்தால், விற்பனைக்கான சான்றிதழானது, காணி ஆணையாளர் அவரது தற்றுணிபின்படி பிரயோகிக்கையில் கொள்வனவுகாரரை அங்கீகரித்திருந்தாலொழிய, சபையினால் ஒப்பமிடப்படுதலாகாது.

(6) அரசாங்கத்திடமிருந்தான குத்தகையொன்றின் கீழான குத்தகை பெறுநர் ஒருவரின் அக்கறையைக் கொள்வனவுகாரருக்கு வழங்க காணி ஆணையாளர் (5) ஆம் உட்பிரிவின்கீழ் மறுக்கும்போதெல்லாம்—

(அ) விற்பனை தொடர்பில் கொள்வனவுகாரரினால் வங்கிக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் சபையினால் அவருக்கு மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்,

(ஆ) அத்தகைய விற்பனைக்கான விளம்பரச் செலவு தொகைகளும் விற்பனையை நடாத்துவதற்கான செலவு தொகைகளும் 13 ஆம் பிரிவின் கீழ் சபையினால் அறவிடற்பாலனவான செலவு தொகைகளெனக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன்

(இ) ஆதனமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மீள விற்கப்படுதல் வேண்டும்.

16. (1) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்படும் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கொள்வனவுகாரர், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு அல்லது எம்மாவட்டத்தில் ஆதனம் அமைந்துள்ளதோ அம் மாவட்டத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மேலும், அத்துடன் அவ்வாதனம் தொடர்பில் 15 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும் விற்பனைச் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் மேலும், அவ்வாதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையொன்றினைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுருக்கமுறை நடவடிக்கை மூலம் செய்யப்படல் வேண்டுமென்பதுடன் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றினதும் நோக்கத்துக்காகக் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்கள் மீதும் அவற்றின்மீது நடாத்தப்படும் எல்லா வழக்கு நடவடிக்கைகள் மீதும், அத்தகைய விண்ணப்பம் எவ்வாதனம் தொடர்பானதோ, அவ்வாதனத்தின் அதே பெறுமதியைக் கொண்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கான மாவட்ட நீதிமன்றமொன்றின் தீர்வையொன்றை நிறை

வேற்றுதல் பெறுவது தொடர்பிலான அல்லது அதன் இடைநேர் விளைவான விண்ணப்பங்கள் மீது, அத்துடன் வழக்கு நடவடிக்கைகள்மீது, அல்லது அப்போதைக்கு வலுவில் இருக்கின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலனவான அவ்வவ்வீதவரிகள் முத்திரைத் தீர்வைகளும் வேறு விதிப்பனவுகளும் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

(3) கடன் பெறுநரின் அல்லது அவரின் சார்பிலான வேறு ஆளின் அல்லது, வங்கியில் ஆதனம் ஈடுவைக்கப்பட்ட பின் கடன் பெறுநரினால் ஆக்கப்பட்ட உரித்தொன்றின்கீழ் உரிமைகோருகின்ற வேறு ஆளின் இருப்பாட்சியிலுள்ள அசைவற்ற ஆதனம் எதுவும், இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்படுமிடத்து, மாவட்ட நீதிமன்றமானது, கொள்வனவுகாரருக்கு அல்லது கொள்வனவுகாரர் சார்பில் உடைமையைப் பெற்றுக்கொள்ள அவர் நியமிக்கக் கூடியவாறான ஆதனத்தை உடைமையில் வைத்திருக்கின்ற அத்தகைய வேறு எவரேனும் ஆளுக்கு ஆதனத்தின் உடைமை ஒப்படைக்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட அசைவற்ற ஆதனமெதுவும், வாடகைக் குடியிருப்பாளர் ஒருவரின், அல்லது அதே ஆதனத்தில் குடியிருக்க உரித்துப் பெற்ற வேறு ஆளின் இருப்பாட்சியில் இருக்குமிடத்து மாவட்ட நீதிமன்றமானது, விற்பனை நடந்துவிட்டது என்பதைப்பற்றிய அறிவித்தலொன்றைச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆதனத்தின் துலாம்பரமான ஏதேனும் இடத்தில் ஒட்டுவதன் மூலம் அத்துடன் குடியிருப்பாளருக்குக் கடன்பெறுநரின் அக்கறையான கொள்வனவுகாரருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்பது பற்றியதான பிரகடனமொன்றை அத்தகைய வசதியான இடத்தில் பறையடிப்பதன்மூலமோ அல்லது வேறு ஏதேனும் வழக்காறு முறையிலோ அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான முறைமூலமோ ஆதன ஒப்படைப்பு செய்யப்பட வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய பிரகடனத்துக்கான செலவு, நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விடயத்திலும், கொள்வனவுகாரரினால் முன்னரே செலுத்தப்படுதலும் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்றவாறு, (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 287 ஆம் அல்லது 288 ஆம் பிரிவின் கீழ் உடைமை ஒப்படைப்புக்கான கட்டளை ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு ஆக்கப்பட்ட கட்டளையொன்று என்றாற்போன்ற விதத்தில் வலுவுக்குக் கொண்டு வரவும்படலாம். அச் சட்டக்கோவையின் எவையேனும் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்துக்காக, கட்டளை கடன் பெறுநர் அத்துடன் கொள்வனவுகாரர் என்பவர்கள் கடன் பெற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்.

17. விற்கப்பட்ட ஆதனம் வங்கியின் சார்பில் கொள்வனவு செய்யப்பட்டிருக்குமிடத்து, சபையானது, அவ்வாதனத்தை மீள விற்பதற்கு முன்னர், எந்நேரத்திலும், எக்கடன் தொடர்பில் ஆதனமானது விற்கப்பட்டதோ, அக்கடன் தொடர்பில், (கைப்பற்றல், விற்பனை ஆகியவற்றுக்கான செலவு தொகைகளை உள்ளடக்குகின்ற) வருமதியான தொகையையும், அத்துடன், ஆண்டொன்றுக்கு விதிக்கப்பட்ட வீதவரியை விஞ்சாத வீதமொன்றில் அதன்மீதான கூட்டு மொத்தத் தொகையின் மீதான வட்டியையும், கடன் பெறுநரோ அல்லது அவரின்

சார்பில் வேறு எவரேனும் ஆளும் செலுத்துகின்றதன்மேல், அப்பயன் கொண்ட புறக்குறிப்பு ஒன்று விற்பனைக்கான சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றில் அத்தகைய புறக்குறிப்பு இடுதல் ஒன்றானது, காணிப் பதிவு காரரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் மேல், இச்சட்டத்தின் கீழான விற்பனை ஒருபோதும் செய்யப்பட்டிருக்கவில்லையென்றாற்போன்று சொல்லப் பட்ட ஆதனத்தைக் கடன் பெறுநருக்கு மீள உரித்தாக்குதல் வேண்டும்.

18. அவ்வாறு விற்கப்பட்ட ஆதனம் வங்கியின் சார்பில் கொள்வனவு செய்யப்பட்டு, அத்துடன், 17 ஆம் பிரிவின்கீழ் விற்பனையானது இல்லாதாக்கப் பட்டிருக்காவிட்டால், சபையானது, எந்நேரத்திலும், மூல விற்பனையின்போது, கொள்வனவுகாரரினால் கொள்ளப்பட்டிருந்திருக்கக் கூடிய எல்லா உரிமையை யும், உரித்தையும், அக்கறையையும், 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ்க் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன் றில் புறக்குறிப்பு இடுவதன்மூலம், ஆதனத்தை மீள விற்பனை செய்து, கொள் வனவுகாரருக்கு உரித்து மாற்றலாம். புறக்குறிப்பானது, மூல விற்பனையின் போது கொள்வனவுகாரருக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றுக்குப் போன்றான அதே முத்திரைத் தீர்வைக்கும், விதிப்பனவுக்கும் உள்ளாகுதல் வேண்டும் என்ப துடன், காணிப்பதிவுகாரரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதும், மேலே கூறப்பட்ட அத்தகைய உரிமையை, உரித்தை, அத்துடன் அக்கறையைக் கொள் வனவுகாரருக்கு உரித்தாக்குதலும் வேண்டும்.

19. இச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றியதான ஏதே னும் விற்பனையில் கடன் ஒன்றைக் கொடுப்பனவு செய்வதில் தவணை தவறி யதற்காக விற்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை வங்கி கொள்வனவு செய்துள்ள தாயின் வங்கியானது கடன், வட்டி, செலவுகள் அத்துடன் செலவு தொகைகள் என்பன வகையாக வங்கிக்குப் போமதியான மொத்தத் தொகையை மேவும் அத்தகைய பணத்தொகை ஒன்றுக்கு அவ்வாதனத்தை மீள விற்பனை செய்ய வங்கியை இயலச் செய்வதற்கு அவசியமான காலப்பகுதியிலும் கூடுதலான ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தல் ஆகாது.

20. வங்கியில் ஈடுவைத்த அசைவற்ற ஆதனம் எதையும், 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம் ஒன்றன்மூலம் விற்பதற்குச் சபையினால் அதிகாரமளிக்கப் பட்ட ஆளொருவரை அத்தகைய விற்பனையைக் கொண்டு நடாத்துதலினின்று நியாயமான காரணமின்றி எதிர்க்கின்ற, தடுக்கின்ற அல்லது தடை செய்கின்ற ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதி வானொருவரின் விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறு ஆண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

21. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களிலும், அவை தொடர்பிலும், ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று

அல்லது, ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவில், அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அதன்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும். எத்தேதியன்று ஒழுங்குவிதியெதுவும் நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்தேதியானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

22. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,—

''வங்கி'' என்பது—

(அ) (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி;

(ஆ) 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி;

(இ) 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கி;

ஆகியவை தவிர்ந்த, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வருகின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று எனப் பொருள்படும் என்பதுடன்,

(165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றை உள்ளடக்கும் எனக் கருதப்படலும் வேண்டும்:—

''சபை'' என்பது, வங்கியொன்று தொடர்பில் வங்கியின் பணிப்பாளர்கள் சபை அல்லது அத்தகைய வங்கியின் முகாமைக்கு அல்லது நிர்வாகத்துக்கு அப்போதைக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள எத்தன்மைத்தான பெயரினாலோ அல்லது பதவிப்பெயரினாலோ அழைக்கப்படும் ஆட்களின் எந்தக் குழுவும் எனப் பொருள்படும்;

''கடன்'' என்பது, பணம் வழங்கும் கடன் ஒன்று எனப் பொருள்படும். அத்துடன் இது எத்தன்மைத்தான பெயரிலோ அல்லது சுட்டுப்பெயரிலோ அழைக்கப்பட்டாலும் ஏதேனும் மேலதிகப் பற்றை அல்லது முற்பணத்தை அல்லது வேறு ஏதேனும் பணவசதி வழங்குதலை உள்ளடக்கும்;

''ஆதனம்'' என்பது, ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எனப் பொருள்படும் என்பதுடன் அரசாங்கத்திடமிருந்து பெற்ற குத்தகையொன்றின்கீழ் குத்தகை பெறுநர் ஒருவரின் அக்கறையினது ஈடு ஒன்றின் மூலம் கடன் பெறப்பட்டு கடனொன்றாக இருக்கின்ற விடயத்தில், அக் குத்தகையின்கீழ்க் குத்தகை பெறுநருக்குள்ள உரிமை, உரித்து, அக்கறை ஆகியனவற்றையும் உள்ளடக்கும்.

23. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை எதுவும் இருக்கின்ற பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் (திருத்தச்) சட்டம்

*[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவிலுள்ள ''ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆள் ஒவ்வொருவரும் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தவறொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அந்தப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''சொந்தக்காரரர்'' என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையிலான சொற்களுக்குப்பதிலாக, ''சொந்தக்காரரர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருநூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. பின்வரும் புதிய பிரிவானது, 29 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 29அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''ஆட்கள் குழுக்களினாலான தவறுகள்''

29அ. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து—

(அ) அந்த ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர், முகாமையாளர், அல்லது செயலாளர் என்போரும்;

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு குழுமம் ஒன்றாயின், அந்தக் குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அத்துடன்

(இ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாயின் அத்தகைய குழுவின் உறுப்பினராகவுள்ள தனியாள் ஒவ்வொருவரும்

அந்தத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்; ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவர், முகாமையாளர் அல்லது செயலாளர், அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளரொருவர், தாம் அறியாமலே அத்தகைய தவறு புரியப்பட்டது, அல்லது அத்தகைய தவறு புரிகையைத் தடுப்பதற்குத் தாம் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்துள்ளார் என எண்பித்தால், அவர் அத்தகைய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.''.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம்

*[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது 1990 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவானது, அதன் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக ''அக்கறை'' என்பது வாரப் பயிர்ச் செய்கையாளரின் 'அன்டே' உரிமைகளையும் அத்தகைய காணியின் குத்தகை பெறுநரின் உரிமைகளையும் ''தட்டுமாறு'' வில் உள்ள காணியின் இணைச் சொந்தக்காரரின் பெரும்பான்மையினரின் உரிமைகளையும் உட்படுத்துகிறது.''

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:—

"தவணை தவறப் பட்டவிடத்து விதித்துரைக்கப்பட்ட வங்கியினால் எடுக்கப்படும் நடவடிக்கை"

29. (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ்கமத்தொழிற் காணியின் மீது ஈடு அல்லது பொறுப்பொன்றின் மேல் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் அத்துடன் அதன்மீது செலுத்தப்படவேண்டிய வட்டி தொடர்பாகத் தவணை தவறுகை செய்யப்படுமிடத்து, அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையைச் செலுத்தத் தவறியுள்ளாரென நீதிவான் நீதிமன்றத்திற்கு விதித்துரைக்கப்பட்ட வங்கியானது அறிவிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலானது, கமத்தொழிற் காணியின் அத்தகைய பரப்பளவானது அமைந்துள்ளதான இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தில் பதிவேட்டில் கோப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் போமதியாகவுள்ளதெனக் காணப்படுகின்ற

வாறான அத்தகைய பணத்தொகை எதுவுமிருப்பின் அது நீதிமன்றமானது அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப் பணத் தொகையை விஞ்சுகின்றது. எப்படியிருப்பினும், அத்தகைய நீதிமன்றத் தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று அதே முறையிலும் அற விடப்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கத்துக்காகச் சான்றிதழில் குறிப்பிடப் பட்டுள்ள தவணை தவறியவரிடமிருந்து அதில் குறித்துரைக்கப்பட்ட தொகை வங்கிக்குப் போமதியாகவுள்ளதெனப் பொருள்பட விதித்துரைக்கப்பட்ட வங்கி யினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் கைப்பட அமைந்த சான்றிதழொன்று, அத்தகைய தவணை தவறியவரிடமிருந்து அத் தகைய தொகை அத்தகைய வங்கிக்குப் போமதியாகவுள்ளதென்பதற்கான முதற் றோற்றசான்றாதல் வேண்டும்.

(4) தவணை தவறியவர் ஒரு வாரப் பயிர்ச்செய்கையாளராகவிருந்து விதித் துரைக்கப்பட்ட வங்கியானது (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் தவணை தவறிய சொல்லப்பட்ட பணத்தொகையை அறவிடுதல் சாத்தியமற்றது அல்லது உசிதமற்றதென ஆணையாளருக்கு அறிக்கை செய் துள்ளவிடத்து, ஆணையாளரானவர், ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் அத் தகைய பணத் தொகையை அறவிடவியலாதென திருப்திப்பட்டதன்மேல், அத் தகைய பணம் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்குச் செலுத்தப்படும்வரை அத்தகைய தவணை தவறியவரின் குடிவார உரிமைகளை இடைநிறுத்தி வைக்கலாம்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் எல்லாம் அந்நீதிமன்றத்தின் எல்லா வேறு அலுவல் களுக்கு மேலாக முந்துரிமையுடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் சந்தர்ப்பத்தில் விதித்துரைக்கப்பட்ட வங்கியினால் வழக்கு நடவடிக்கை தொடுக் கப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாக கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம்:

''(2) விதித்துரைக்கப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட கடனானது கமத்தொழிற் காணியின் சொந்தக்காரரால் அல்லது இருப் பாட்சியாளரால், விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய

கால்நடை, கால்நடைக்கான தீனி அல்லது கமத்தொழிற் துணைக்கருவிகளின் கொள்வனவுக்காக அல்லது அத்தகைய பயிர்கள் அல்லது கமத்தொழில் உற்பத்திப் பொருட்களின் உயர்ச்சிக்காக முழுமையாக அல்லது பாகமளவில் பயன்படுத் தப்படுமிடத்து கமத்தொழிற் காணியின் எவரேனும் சொந்தக் காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றிற்கு வருமதியாகவுள்ள அல்லது செலுத்தப்படற் பாலதான கடன் எதுவும்—

(அ) பயிர்கள் அல்லது வேறு கமத்தொழில் உற்பத்திப் பொருட்கள்மீதும்; அல்லது

(ஆ) கால்நடை, கால்நடைக்கான தீனி அல்லது கமத்தொழிற் துணைக்கருவிகள்மீதும்

முதலில் பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முதல் பொறுப்பானது முதல் பொறுப்பு எனும் விடயத்தை உருவாக்குகின்ற ஆதனத்தைக் கைப்பற்றுவதன்மூலமும், விற்பதன்மூலமும் விதித்துரைக்கப்பட்ட வங்கியினால் வலியுறுத்தப்படலாம்.''.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம்

*[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 41 ஆம் பிரிவு ''அசைவற்ற ஆதனத்தையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அசைவுள்ள'' அல்லது ''அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.''.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம்

*[1990, மார்ச்சு மாதம் 13 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:—

(1) அந்த உட்பிரிவின் (V) ஆம் பந்தியில் ''ஒரு பொறுப்பேற்பு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு பொறுப்பேற்பு; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அந்த உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

(VI) எல்லாக் காப்புறுதி செய்தகு இடையூறுகளுக்கும் எதிராக அத் தகைய பண்டங்களை, அதனுடைய காப்புறுதி செய்யப்படக் கூடிய முழுப் பெறுமதிக்கும் மீளப் பெறப்படக்கூடிய அடிப் படையில் முகவர் நிலையத்தின் பெயரில் காப்புறுதி செய் வதற்கும் அத்துடன் நட்டம் ஏற்படும் விடயத்தில் விற்பனை வரும்படிகளைப் போன்று அதே முறையில் முகவர் நிலை யத்துக்குக் காப்புறுதிப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கு மான ஒரு பொறுப்பேற்பு.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த உட்பிரிவின் (V) ஆம் பந்தியில் ''ஒரு பொறுப்பேற்பு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒரு பொறுப்பேற்பு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அந்த உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

(VI) எல்லாக் காப்புறுதி செய்தகு இடையூறுகளுக்கும் எதிராக அத்தகைய பண்டங்களை அதன் ஏற்றுமதிவரை அதனுடைய காப்புறுதி செய்யப்படக்கூடிய முழுப் பெறுமதிக்கும் மீளப் பெறப்படக்கூடிய அடிப்படையில் முகவர் நிலையத்தின் பெயரில் காப்புறுதி செய்வதற்கும் அத்துடன் நட்டம் ஏற்படும் விடயத்தில் விற்பனை வரும்படிகளைப் போன்று அதே முறையில் முகவர் நிலையத்திற்குக் காப்புறுதிப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்குமான ஒரு பொறுப்பேற்பு''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (VI) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

(VI) எந்த ஆளால் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு நிறைவேற்றப்பட்டதோ அந்த ஆள் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டில் அடங்கி உள்ள பொறுப்பேற்பு ஒன்றாக உள்ளதும், விடயத்திற் கேற்றாற்போல், 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு அல்லது 3 ஆம் உட்பிரிவில் அல்லது 3 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் பொறுப்பேற்புடன் இணங்கியொழுகத் தவறினால் அல்லது அதனை மீறினால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் மூன்று வருடத்திற்குக் குறையாத இருவகையிலொருவகை மறியல் தண்டனைக்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் கொடுமதியாய் உள்ள அல்லது முகவர் நிலையத்துக்கு அதன்கீழ்க் கொடுப்பனவு செய்யப்படக்கூடிய பணமெனக் கூறப்பட்டுள்ள தொகைக்குக் குறையாததும் அத்துடன் அத்தொகையின் மூன்று மடங்கை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

5. நான்காம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"ஆட்கள் குழுவினாலான தவறுகள்"

(4அ) ஆட்கள் குழுவினால் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து,

(அ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒவ்வொருவரும்;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாயிருப்பின் அந்தக் குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(இ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்படாத குழுவாயிருப்பின் அத்தகைய குழுவின் உறுப்பினரான தனிநபர் ஒவ்வொருவரும்,

தவறொன்றுக்குக் குற்றம் சாட்டப்பட்டவராகக் கருதப்படல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அவரது அறிவுக்கு எட்டாது அத்தகைய தவறு செய்யப்பட்டது என அல்லது அத்தகைய தவறு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்குப் போதுமான எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தார் என நிரூபிப்பாராயின் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலரொருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளரொருவரின் அத்தகைய தவறுக்குக் குற்றம் சாட்டப்பட்டவராகக் கருதப்படல் ஆகாது.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் மாற்றீடு செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையங்கள்

5. (1) இக்கட்டளை சட்டத்தில் ''அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர்நிலையம் என்பது:—

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கி;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி;

(இ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டுவங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி;

(ஈ) (165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்;

(உ) எந்தக் கம்பெனி அல்லது கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் 6 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ அந்த ஏதேனும் கம்பெனி அல்லது ஏதேனும் கூட்டுறவுச்சங்கம் எனப் பொருளாகும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தில் உள்ள எதுவும், அத்தகைய நிறுவனத்தின் தாபிப்பு, தத்துவங்கள், மற்றும் பணிகளுக்கு ஏற்பாடு செய்யும் கட்டளைச் சட்டத்தினால் அத்தகைய கடன்களைக் கொடுப்பதற்கான தத்துவம் அல்லது அத்தகைய கடன் வசதிகளை அளிப்பதற்கான தத்துவம் அத்தகைய நிறுவனத்திற்கு அளிக்கப்படாதிருப்பின், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்களை நிறைவேற்றுவதன் பிரதி பயனாக ஏதேனும் கடன் வழங்கு வசதிகளை அளிப்பதற்கு அல்லது கடனைக் கொடுப்பதற்கு 1 ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கின்றதாகக் கருதப்படல் அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் சேர்க்கப்படுகின்றது:—

"வர்த்தகப் பணிப்பாளரின் தத்துவங்கள்"

6. வர்த்தகப் பணிப்பாளரானவர், தேசிய பொருளாதாரத்தின் நலன் கருதி அவ்வாறு செய்வது தோதானதென அவர் கருதுகின்றவிடத்து, இச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு அல்லது குறிப்பீடு செய்யப்படாததும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் போதிய நிதி நிலையுறுதியும் வளமும் கொண்டதென அவர் கருதுவதுமான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டுமெனக் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் வெளிப்படுத்தலாம்.''

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் சட்டம்

*[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இயைய உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்களை எழுதி நிறைவேற்றுவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) எவரேனுமாள், இலங்கையின் ஆள்புலத்தினுள் இடம்பெயர்த்து விற்பதற்கான நோக்கங்களுக்காகத் தாம் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கின்றாரென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு முகவர் நிலையத்துக்கு அவராற் செய்யப்படும் கூற்றொன்றின்மீது அத்தகைய ஆள் பண்டங்களுக்கான கொடுப்பனவைச் செய்யும் நோக்கத்துக்காகவும் அத்துடன் அவற்றை இடம்பெயர்த்து விற்றலுடனும் இடம்பெயர்த்து விற்பதற்கு ஆயத்தஞ் செய்தலுடனும் சம்பந்தப்பட்ட செலவினத்தை ஈடு செய்யும் நோக்கத்துக்காகவும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஆவணமொன்றை (அந்த ஆவணம் இதனகத்துப் பின்னர் ''உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய முகவர் நிலையம் சார்பாக நிறைவேற்றுவதன்மேல், கடன், மேலதிகப் பற்று என்ற வகையான அல்லது வேறு வகையான முற்பணங்களை அத்தகைய முகவர் நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமிடத்து, அந்த நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு தொடர்பாகவும் அது தொடர்புபட்டுள்ள பண்டங்கள் தொடர்பாகவும் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுவதற்கென (1) ஆம் உட்பிரிவில் கூறப்பட்ட சூழ்நிலைகளில் எவரேனுமாளினால் எழுதி நிறைவேற்றப்பட்ட ஆவணமொன்று, அந்த ஆவணம் தொடர்புபட்டுள்ள பண்டங்கள் தொடர்பில் அவ்வாளின் பேரிலான பின்வரும் பொறுப்பேற்றங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) பண்டங்கள் எந்த முகவர் நிலையத்தின் சார்பாக நிறைவேற்றப்படுகின்றனவோ அந்த முகவர் நிலையத்துக்காக அவற்றை நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருப்பதற்கும், பண்டங்களை அல்லது அவற்றைக் கொண்டுள்ள பொதிகளை அல்லது பெட்டிகளைக் குறித்துரைக்கப்பட்டவொரு முறையில் அடைய நாடுவதற்கும், அத்துடன் பண்டங்களை இடம்பெயர்த்து விற்கும்வரை அவற்றைக் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில் வைத்திருப்பதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று;

(ஆ) அப்பண்டங்களின் விற்பனையினாலான வரும்படிகளை அல்லது அத்தகைய வரும்படிகளில் குறித்துரைக்கப்பட்டவொரு விகிதாசாரத்தை நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருப்பதற்கும் பெறப்பட்டவாறு காலத்துக்குக்காலம் அவற்றை முகவர் நிலையத்துக்குச் செலுத்துவதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று;

(இ) முகவர் நிலையத்தின் பெயரில் மீளளித்தல் அடிப்படையொன்றன் மீது பண்டங்களின் முழுமையான காப்புறுதி செயற்படற்பாலதான பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்படற் பாலனவான எல்லா ஆபத்துக்களுக்கும் எதிராக அவற்றைக் காப்புறுதி செய்வதற்கும், இழப்பின் விடயத்தில் காப்புறுதிப் பணங்களை விற்பனையினாலான வரும்படிகளைப்போன்று அதே முறையில் முகவர் நிலையத்துக்குச் செலுத்துவதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று;

(ஈ) அப்பண்டங்களை அல்லது அப்பண்டங்களுள் எவற்றையும் காசுக்காகவல்லாது வேறு வகையாக விற்றலாகாது என்ற பொறுப்பேற்றலொன்று;

(உ) அதற்கென எழுத்தில் கோரப்படுவதன்மேல், முகவர் நிலையத்துக்கு, அல்லது அதன் கட்டளைக்கு, அப்போதைக்கு இடம்பெயர்க்கப்படாதிருக்கக்கூடியனவான அல்லது விற்கப்படாதிருக்கக்கூடியனவான அப்பண்டங்களுள் அத்தகையவற்றை ஒப்படைப்பதற்கான பொறுப்பேற்றலொன்று;

(ஊ) காலத்துக்குக்காலம் முன்னறிவித்தலின்றி முகவர் நிலையம் அப்பண்டங்கள் வைத்திருக்கப்படும் வளவுகளினுட் பிரவேசித்துச் சோதனையிடுவதற்கு முகவர் நிலையத்துக்கு அனுமதிப்பதற்கும், வளவுகளில் இருக்கக்கூடியவாறான அப்பண்டங்களுள் அத்தகையவற்றின் கையிருப்பை எடுப்பதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று;

(எ) அப்பண்டங்கள் இடம்பெயர்க்கப்பட்டு விற்கப்படுவதன்மேல், முகவர் நிலையத்தினால் அவ்வாறு செய்யும்படி கோரப்படின், அப்பண்டங்கள் தொடர்பான உரித்தாவணங்களையும் வேறு இடம்பெயர்ப்பு ஆவணங்களையும் முகவர் நிலையத்திடம் ஒப்படைப்பதற்கான பொறுப்பேற்றலொன்று;

(ஏ) முகவர் நிலையத்தின் பெயரில் அப்பண்டங்களைக் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில், அல்லது குதத்தில் களஞ்சியப்படுத்துவதற்கான பொறுப்பேற்றலொன்று; அத்துடன்

(ஐ) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு தொடர்பிலான கொடுக்கல்வாங்கல் ஆவணங்களையும், பண்டங்களையும் வரும்படிகளையும், உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஆளின் வேறெவையேனும் அல்லது வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள், ஆவணங்கள், பண்டங்கள் அத்துடன் வரும்படிகள் என்பவற்றிலிருந்து தனிவேறாகவும் பிறிம்பாகவும் வைத்திருப்பதற்கான பொறுப்பேற்றலொன்று.

(3) இரண்டாம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும் ஏதேனும் பொறுப் பேற்றல் ஆவணத்தில், அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பேற்ற லுடன் சேர்த்து மேலதிகமான நிபந்தனைகள் அல்லது விதிப்புக்கள் உள்ளடக்கப் படுவதைத் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

3. (1) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டொன்று 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இயைய எவரேனுமாளினால் எழுதி நிறைவேற்றப் பட்டுள்ளவிடத்தும், அந்த நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எந்தப் பண்டங் கள் தொடர்பான அந்தப் பண்டங்கள் சம்பந்தமான விற்பனை உண்டியல் ஒன்றாக அது ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படு மிடத்தும், நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின் கீழ் முகவர் நிலையத்துக்கு வருமதியாகவுள்ளது அல்லது செலுத்தற்படற் பாலதாகவரவுள்ளது எனக் கூறப் பட்ட ஏதேனும் பணம் வருமதியாகவும் செலுத்தப்படாதும் இருக்கும் காலத் தின்போது பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) முகவர் நிலையமானது ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்வையை நிறை வேற்றுவதில் வேறெவரேனுமாளினால் பண்டங்கள் கைப்பற்றப்படும் பட்சத்தில், எந்த வழக்கின்போது கைப்பற்றுகை பயனுறுத்தப் பட்டதோ அந்த வழக்கில் அந்த நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, பண்டங்கள் முகவர்நிலையத்தினுல் தெரிவுசெய் யப்பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏல விற்பனையாள ரினால் ஒன்றில் பகிரங்க ஏல விற்பனைமூலம், அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்துடன் நீதிமன் றத்தினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணை ங்க விற்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்ற கட்டளையொன்றுக்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய பண்டங்கள் விற்கப்படு வதன்மேல், முகவர் நிலையமானது, விற்பனையினாலான வரும்படி களிலிருந்து உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின் கீழ் வருமதியான தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன் விற்பனையினாலான வரும்படிகளின் மீதி ஏதேனுமிருப்பின் அது, நீதிமன்றத்துக்குச் செலுத்தப்பட்டுப் பண்டங் கள் எந்தத் தீர்வையின்கீழ் கைப்பற்றப்பட்டனவோ அந்தத் தீர்வையை நிறைவேற்றுவதில் பண்டங்களின் விற்பனையினாலான வரும்படிகளெ னக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) முகவர் நிலையமானது, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச் சீட்டு எந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஆள் கடனிறுக்கவகையற்றவராகும் பட்சத்தில் அத்தகைய கடனிறுக்க வகையற்றலின்மீது எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் முடி வுறாதுள்ளனவோ அந்த நீதிமன்றத்திடமிருந்து, உள்நாட்டு நம்பிக் கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எப்பண்டங்கள் தொடர்பானதோ அப் பண்டங்கள் முகவர்நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டு, முகவர்நிலை யத்தினால் தெரிவுசெய்யப்பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏல விற்பனையாளரொருவரினால் ஒன்றில் பகிரங்க ஏலவிற்பனை மூலம் அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில், அத்துடன் நீதிமன்றத்தினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க விற்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்

கின்ற கட்டளையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய பண்டங்கள் விற்கப்படுவதன்மேல், முகவர் நிலையமானது விற்பனையினாலான வரும்படிகளிலிருந்து உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் வருமதியாகவுள்ள தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், விற்பனையினாலான வரும்படிகளின்மீது ஏதேனுமிருப்பின் அது, கடனிறுக்கவகையற்றவரின் மரணச் சொத்தினது சாட்டுதற்காரரின் வரவுக்கு நீதிமன்றத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(இ) இரண்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பேற்றலுக்கு இணங்கியொழுக எவையேனும் பண்டங்கள் முகவர் நிலையத்திடம் ஒப்படைக்கப்படுமிடத்து முகவர் நிலையமானது அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பண்டங்களை அவை அகற்றப்பட்ட பின்னர், அல்லது உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டை எழுதி நிறைவேற்றுகின்ற ஆள் பண்டங்கள் வைத்திருக்கப்படும் வளவுகளில் விற்பதற்குச் சம்மதித்தால் அத்தகைய வளவுகளில் விற்கலாம். முகவர்நிலையமானது பண்டங்களின் விற்பனையினாலான வரும்படிகளிலிருந்து உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் அதற்கு வருமதியாகவுள்ள தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், மீதி ஏதேனுமிருப்பின் உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எவ்வாளினால் எழுதி நிறைவேற்றப்பட்டதோ அவ்வாளுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்டதோ அந்த ஆள், மீறுகையொன்றைப் புரிந்தால் அல்லது உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டில் அடங்கியுள்ள பொறுப்பேற்றலொன்றாகவுள்ளதும் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான ஏதேனும் பொறுப்பேற்றலுக்கு இணங்கியொழுகத் தவறினால், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரால் செய்யப்படும் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு, அல்லது உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் முகவர் நிலையத்துக்கு வருமதியாகவுள்ளதென அல்லது செலுத்தற்பாலதாக வரவுள்ளதெனக் கூறப்பட்ட பணத் தொகைக்குக் குறையாத ஒரு தொகையிலானதும் அத்தொகையின் மும்மடங்கை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டொன்றின்கீழ் வருமதியாகவுள்ள தொகை, அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு முகவர் நிலையத்திற்குச் செலுத்தப்படுதல் அல்லது அதனால் அறவிடப்படுதல் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள், எந்த எழுத்திலான அல்லது வேறு சட்டத்தின்கீழ் அத்தொகையை அல்லது அத்தொகையின் ஏதேனும் பாகம் ஏலவே செலுத்தப்பட்டு அல்லது அறவிடப்பட்டு இருக்குமிடத்து வருமதியாகவுள்ள மீதியை அறவிடும் நோக்கத்துக்காக முகவர் நிலையத்துக்கு ஏதேனும் உரிமை அல்லது பரிகாரம்

கிடைக்கக்கூடியதாகவுள்ளதோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டும்; அவற்றைப் பதிலிடுவனவாகவோ மதிப்புக் குறைப்பனவாகவோ அல்ல.

4. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமாயின், அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாக இருக்குமாயின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளியும்; அத்துடன்

(இ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருக்குமாயின், அத்தகைய குழுவின் உறுப்பினரொருவராகவுள்ள ஒவ்வொரு தனியாளும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளி ஒருவர், அத்தவறு தமது அறிவின்றிப் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தகுந்த எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென எண்பிப்பாராயின், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

5. (1) இச்சட்டத்தில் ''அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையம்'' என்பது பின்வருமாறு பொருள்படும்:—

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி;

(இ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி;

(ஈ) (165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்;

(உ) எந்தக் கம்பனி அல்லது கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் 6 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கம்பனி அல்லது ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் எனப் பொருளாகும்.

(2) இச்சட்டத்திலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ) என்னும் பந்திகளின் கூறப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்கு, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுகளை எழுதி நிறைவேற்றியதன் பயனாகக் கடன்களை வழங்குவதற்கு அல்லது எவையேனும் கடன் வழங்கு வசதிகளை அளிப்பதற்கு, அத்தகைய கடன்களை வழங்குவதற்கான அல்லது அத்தகைய வசதிகளை அளிப்பதற்கான தத்துவம், அத்தகைய நிறுவனத்தின் தாபிப்பு, தத்துவங்கள், பணிகள் என்பவற்றுக்கு ஏற்பாடு செய்கின்ற சட்டத்தினால் அத்தகைய நிறுவனத்துக்கு அளிக்கப்படாவிடின், அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலோ, பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

6. வர்த்தகப் பணிப்பாளர், தேசிய பொருளாதாரத்தின் நலன்கருதி அவ்வாறு செய்வது தோதானதென அவர் கருதுகின்றவிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு அல்லது குறிப்பீடு செய்யப்படாததும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் போதிய நிதி நிலையுறுதியும், வளமும் கொண்டதுமென அவர் கருதுவதுமான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம்

*[1990, மே மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**பொருளாதாரத்தின் பல்வேறு துறையினருக்கும் அதிலும் குறிப்பாக விதிமுறைப் படாத துறையினருக்கும் கடன் விநியோகித்தலை இயலச்செய்யும் கருத்துடன் கடன் கொடுக்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவோர் தொடர்பிலான கடன் தகவலைச் சேகரிப்பதற்கும் பணியகத்தின் பங்குகாரர்களுக்கு அத்தகைய தகவலை ஏற்பாடு செய்வதற்குமாக இலங்கை கடன் தகவல் பணியகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டமானது, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் 1

## இலங்கை கடன் தகவல் பணியகத்தினைத் தாபித்தல்

2. பணியகத்தின் பங்குதாரர்களாகவுள்ள ஆட்களைக் கொண்ட (இதன கத்துப் பின்னர் ''பணியகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''இலங்கை கடன் தகவல் பணியகம்'' என அழைக்கப்படவேண்டிய பணியகமொன்று தாபிக்கப் படுதல் வேண்டும்.

3. பணியகமானது 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையும், பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்சலாமென்ப துடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

4. பணியகத்தின் தலைமை அலுவலகமானது கொழும்பில் அமைந்திருத் தல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையானது அவசியமானதெனக் கருதக்கூடிய தாக, பணியகத்தினது அத்தகைய கிளை அலுவலகங்களும் முகவர்களும், கொழு ம்பு தவிர்ந்த இலங்கையில் உள்ள இடங்களில் தாபிக்கப்படலாம்.

5. (1) பணியகத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்--

(i) சபையின் தவிசாளராகவிருக்க வேண்டியவரான, பணச்சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும், மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவரையும்;

(ii) பணச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மத்திய வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவரையும்;

(iii) இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இலங்கை வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவரையும்;

(iv) மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மக்கள் வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவரையும்;

(v) இலங்கை வங்கி, மக்கள் வங்கிகள் தவிர்ந்த, பங்குடைமை கொண்ட உரிமையளிக்கப்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்கள் இருவரையும்;

(vi) பங்குடைமை கொண்ட நிதிக் கம்பெனிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் ஒருவரையும்;

(vii) தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அத்துடன் அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பனவற்றின் பணிப்பாளர்கள் சபையிலிருந்து நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவரையும்;

(viii) பணியகத்தின் பொது முகாமையாளர் என்னும் பதவியை வகிக்கின்ற ஆளையும்

கொண்டுள்ள (இதன்கத்துப் பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர்கள் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பணியகத்தின் பணிப்பாளர்கள், பதவிக்காலம், அத்தகைய பணிப்பாளர்களுக்குச் செலுத்தற்பாலதான ஊதியம், கூட்டங்களுக்கு அத்துடன் பணியகத்தின் இலச்சினை என்பன தொடர்பில் பயனுடையனவாதல் வேண்டும்.

(3) சபையானது இச்சட்டத்தினால் பணியகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

6. கடன் நிறுவனங்களின் கடன் பெறுவோர் மற்றும் உத்தேசக் கடன் பெறுவோர் மீதான வியாபார, கடன் வழங்கு மற்றும் நிதிசார் தகவலைச் சேர்த்தலும் ஒன்றிணைத்தலும், அத்துடன் கடன் வழங்கும் நிறுவனங்களான, பணியகத்தின் பங்குதாரர்களுக்கு, வேண்டுகோளின்பேரில், பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்கும், குறிப்பாக, ஒழுங்குமுறை சாராத துறைக்கும் கடன் விநியோகத்துக்கு வசதியளிக்கும் நோக்கத்துடன் கடன் தகவல் கொடுத்துதவுதலும் பணியகத்தின் பணிகளாதல் வேண்டும்.

7. பணியகமானது, அதன் பணிகளை நிறைவேற்றுகையில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், அத்துடன் புரியலாம்:—

(அ) கடன் நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுவோர் மீது தரவு வங்கி யொன்றைப் பேணுதல்;

(ஆ) கடன் நிறுவனங்களின் கடன்பெறுவோர் அல்லது உத்தேச கடன் பெறுவோர் மீதான வியாபார, கடன் வழங்கு மற்றும் நிதிசார் தகவலைச் சேகரித்தலும் ஒன்றிணைத்தலும்;

(இ) அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவலைக் களஞ்சியப்படுத்தல்;

(ஈ) பணியகத்தின் பங்குதாரர்களுக்கு, வேண்டுகோளின் பேரிலும் நம் பிக்கையிலும் கடன் தகவலைக் கொடுத்துதவுதலும் அத்தகைய தகவ லானது கொடுத்துதவப்பட வேண்டிய படிவங்களை விதித்துரைத் தலும்;

(உ) கடன் தகவலைக் கொடுத்துதவியமைக்காக அவசியமானதென அது கருதக்கூடிய அத்தகைய கட்டணங்களை அறவிடல்;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளு தலும் அத்துடன் வைத்திருத்தலும் அத்துடன் அத்தகைய ஆதனத் தைக் குத்தகைக்கு விடல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறு விதமாகக் கையுதிர்த்தலும்;

(எ) ஏதேனும் வர்த்தக வங்கியில் நடப்புக் கணக்குகளையும் வைப்புக் கணக்குகளையும் திறத்தல் அல்லது மூடுதல்;

(ஏ) பொது முகாமையாளர் ஒருவரை நியமித்தல்—இவர் பணியகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராயிருத்தல் வேண்டும்;

(ஐ) பணியகத்தின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாயிருக்கக் கூடிய அத்தகைய பிற அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்;

(ஒ) பணியகத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களுக்கு ஓய்வூதியம் அத் துடன் சகாய நிதியங்களைத் தாபித்தலும் சேமநல பொழுதுபோக்கு வசதிகளை, வீடுகளை, விடுதிச் சாலைகளை அத்துடன் இதுபோன்ற பிற தங்கு வசதிகளை ஏற்பாடு செய்தலும்;

(ஓ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அத்துடன் சேவையாளர் களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல்;

(ஔ) பணியகத்தின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியத்தை வழங்குதல்;

(க) பணியகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் கடமைகளைப் புரிவதற்கும் அவசியமானதாயிருக்கக்கூடிய அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் செய்துகொள்ளுதல் அத்துடன் புரிதல்;

(ங) பணியக அலுவல்களின் நிர்வாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ச) பணியக அலுவல்களை முறையாகக் கொண்டு நடாத்துவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமானவையாயிருக்கக்கூடிய அத்தகைய மற்ற எல்லாக் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

8. இலங்கையின் ஏதேனும் இடத்தில் பணியகத்தின் முகவர்களைப் பணிப்பாளர் சபை நியமிக்கலாம்.

## பாகம் 11

## நிதி

9. (1) பணியகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் நூறு ரூபாய் கொண்ட பத்து இலட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டு பத்துக்கோடி ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் வழங்கப்பட்ட மூலதனம் சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும்.

10. (1) பணச்சபையை அல்லது கடன்வழங்கு நிறுவனம் ஒன்றைத் தவிர வேறு ஆளெவரும் பணியகத்தில் பங்குகளைக் கொள்வனவு செய்ய உரித்துடையவராகார்.

(2) பணச்சபையானது, பணியகப் பங்குகளின் ஆரம்ப விநியோகத்திற்கான விண்ணப்பங்களைக் கோரிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டதன் பேரில் பணச்சபைக்கும் அத்துடன் கடன்வழங்கு நிறுவனங்களுக்கும் பின்வரும் விகிதாசாரத்தில் பங்குகளைப் பிரித்தொதுக்குதலும் வேண்டும்:—

பணச்சபை— வழங்கப்பட்ட அத்தகைய பங்கு மூலதனத்தில் ஐம்பத்தொரு சதவீதம்;

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்—வழங்கப்பட்ட அத்தகைய பங்கு மூலதனத்தில் முப்பது சதவீதம்; அத்துடன்

பிறகடன் நிறுவனங்கள்— வழங்கப்பட்ட அத்தகைய பங்கு மூலதனத்தில் பத்தொன்பது சதவீதம்.

(3) பங்குகளின் ஆரம்ப விநியோகத்தின் பின்னர், பணச்சபையின் எழுத்து மூலமான அங்கீகாரத்துடனல்லாமல், பணியகத்தின் பங்குகளைப் பிரித்தொதுக்குவதோ அல்லது மாற்றுவதோ கூடாது.

(4) உட்பிரிவு (3) இன்கீழ் பங்குகளைப் பிரித்தொதுக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு அங்கீகாரமளிக்கும்போது, பணச்சபையானது உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதாசாரங்கள் பணியகத்தின் பங்குக் கொள்வனவில் பேணப்படுகின்றன என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு முயல வேண்டும்.

11. எவரேனும் பங்குதாரரின் பொறுப்பு அவரின் பங்குகளின் மேல் கொடுபடாமலிருக்கும் தொகை ஏதேனும் இருப்பின் அதற்கு மட்டுப்படுத்தப் படல் வேண்டும்.

12. (1) பணியகமானது, காலத்திற்குக் காலம், ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிகளுக்குப் பணச்சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அதன் மீதான வட்டியும் அதன் மீள்செலுத்துகையும் பற்றிய அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைவாக, மத்திய வங்கியிலிருந்து பணத்தொகைகளைக் கடன் பெறலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பணியகத்தின் கூட்டு மொத்தக் கடன் பெறுதல்கள் எச்சந்தர்ப்பத்திலேனும் பணியகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்திற்குச் சமனான ஒரு தொகையை விஞ்சக்கூடாது.

13. பணியகத்தின் பணிகளை வினைத்திறமையுடன் நிறைவேற்றுவதற்கு, பொருளாதாரத்தின் விதிமுறைப்படாத்துறையுடன் தொடர்புடைய கருமங்களைக் கையாளுவதற்கான ஒரு பகுதி உட்பட அவசியமானவையாயிருக்கக்கூடிய அத்தகைய பகுதிகளைச் சபை தாபிக்கலாம்.

14. (1) (இதனகத்துப் பின்னர் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப் படும்) அதன் சொந்த நிதியமொன்றைப் பணியகம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்:—

(அ) அதன் மூலதனத்திற்கு ஒப்பப் பணமாகப் பெறப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) பணியகத்தால் செய்யப்பட்ட முதலீடுகளின் பேரில் இலாபமாகப் பணியகத்தால் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) பணியகத்தால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அதனால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஈ) பணியகம் அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்து மூலமான ஏதேனும் பிற சட்டத்தின் கீழ்ப் பணியகத்தின் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகித்தலில், புரிதலில் அத்துடன் நிறைவேற்றுதலில் அதனால் உறப்படும்

ஏதேனும் செலவுகளைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தால் நிதியத்திலிருந்து கொடுபடுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறோ அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

15. பணியகத்தைச் சார்ந்த எவையேனும் பணங்கள் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையினால் முதலீடு செய்யப்படலாம்.

16. (1) சபையானது, பணியாட்டொகுதியினரின் சேமநலத்துக்காகப் பொது ஒதுக்கு நிதியத்தைத் தாபித்தல் வேண்டும். இதற்குச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பணியகத்தின் தேறிய இலாபங்களிலிருந்து இத்தகைய பணத்தொகைகள் கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) பணியாட்டொகுதியினரின் சேமநலத்துக்காக ஒதுக்கு நிதியம், பணியகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் பயிற்சி, வீடமைப்பு மற்றும் சேமநல வசதிகளை வழங்குவதற்குச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) சபையானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கு நிதியங்களைத் தாபித்தல் வேண்டும்.

17. பணியகத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

18. (1) கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பன்னிரண்டு மாத காலமொன்றைப் பொருட்படுத்தாது அத்தகைய கால இடைவெளிகளுக்குள் பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமை அதிபதி பணியகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்குத் தகைமைபெற்ற கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவர், பணியகம் தொடர்பில் கணக்காய்வாளரின் கடமைகள் மற்றும் பணிகளைப் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவருடைய அல்லது அவர்களுடைய சேவைகளைப் பயன்படுத்துவதற்குத் தாம் உத்தேசித்துள்ளார் என அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களுக்கு அறிவித்தலும் வேண்டும். அத்துடன் அதன்மீது அத்தகைய சணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ்ச் செயலாற்றுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு தகைமைபெற்ற கணக்காய்வாளரும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர், பணியகத்தின் கணக்குகளைப் பரிசோதனைசெய்து—

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவலையும் விளக்கவுரைகளை யும் தாம் பெற்றாரா அல்லரா எனவும், அத்துடன்

(ஆ) அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகை அவரது அபிப் பிராயத்தில், பணியகத்தின் புத்தகங்களில் காட்டப்பட்டவாறாக அல் லது தகவலுக்கு எட்டியவரையிலும் அவருக்குக் கொடுக்கப்பட்ட விள க்கவுரைகளுக்கிணங்கவும் பணியகத்தின் அலுவல்கள் பற்றிய உண்மை யானதும் செம்மையானதுமான நோக்கை வெளிக்காட்டுவதற்கு முறை யாகத் தயாரிக்கப்பட்டனவா எனவும்,

ஐந்தொகைகளினதும் அறிக்கைகளினதும் செம்மையை நிச்சயித்துப் பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஐந்தொகையின் செம்மையை நிச்ச யிக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் பணியகத் தின் தலைமையலுவலகத்துக்கு அனுப்பப்பட்டனவும் பணிப்பாளர்கள் சபை யினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட பணியகத்தின் அலுவலரினால் செம்மை யானவை என அத்தாட்சிப்படுத்தப்பட்டனவுமான பணியகத்தின் ஏதேனும் கிளையின் புத்தகங்களிலிருந்தான எவையேனும் பிரதிகளை அல்லது பொழிப்பு களை அத்தகைய கிளை தொடர்பில் ஏற்றுக்கொள்ளலாம்.

(6) இப்பிரிவில் ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது—

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக விருந்து கணக்காளராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத் தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருப் பவரான ஒரு தனியாள் என்று பொருளாகும்; அல்லது

(ஆ) அதன் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும், இலங்கையின் வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப் பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து கணக்காள ராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கணக்காளர் குழு மம் எனப் பொருள்படும்.

19. (1) பணிப்பாளர்கள் சபையானது ஏதேனும் ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அமைச் சருக்கும் எல்லாப் பங்குதாரர்களுக்கும் அந்த ஆண்டு தொடர்பான பின்வரும் ஆவணங்களுள் ஒவ்வொன்றினதும் பிரதி ஒன்றை அனுப்பிவைக்கச் செய்தல் வேண்டும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை;

(ஆ) ஐந்தொகை;

(இ) இலாப, நட்டக் கணக்கு;

(ஈ) பணியகத்தின் வேலை பற்றிய கணக்கொன்றைக் கொடுக்கும் அத்தகைய சபைத் தவிசாளரின் அறிக்கை.

(2) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

## பாகம் III

### பொதுவானவை

20. (1) சபையானது இச்சட்டத்தின்கீழ் பணியகத்தின் எவரேனும் அலுவலருக்கு அதன் எவையேனும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கையளிக்கலாம்.

(2) எந்த அலுவலருக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம் கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலர், சபையினால் அவருக்குக் கொடுக்கப்பட்டதான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணியைப் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எது எப்படியிருப்பினும் அவ்வாறு கையளிக்கப்பட்டனவான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

21. (1) பணியகம் அல்லது பணியகத்தினால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுஃதுமூலமான அறிவித்தல்மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய கடன் வழங்கு நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுநர்கள் தொடர்பில் அத்தகைய எல்லா விவரத் திரட்டுக்களையும் தகவலையும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய காலத்துக்குள் பணியகத்துக்கு அல்லது பணியகத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குக் கொடுத்துதவுமாறு ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம்.

(2) அத்தகைய கடன் நிறுவனத்தைத் தாபிக்கின்ற ஏதேனும் சட்டத்திற்கு அல்லது வேறு சட்டத்தில் அல்லது அத்தகைய கடன்வழங்கு நிறுவனத்திற்கும் அத்தகைய கடன்வழங்கு நிறுவனத்திலிருந்து மற்றும் கடன்பெறுநருக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கைக்கு முரணாக எது எப்படியிருப்பினும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலினால் ஏதேனும் விவரத்திரட்டு அல்லது தகவலைக் சொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாது (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்

திரட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல் எதுவும், பங்காளரின் வேண்டுகோளின் பேரில், பணியகத்தின் ஒரு பங்குதாரரான கடன்வழங்கு நிறுவனமொன்றுக்குத் தவிர அல்லது பணியகத்தின் பணிகளை நிறைவேற்றும்போது தவிர எவரேனும் ஆளுக்குப் பணியகத்தினால் வெளியிடப்படுதல் அல்லது தெரியப்படுத்தப்படல் ஆகாது.

22. (1) பணியகத்தின் பணிப்பாளர், அல்லது வேறு அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் சட்டத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தும்போது தவிர இச்சட்டத்தின்கீழ் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை வெளியிடுதல் அல்லது இச்சட்டத்தின் கீழ் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டு அல்லது வேறு தகவலை ஏதேனும் நீதிமன்றம் அல்லது வேறு நிறுவனத்தின் முன் வைத்தல் ஆகாது.

(2) பணியகத்தின் ஒரு பங்குதாரரான ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அல்லது ஏதேனும் சட்டத்தால் அவ்வாறு தேவைப்பட்டபோது தவிர, இச்சட்டத்தின் கீழ் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை வெளிப்படுத்துதலோ அல்லது இச்சட்டத்தின் கீழ்ப் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத் திரட்டை அல்லது வேறு ஏதேனும் தகவலை ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னிலையில் முன்வைத்தலோ ஆகாது.

23. (1) பணியகத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அவரது கடமைகளை ஏற்குமுன் பணியகத்தின் அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கருமங்கள் சம்பந்தமாகவும் இரகசியத்தைக் கடுமையாகத் தாம் பேணுவார் என்ற ஒரு வெளிப்படுத்துகையில் ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகைமூலம்,

(அ) சட்ட நீதிமன்றமொன்றினால் அல்லது அத்தகைய கருமங்கள் எந்த ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் தொடர்புடையதாக உள்ளதோ அந்த எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் குழுவினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டாலன்றி; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அன்றி,

அவரின் கடமைகளையும், பணிகளையும் புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் அவரின் அறிவுக்கு வரக்கூடிய எவையேனும் கருமங்களை வெளிப்படுத்துவதில்லையெனத் தம்மை அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் பிணித்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் ஒரு பங்குதாரரான ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பணிப்பாளர், அலுவலர், அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் பணியகத்திடம் இருந்து அத்தகைய கடன் வழங்கு நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் அல்லது நிதி சார்ந்த தகவல் தொடர்பிலும், அது தொடர்பிலான எல்லாக் கருமங்கள்

தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தைப் பேணுவதாகத் தம்மைப் பிணையம் வைத்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம்.

(அ) அவ்வாறு

(1) நீதிமன்றமொன்றினால்,

(2) அத்தகைய தகவல் எந்த ஆள் தொடர்பிலானதோ அந்த ஆளினால் தேவைப்படுத்தப்பட்டபோது;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாகத் தவிர அத்தகைய ஏதேனும் தகவலை அல்லது விடயத்தை வெளிப்படுத்துவதில்லையெனத் தம்மைப் பிணையமாக்குதல் வேண்டும்.

24. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயலுக்காகப் பணியகத்திற்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காகப் பணியகத்தின் எவரேனும் பணிப்பாளருக்கு, அலுவலருக்குச் சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக

துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் இருத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் பணியகத்தினால் அல்லது பணியகத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் பணியகத்தினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பணியகத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது பணியகத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், அத்தகைய ஆளினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவு அறவிடப்பட்டாலன்றி, அவருக்கு நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

25. பணியகத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபையின் எவரேனும் பணிப்பாளருக்கு எதிராக அல்லது அவரது ஆதனத்துக்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படல் ஆகாது.

26. (1) சபையானது, எவ்விதிகள் இச்சட்டத்தினால் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டு அல்லது தேவைப்படுத்தப்பட்டு உள்ளதோ அவ்விதிகள் தொடர்பிலான எல்லா அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பில் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் சபையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் அது அமைச்சரால் அங்கீகாரமளிக்கப்பட்டு அத்துடன் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.

27. (1) (அ) இருபத்தோராம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டில் அல்லது தகவலில் பிழையான அல்லது பொய்யான ஏதேனும் கூற்றை அறிந்து கொண்டு அளிக்கின்ற;

(ஆ) இருபத்தோராம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாட்டுடன் நியாயமான காரணமில்லாது இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற;

(ஈ) பணியகத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளராக இருந்து கொண்டு இச்சட்டத்தினால் எந்நோக்கத்துக்காக ஏதேனும் தகவலை வெளிப்படுத்த அதிகாரமளிக்கப்பட்டதோ அந்நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்துக்காக, எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அல்லது அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது அது தொடர்புடையதான அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை வெளிப்படுத்துகின்ற;

(உ) பணியகத்தின் ஒரு பங்குதாரரான ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருந்துகொண்டு, பணியகத்திடமிருந்து அத்தகைய கடன் வழங்கு நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் கடன் அல்லது நிதிசார்ந்த தகவலை இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தகவலை எந்த நோக்கத்திற்காக வெளிப்படுத்துவதற்கு அவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த நோக்கமல்லாத ஏதேனும் நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துகின்ற;

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும் ஆள் ஒவ்வொருவரும் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டு காலப்பகுதியை விஞ்சாத ஒரு காலத்திற்கு மறியற்றண்டனைகளுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவினால் செய்யப்பட்டிருக்குமிடத்து அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருப்பின் அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும்;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாயிருப்பின் அந்தக் குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்;

அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் அவரது அறிவுக்கெட்டாது அத்தகைய தவறு புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தவிர்ப்பதற்கு அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பயன்படுத்தினார் என எண்பிப்பாராயின் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

(4) சபையானது 27 (1) (அ) அல்லது (ஆ) என்னும் பிரிவின் கீழ்த் தவறொன்றின் புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகைக்கு கொண்ட அத்தகைய தவறை இணக்கலாம். இப்பிரிவின் கீழ்த் தவறொன்றின் இணக்கத்துக்காகச் சபையினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிலையத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

28. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''இலங்கை வங்கி'' என்பது (394 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி எனப் பொருள்படும்.

''மத்திய வங்கி'' என்பது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியெனப் பொருள்படும்;

''இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்'' என்பது (165 ஆம் அத்தியாயமான) அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்;

''நிதிக் கம்பெனி'' என்பது, நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட கம்பெனியொன்று எனப் பொருள்படும்;

''உரிமம் பெற்ற வர்த்தக வங்கி'' என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி என்று பொருள்படும்.

''கடன்வழங்கும் நிறுவனம்'' என்பது—

(அ) உரிமம்பெற்ற ஒரு வர்த்தக வங்கி;

(ஆ) ஒரு நிதிக் கம்பெனி;

(இ) தேசிய சேமிப்பு வங்கி;

(ஈ) இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி;

(உ) அரச ஈட்டு முதலீட்டு வங்கி;

(ஊ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

(எ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் போதியளவு நிதிவள உறுதி நிலையுடையதும் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்குக் குறிப்பாக ஒழுங்குமுறை சாராத துறைக்கும் கடன் விநியோக வசதியளிக்கும் நோக்கத்திற்காக அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால் வெளிப்படுத்தப்பட்டதுமான கம்பனியொன்று,

என்று பொருள்படும்;

''பணச் சபை'' என்பது, பணச்சட்டத்தின் ''8 ஆம் பிரிவின் கீழ் அமைக்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச் சபை எனப் பொருள்படும்''.

''இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி'' என்பது 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியெனப் பொருள்படும்;

''தேசிய சேமிப்பு வங்கி'' என்பது, 1971 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேசிய வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி எனப் பொருள்படும்.

''மக்கள் வங்கி'' என்பது 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியெனப் பொருள்படும்.

''அரச ஈட்டு, முதலீட்டு வங்கி'' என்பது, 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரசஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப் பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி எனப் பொருள்படும்.

## அட்டவணை

### பணிப்பாளர்கள் சபை தொடர்பிலான ஏற்பாடுகள்

1. தவிசாளரும் அத்துடன் 5 (1) (VIII) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள பணிப்பாளரும் தவிர்ந்த, ஒவ்வொரு பணிப்பாளரும் தமது பதவியை இறப்பு மூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித் தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்றவாறு, மீளப் பெயர் குறித்து நிய மிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவரா தலும் வேண்டும்.

ஆயின், இறப்பு மூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற் றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கிய பணிப்பாளர் ஒருவரின் இடத்துக்குப் பெயர் குறித்து நியமிக்கப்படும் அல்லது தெரிவு செய்யப்படும் பணிப்பாளர் ஒருவர், எப்பணிப்பாளரை அடுத்து அவர் வருகின்றாரோ, அப்பணிப்பாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

2. சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகப் பணிப்பாளர் எவரும் ஏதேனும் காலப்பகுதியின்போது, தமது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாதிருந்தால், அவரின் இடத்தில் பதிற் கடமையாற்றவென வேறு ஆள் பெயர் குறித்து நியமிக்கப்படலாம் அல்லது தெரிவு செய்யப்படலாம்.

3. பணிப்பாளர் ஒருவர், அதற்கான காரணம் எதுவும் காட்டப்படாமல் அவரைப் பெயர் குறித்து நியமிக்கின்ற அல்லது தெரிவு செய்கின்ற ஆளினால் அல்லது ஆட்களினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

4. (தவிசாளரும், அத்துடன் 5 (1) (VIII) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள பணிப்பாளரும் தவிர்ந்த) பணிப்பாளர் ஒருவர், தவிசாளருக்கு முகவரி யிடப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத் தகைய பதவி விலகலானது, அக் கடிதம் தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

5. பணிப்பாளர்களுக்கு, சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியமும் அத்துடன் வேறு கொடுப்பனவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

6. (1) சபையின் தவிசாளர், சமுகமாயிருந்தால், சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தராதிருந்தால், சமுகமாயிருக்கும் பணிப்பாளர்கள், தமக்குள்ளிருந்து தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) சபையானது, இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையாவது, அத்துடன், அவசியமானபோது அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் நான்கு பணிப்பாளர்களாதல் வேண்டும். அத்துடன், சபையானது, கூட்ட நடப்பெண் அத்துடன் இவ்வட்டவணையின் ஏற்பாடுகள் என்பன தொடர்பிலான தேவைப்பாட்டுக்கு அமைய, சபையின் கூட்டங்களும் அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படும் நடவடிக்கை முறையையும் விதிகள் மூலம் ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவு செய்வதற்கான எல்லா வினாக்களும், சமுகமாயிருக்கும் பணிப்பாளர்களின் பெரும்பான்மை வாக்கினால் முடிவு செய்யப்படல் வேண்டும். வாக்குகள் சமனாய் இருக்கும் பட்சத்தில், தலைமை வகிக்கும் பணிப்பாளருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

7. சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதனையும், பணிப்பாளர்களுள் வெற்றிடமொன்று இருப்பதனால் அல்லது அத்தகைய எவரேனும் பணிப்பாளரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதனால் மாத்திரம் செல்லுபடியற்றதாக்கலாகாது.

8. (1) பணியகத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்பட்டு உருவமைக்கப்படுதல் வேண்டும், அத்துடன் சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(2) பணியகத்தின் இலச்சினையானது, தவிசாளரின் கட்டுக் காவலில் இருத்தல் வேண்டும்.

(3) பணியகத்தின் இலச்சினையானது, சபையின் அங்கீகாரத்துடன் அன்றியும் தவிசாளரினதும் அத்துடன் இரு பணிப்பாளர்களினதும் சமுகத்திலும் தவிர ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாகச் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

9. (அ) தவிசாளர், பணச் சபைக்கு முகவரியிடப்படும் கடிதம் ஒன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, பணச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(ஆ) பணச்சபையானது தவிசாளரை எந்நேரத்திலும் பதவியிலிருந்து அகற்றலாம்.

10. பணியகத்தினால் செய்யப்பட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தம் எதிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர், சபையின் கூட்டமொன்றில் அத்தகைய அக்கறையின் தன்மை பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன், அத்தகைய பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் மீதான கலந்தாராய்வு அல்லது முடிவு எதிலும் பங்கு பற்றுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய கூட்டத்தில் அத்தகைய கலந்தாராய்வு நடந்து கொண்டிருக்கும்போது அல்லது அத்தகைய ஒப்பந்தம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அத்தகைய கூட்டத்திலிருந்து விலகுதலும் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) உட்பந்தி (LIV) என்பதில் ''1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின்; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பந்தி (LV) என்னும் உட்பந்தியில் (III) ஆம் விடயத்தில் ''ஐரோப்பிய பொருளாதார சமூக நிதிகளுடன் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐரோப்பிய பொருளாதார சமூக நிதிகளுடன் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பந்தியின் முடிவில் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்;

''(LVI) 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கமத் தொழிற் காப்புறுதிச் சபையின்,''

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (XVI) என்னும் உட்பந்தியில் ''அந்த ஆளினால் கொள்ளப்பட்ட பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்தின்போது நிகழும் மாற்றத்தின்மீதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய

ஆதனம் அந்த ஆளினால் கொள்ளப்பட்ட தேதியின் பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்தின்போது நிகழும் மாற்றத்தின்மீதும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (இஇஇ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(இஇஇஇ)) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் தேசிய கழகத்தினால் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கழகம் ஆற்றிய சேவைகள் தொடர்பில் அல்லது விளையாட்டுக்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் விளையாட்டில் பங்குபற்றும் நெறிமுறையின்போது அந்த வரிமதிப்பீட்டாண்டில் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கப்பட்ட இலாபங்களும் வருமானமும் அத்தகைய இலாபங்களும் வருமானமும் (இலங்கைக்கு வெளியே உறப்பட்ட நியாயமான செலவுகளாக ஆணையாளர் தலைமையதிபதி கருதுகின்றவாறான அத்தகைய தொகையைக் கழித்து) அத்தகைய கழகத்தால் இலங்கைக்கு அனுப்பப்படின்;''

(2) அப்பிரிவின் (3) என்னும் பந்தியில் ''ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும் அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ப) என்னும் பந்தியில் ''ஆளொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆளொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (ப) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும்:—

''(ட) 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தகைய, பணியகத்தால் உரிமமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையால் எந்த இலங்கையருக்கு இலங்கைக்கு வெளியே வேலை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அல்லது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் இலங்கையர்

தொடர்பில் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாததான, ஏதேனும் பணத்தொகையும்''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''1984 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதி தொடங்கி 1990 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதி முடிவடையும் காலப் பகுதிக்கு'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1984 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் தேதி தொடங்கி, 1991 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதி முடிவடையும் காலப்பகுதிக்கு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. பின்வரும் பிரிவானது 22ஈஈ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"தொழிற் துணிபு மூலதனத்தை ஏற்பாடு செய்யும் கம்பெனிகளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமானவரியிலிருந்து விலக்களித்தல்

22ஈஈஈ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்துவரும் இலாபங்களும் வருமானமும் தவிர) அத்தகைய கம்பெனி தொழிலைத் தொடங்கிய வரி மதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து பத்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரிவின் நோக்கங்களுக்காக கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும், உற்பத்தியில் அல்லது பொருட்களின் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சிக்கு தொழிற் துணிபு மூலதனத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பு முயற்சியொன்றை மட்டும் கொண்டு நடாத்துவதில் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையனவாகமாட்டா.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு அப்பிரிவின் (7) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (உஉ) என்னும் பந்தியில் ''1981 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1981 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில்

(i) ''அதன் நிருமாணம் 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடைந்தால்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''அத்தகைய ஆளினால் நியமிக்கப்பட்டதும் அதன் நிருமாணம் 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடைந்தது மான'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ii) ''அதன் நிருமாணச் செலவின்மீது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அதன் நிருமாணச் செலவுகள்மீது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(iv) 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வதிவிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனமொன்றில் அடங்கியுள்ள வதிவற்ற இருப்பிட வசதியின் ஏதேனும் கூறு, அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அது பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனைக் கொள்ளலுக்கான விலையின் மீது ஆண்டொன்றுக்குப் பத்துச் சத வீதத்திலான விடுதொகையொன்று;''; அத்துடன்

(இ) அப்பந்திக்கான காப்பு வாசகத்தில் ''அல்லது இப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''அல்லது இப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் அல்லது (iv) ஆம் உட்பந்தியின் '' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்து மேலும் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன்மூலமும்:—

ஆயின், மேலும் (ஏஏ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் அல்லது தேசிய அபிவிருத்தி வங்கியால் வாராக் கடன்கள் அல்லது ஐயுறுபுக் கடன்களின் தொடர்பில் இப்பந்தியின் கீழ் கழிக்கப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, விடயத்திற்கேற்ப அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது அத்தகைய வங்கியின் (ஏஏ என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட) அந்தந்த பொது ஒதுக்கீடுகளிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொது ஒதுக்கீட்டிலுள்ள தொகை

க்கு மேலாக ஏதேனும் பணத்தொகை விஞ்சியிருப்பின் அத்தகைய விஞ்சுதொகை இப்பந்தியின் கீழ்க் கழிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பந்தியின் பந்தி (ஞஞ) என்பதனை பந்தி (ட) என மீள எழுத்திடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் பந்தி (ட) என மீள எழுத்திடப்பட்ட அத்தகைய பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(ண) பிரிவு 32 (2) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கென ஏதேனும் ஒதுக்கீட்டிற்கு அல்லது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட ஏதேனும் பணத்தொகை 23 (1) (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆண்டுக் கொடுப்பனவைத் தவிர).''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் ''(அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''(அ) என்னும் பந்தியில் அல்லது (அஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் viii ஆனது அந்த அத்தியாயத்தின் தலையங்கத்தில் ''வருமானவரி வீதங்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வருமான வரி வீதங்களும், வரி வரவுகளும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதன் பந்தி (iii), பந்தி (iv) பந்தி (v) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

'' (iii) 1984 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11அ என்னும் பாசத்தில்; அல்லது

(iv) 1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஆ என்னும் பாகத்தில்; அல்லது

(v) 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின் ஆனால் 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் 11இ என்னும்'' அத்துடன்

(vi) 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ என்னும்'' அத்துடன்

(2) அப்பிரிவின் (3இ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக, பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(3இ) எவரேனும் ஆளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம், அவ்வாளினால் வேறு எவரேனும் ஆளிடமிருந்து கொடை வாயிலாக அல்லது மரபுரிமை வாயிலாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் சொத்தாண்மை மாற்றத்தினின்றெழும் ஏதேனும் மூலதன சட்டத்தை உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய ஆதனம் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளினால் கொள்ளப்பட்ட தேதியானது இப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவினதும் அல்லது 14 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (xvi) உட்பந்தியின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஆதனம் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளினால் கொள்ளப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்.''

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 32உ என்னும் பிரிவு என்றுற் போன்று பயனுறுதலும் வேண்டும்.

"தொழிலிருந்து ஈட்டும் இலாபங்களின் மீது வரிக்கு எதிரான வரி வரவு

32உ. எந்தத் தனியாளுக்கு 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்றனவோ அந்தத் தனியாளொருவராக அல்லாதவரும் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எந்தத் தனியாளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் (32) (2) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகத்தைத் தவிர) ஏதேனும் தொழிலிலிருந்து ஈட்டப்படும் இலாபங்களை உள்ளடக்குகின்றதோ அந்தத் தனியாளினால் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமானத்திலிருந்து, தொளாயிரம் ரூபாவுக்குச் சமனான ஒரு தொகை அல்லது தொழிலிலிருந்து ஈட்டும் அத்தகைய இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரி என்பவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகை கழிக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் தனியாளின் தொழிலிலிருந்து ஈட்டப்படும் இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற் பாலதான வருமான வரியின் தொகையானது, அந்த வரி மதிப்பீட்டாண்டிற்காக அத்தனியாளின் வரி மதிப்பிடற்பாலதான வருமானத்திற்கு அவ்வரி மதிப்பீட் டாண்டிற்கு அத்தனியாளின் தொழிலிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளனவோ அதே விகிதாசாரத்தை அந்த வரி மதிப் பீட்டாண்டிற்கு அத்தனியாளினால் கொடுக்கற்பாலதான வருமான வரிக்கு எந் தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகையாதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், முப்பத்திமூன்றோடு மூன்றிலொன்றாகவும்; அத்துடன் என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''முப்பத்தி மூன்றோடு மூன்றிலொன்றாகவும்;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் ''வரி மதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் இருபதாகவும்,'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''வரி மதிப்பீட்டு ஆண் டாக இருப்பின் இருபதாகவும், அத்துடன்'' என்னும் சொற்களை யும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) என்னும் உட் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகு த்துவதன் மூலமும்:—

(iii) அந்த வரி மதிப்பீட்டு ஆண்டு 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதே னும் வரி மதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் பதினைந் தாகவும்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்;

''(இ) எந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்தின் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல் அரசாங்கத் தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் பகிரங்கக் கம்பனியின் விடயத்தில், கடன் என்ற வகையி லன்றி, (இதனகத்துப் பின்னர் ''இயைபான வரி மதிப் பீட்டாண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அந்த

வரி மதிப்பீட்டாண்டிற்கான அதன் இலாபங்களிலிருந்து (அ) என்னும் பந்தியின் கீழ் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வரியை அதிலிருந்து கழித்த பின்னர், அந்த இலாபங்களின் மீதியின் இருபத்தைந்து சதவீதத்திற்குச் சமனான தொகையொன்று;

ஆயினும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் வரி மதிப்பிடற்பாலதான வருமானம் 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எந்த இலாபங்கள் மீது கணிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து இயைபான வரி மதிப்பீட்டாண்டில் பகிர்ந்தளிக்கப்படும் எவையேனும் மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டு மொத்தத் தொகையானது—

(i) அத்தகைய மீதியின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாதிருக்குமிடத்து இப்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது; அத்துடன்

(ii) அத்தகைய மீதியின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறைவாயிருக்குமிடத்து அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் இயைபான வரி மதிப்பீட்டாண்டிற்கு எந்த வரிக்குப் பொறுப்பாகின்றதோ அந்த வரியானது, அத்தகைய மீதியின் இருபத்தைந்து சதவீதம் அத்தகைய பங்கிலாபங்களை எந்தத் தொகையினால் விஞ்சுகின்றதோ அந்தத் தொகைக்குச் சமனான ஒரு தொகையாதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள், ஆயுட் காப்புறுதித் தொழிலிலிருந்து அதன் இலாபங்களை உள்ளடக்கமாட்டாதெனக் கருதப்படுதல் வேண்டும்.''

(2) அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில், ''விலை கூறிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பனி'' என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவாறு'', என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அப்பங்கிலாபத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலானவாறு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''தகைமையளிக்கும் பகிர்வொன்றைக் கொண்டிருக்கின்றவாறு அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகத்தின்மீது செலுத்தப்பட்ட முற்பணக் கம்பனி வரியொன்றுக்குச் சமமான தொகையொன்றை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அப்பங்கி

லாபத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான முற்பணக் கம்பனி வரி யொன்றுக்குச் சமமான தொகையொன்றை'', என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

''(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''பங்கிலாபங்களின் தொகையி லிருந்து பங்கிலாபமானது, 1990 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து முப் பத்துமூன்றோடு மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும், பங்கிலாபமானது 1980 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து, இரு பது சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும் கழிக்க உரித் துடையதாதல் வேண்டும்;'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, பங்கிலாபங்களின் தொகையிலிருந்து—

(அ) பங்கிலாபம், 1980, மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து, முப் பத்துமூன்றோடு மூன்றிலொரு சதவீதத்துக்கும்;

(ஆ) பங்கிலாபம், 1980 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து இருபது சதவீதத்துக்கும்; அத்துடன்

(இ) பங்கிலாபம், 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து பதினை ந்து சதவீதத்துக்கும்;

சமமான வருமான வரியைக் கழிக்க உரித்துடையதாதல் வேண்டும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஊ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்;

''(ஊ) பந்தி (ஈ) என்பதன் உட்பந்தி (ii), அல்லது (iii), அல்லது (iv) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் பங்கிலாபமொன்றி லிருந்து செலுத்தப்பட்டவாறு அப்பங்கிலாபத்தின் அத்தகையபாகம் தொடர்பில் வேறு வதிவுள்ள கம்பனிகளால் செலுத்தப்பட்ட முற் பணக்கம்பனி வரி''.

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''சமமான தொகை யொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும், வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,

''சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

'(ஆ) 1980 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனல் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு இருபத்தைந்து சதவீதத்தால் அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து சொல்லப்பட்ட இருபத்தைந்து சத வீதத்திற்குச் சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்; அத்துடன்'; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

'(இ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்குப் பதினேழில் மூன்று சதவீதத்தால் அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து சொல்லப்பட்ட பதினேழில் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்,'.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் 'எட்டு (இ) என்னும் நோக்கங்களுக்காக' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'எட்டு (இ) அத்துடன் 33 (1) (இ) என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக', என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. பிரிவு 85 என்பதற்கு முன்னர் காணப்படும் தலையங்கம், 'உல்லாசப் பிரயாணமும் ஏற்றுமதிகளும் தொடர்புபட்ட கம்பனிகளின்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'உல்லாசப் பிரயாணமும் ஏற்றுமதிகளும் தொடர்புபட்ட ஆட்களின்' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவு இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) 'கம்பனி' என்னும் சொல் (ஆ) என்னும் பந்தியிற் தவிர வேறு எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக, 'ஆள்' என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) பந்தி (ஆ) என்பதில்,

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், 'எந்தப் பணத் தொகை கொண்டுள்ளதோ அந்தவொரு பணத்தொகை என்றும்; அத்துடன்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'எந்தப் பணத் தொகை கொண்டுள்ளதோ அந்தவொரு பணத்தொகை என்னும்' சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (ii) என்னும் உட்பந்தியில், 'எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகை எனவும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'எந்தப் பணத் தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொசை, எனவும், அத்துடன்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(iii) கம்பனியொன்றைத் தவிர எவரேனும் ஆளின் விடயத்தில், அந்த வரி மதிப்பீட்டாண்டுக்காக அந்த ஆளின் மொத்த இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் அவ்வாளின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, 82 ஆம் பிரிவின்கீழ் அல்லது 83 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தைக் கழித்த பின்னர், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவ்வாளினால் கொடுக்கற்பாலதான வருமான வரிக்கு எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத்தொகை எனவும்.''

6 (3) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பில் 'ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளின்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள ஆட்களின்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

(2ஆ) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (2அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் விவரம், அது ஏதேனும் மூலவளத்திலிருந்து வருமானத் தொகை தொடர்பிலானதாயின்—

(அ) வருமானத்தின் அத்தகைய மூலவளம் தொடர்பில் கிரமமான கணக்குகள் பேணப்படின் அத்தகைய கணக்குகள் மீது கணிக்கப்பட்ட தொகையாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வருமானத்தின் அத்தகைய மூலவளம் தொடர்பில் கிரமமான கணக்குகள் பேணப்படவில்லையாயின், விவரத் திரட்டைக் கொடுத்துதவு

கின்ற ஆள் எந்தத் தொகை அந்த மூலவளத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் தொகையென நல்லெண்ணத்துடன் நம்புகின்றாரோ அந்தத் தொகையாதல் வேண்டும்'.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியில் 'இப்பந்தியின் நோக்கங்களுக்காக,' என்பதிலிருந்து அப்பந்தியின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'இப்பந்தியின் நோக்கங்களுக்காக 'வருமானவரி' என்பது—

(அ) 1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு கம்பனியொன்று தொடர்பாக 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பனியால் செலுத்தற்பாலதான வரியை உள்ளடக்குதல் ஆகாது; அத்துடன்

(ஆ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆள் தொடர்பில் (வதிவிடமொன்றினதும் அத்துடன் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியத்தினதும் தேறிய ஆண்டுப் பெறுமதியைத் தவிர) இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவையும் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கணிப்பிடுகையில் எந்த இலாபங்களும் வருமானமும் கருத்திற் கொள்ளப்பட்டிருப்பின் அவை தொடர்பில் அத்தகைய விலக்களிப்பு அத்தகைய முற்போந்த ஆண்டில் இல்லாதொழிந்திருக்குமோ அந்த இலாபங்களும் வருமானமுமாகிய எவையேனும் இலாபங்களும் வருமானமும் (இதனகத்துப் பின்னர் 'முற்போந்த ஆண்டு' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டிற்காக அத்தகைய ஆளினால் செலுத்தற்பாலதான வருமானவரி என்று பொருள்படும்'.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'(ஈஈ) ஆதனத்தின் கைப்பற்றுகை எதுவும் பயனுறுத்தப்படவில்லையென்பது எவ்வாறிருப்பினும் எவரேனும் தவணை தவறியவருக்கெதிராக இப்

பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் எவரேனும் அலுவலரால் கூறப்பட்ட நியாயமான செலவுகளை அத்தகைய தவணை தவறியவரிடமிருந்து அறவிடுவது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.'.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

'சொந்தக்காரர்' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

'பங்காண்மை' என்பது ஏதேனும் பங்காண்மையின் பங்காளர் ஒருவரின் பிரிக்கப்படற்பாலதான இலாபங்கள் அல்லது பிரிக்கப்படற்பாலதான நட்டம் வேறு எவரேனும் ஆளுடன் அல்லது பங்காண்மையுடன் பகிர்ந்து கொள்ளப்படும் ஏதேனும் கையளிப்பு, நம்பிக்கைப்பொறுப்புக் கொடை, உடன்படிக்கை, சாட்டுதல்உரிமை நிருணயம் அல்லது வேறு ஒழுங்கேற்பாடு எதனையும் உள்ளடக்குதல் வேண்டும்;

23. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் iv என்பதில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படு படுகின்றது—

(1) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் ''1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று ஆனால் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பாகத்தின் முடிவில், பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(இ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு—

முதல் 200,000 ரூபாமீது—இல்லை

அடுத்த 50,000 ரூபாமீது—5 சதவீதம்

அடுத்த 50,000 ரூபாமீது—10 சதவீதம்

மீதியின்மீது—சதம் சதவீதம்.

24. (1) இச்சட்டத்தின் 7 (1) அத்துடன் 7 (2) என்னும் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 (1) என்னும் பிரிவிற்குச் செய்யப்பட்ட

திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 மார்ச்சு 6 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 11 (1) அத்துடன் 11 (2) ஆகிய பிரிவுகளினால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 (2) (அது முதலாவது அட்டவணையின் 'ஈ' என்னும் பாகத்திற்குத் தொடர்புறும் அளவுக்கு) அத்துடன் 32 (3இ) எனினும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1988 மார்ச்சு 25 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 13 (2) என்னும் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 (1) (இ) என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1985 திசெம்பர் 31 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 14 ஆம், அத்துடன் 11 (2) ஆம் பிரிவுகளினால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆ. அத்துடன் 32 (2) என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1988 செத்தெம்பர் 8 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. இச்சட்டத்தின் சிங்களஉரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஒதுக்கீடு (திருத்தச்) சட்டம்

*[1990, ஆகஸ்ட் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1989 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது, 1990 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஒதுக்கீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1989 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''நாலாயிரத்து இருநூற்றுப் பத்தொன்பதுகோடி எண்பது இலட்சம் ரூபாவினை'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஐயாயிரத்து முந்நூற்றுப் பத்தொன்பது கோடி எண்பது இலட்சம் ரூபாவினை'' என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990ம் ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க. வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்

*[1990, நவம்பர் மாதம் 12 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பாகம் IV ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பாகமானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் பாகம் IV அ என்றவாறு பயனுறுதலும் வேண்டும்:—

''பாகம் IV அ

**இலக்கமிடப்பட்ட கணக்குகள்**

34அ. (1) பணச் சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஆக்கப்பட்ட கட்டளைமூலம், வதிவற்றவர்களான அல்லது வெளிநாட்டுப் பிரசைகளாகவுள்ள வாடிக்கையாளர்களின் சார்பில் இலக்கமிடப்பட்ட வங்கித் தொழிற் கணக்குகளினைத் தொழிற்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றை அங்கீகரிக்கலாம்.

(2) இப்பாகத்தின்கீழ் வெளிநாட்டுப் பிரசைகளாகவுள்ள அல்லது வதிவற்றவர்களாகவுள்ள வாடிக்கையாளர்களுக்குப் பணச் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்படும் இலக்கமிடப்பட்ட கணக்கு வசதிகளானவை, நடைமுறைக் கணக்குகள், வைப்புக் கணக்குகள் அத்துடன் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றிற்கு நீடிக்கப்படலாம்; ஆனால் கடன் வசதிகளுக்கு நீடிக்கப்படுதல் ஆகாது.

(3) இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் இலக்கமிடப்பட்ட கணக்கில் வைப்பிலிடுவதற்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட பணங்கள் யாவும் பணச் சபையால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வெளிநாட்டு நாணயங்களில் இருத்தல் வேண்டும்.

(4) இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்டவோர் இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரை அத்தகைய வங்கியின் பணிப்பாளர் சபையால்

தீர்மானிக்கப்படக்கூடியவாறான வங்கியின் அத்தகைய சிரேட்ட அலுவலர்கள் மட்டுமே அறியக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

இரகசியம் பேணல்

34ஆ. (1) வாடிக்கையாளரொருவரின் சார்பில் ஓர் இலக்கமிடப்பட்ட கணக்கைத் தொழிற்படுத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் ஒவ்வோர் அலுவலரும் அத்துடன் அத்தகைய கணக்குத் தொடர்பில் அத்தகைய வங்கியின் பதிவேடுகளை, பதிவுச் சுவடிகளை, கடிதத் தொடர்புகளை அல்லது ஏதேனும் பிற பொருளை அவரது தகுதி அல்லது பதவிகாரணமாக அணுகுவதற்கு வழி உள்ள ஒவ்வோர் ஆளும், கணக்கு எந்தவாடிக்கையாளர் தொடர்பிலானதோ அந்த வாடிக்கையாளரின் நலன்களுக்காக, அதனகத்துள்ள பொருளடக்கங்கள் தொடர்பில் முழுமையான இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் கீழ்ப் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று ஒரு வாடிக்கையாளரின் சார்பில் இலக்கமிடப்பட்ட ஒரு கணக்கைத் திறக்குமிடத்து—

(அ) அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரர் அவ்வாறு செய்வதற்கு அவரது அனுமதியைக் கொடுத்தால்; அல்லது

(ஆ) அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்குத் தொடர்பில் எழுந்த ஒரு வங்கித்தொழிற் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரால் அல்லது அவருக்கெதிராக அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் அல்லது அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டால், அல்லது

(இ) அவர்—

(i) போதைப் பொருட்கள் அல்லது அச்சுறுத்தலின் பேரில் ஊர்திகளைத் திசை திருப்புதல் மீதான சருவதேச சமவாயமொன்றைப் பயனுறுத்தும் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் குற்றவியல் நடவடிக்கைகளில் அச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால்;

(ii) அத்தகைய கணக்கிலுள்ள பணங்கள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயலை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்தப்படுகின்றன என்ற காரணத்தின் மீது அதற்கான விண்ணப்பமொன்றின்மீது ஆக்கப்பட்ட உயர் நீதிமன்றக் கட்டளையொன்றினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டால்,

அல்லாமல் இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரது ஆளடையாளம் முற்றாக அந்தரங்கமாக வைத்திருக்கப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் ஒவ்வோர் அலுவலரும் அத்துடன் உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்ற ஒவ்வோர் ஆளும், அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரது பெயர் அல்லது

ஆளடையாளம் சம்பந்தமான எத்தன்மையதுமான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, கூட்டுத்தாபனத்திற்கு, வங்கிக்கு, நீதிமன்றத்திற்கு, நிறுவனத்திற்கு, கூறுக்கு, திணைக்களத்திற்கு, அலுவலருக்கு, முகவருக்கு, இலங்கை அரசாங்கத்தின் அல்லது வேறு ஏதேனும் அரசாங்கத்தின் பிரதிநிதிக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது இயற்கை ஆளுக்கு, நீதித்துறை அல்லது இராணுவ அதிகாரிக்குக் கொடுக்கவோ வெளிப்படுத்தவோ அல்லது பகிரங்கப்படுத்தவோ கூடாது.

ஒழுங்கு விதிகள்

34இ. (1) பிரிவு 20 அல்லது பிரிவு 21 இன் நோக்கங்களுக்காக உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியின் இலக்கமிடப்பட்ட கணக்குகளைப் பேணுதல் தொடர்பாகவும், வைப்புப் பொறுப்புக்களைக் கணக்கீடு செய்வதற்காக அத்தகைய கணக்குகளில் இருக்கும் பணத்தை உள்ளடக்குவது அல்லது தவிர்ப்பது உட்பட, அத்தகைய கணக்குகள் மேல் விதிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் தொடர்பாகவும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

34ஈ. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக—

பொருள் கோடல்

(i) ''வெளிநாட்டுப் பிரசை'' என்ற சொல்லமைப்பு இலங்கைப் பிரசை அல்லாத ஓர் ஆள் அல்லது இலங்கைப் பிரசையொருவராகவும் அத்துடன் வேறு ஏதேனும் நாட்டினது பிரசையொருவராகவும் உள்ளவரான வோர் ஆள் எனப் பொருளாகும்;

(ii) ''வதிவற்றவர்'' என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) ''இலக்கமிடப்பட்ட கணக்கு'' என்ற சொல் அமைப்பு, இப்பாகத்தின்கீழ்ப் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியில் திறக்கப்பட்டதும் ஓர் இலக்கத்தினால், குறியீட்டுச் சொல்லினால் அல்லது பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வழியினால் மட்டுமே அடையாளம் காணப்படுகின்றதுமான ஒரு கணக்கு எனப் பொருளாகும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(i) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம்:—

(1அ) பிரிவு 34ஆ என்பதன் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன்மேல், மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய தவறு அறிவுடன் அல்லது வேண்டுமென்றே அல் லது அது வேறு எவரேனும் ஆளுக்குச் சேதம் அல்லது தீங்கு விளைவிக்கும் என நம்புவதற்கான காரணத்துடன் புரியப் பட்டவிடத்து, ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதிக்குக் கடூழிய மறி யற்றண்டனைக்கும் அத்துடன் பத்து இலட்சம் ரூபா அல்லது அத்தகைய கணக்கில் இருப்பதாகப் பகிரங்கப்படுத்தப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட தொகையின் இரு மடங்கு என்பவற்றில் எந்தத் தொகை கூடியதோ அந்தத் தொகையி லான குற்றப்பணம் ஒன்றை இலங்கை நாணயத்தில் செலுத்து வதற்கும் ஆளாதல் வேண்டும்.''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''(1) ஆம் உட்பிரிவின்கீழ்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(1) ஆம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின்கீழ்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதே னும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1990 நவெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (Lv) என்னும் உட்பந்தியின் (iii) ஆம் விடயத்தில் ''நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின்; அத்துடன்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்;'' என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பந்தியின் (Lvi) என்னும் உட்பந்தியில் ''கமத்தொழிற் காப்புறுதிச் சபையின்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''கமத்தொழிற் காப்புறுதிச் சபையின்; அத்துடன்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:—

(Lvii) 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபையின்;

(Lviii) சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவின்; அத்துடன்

(Lix) 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்—

(அ) (viii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(ix) 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஊழியர் ஒருவரின்;' அத்துடன்

(ஆ) ''விடயங்கள் (i), (ii), (iii), (iv), (v), (vi) அல்லது (vii) என்பனவற்றில் குறிப்பிடப்பட்டவரான'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''விடயங்கள் (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii), (viii) அல்லது (ix) என்பனவற்றில் குறிப்பிடப்பட்டவரான'' என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;'' அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் ''சர்வதேச நீர்ப்பாசன நிறுவனத்தினால் அல்லது கொழும்புத் திட்டப் பணியகத்தினால், அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியினால்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''சர்வதேச நீர்ப்பாசன நிறுவகத்தினால் அல்லது கொழும்புத் திட்டப் பணியகத்தினால், ஆசிய அபிவிருத்தி வங்கியினால், உலக வங்கியினால், அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினால்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''இச்சட்டத்தின் 17 ஆம், 17அ ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 20அ ஆம், 20ஆ ஆம், 20இ ஆம், 21 ஆம், 22 ஆம், 22அ ஆம், 22ஆ ஆம், 22இ ஆம் அல்லது 22ஈ ஆம்'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''இச்சட்டத்தின் 17 ஆம், 17அ ஆம், 17இ ஆம், 17ஈ ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 20அ ஆம், 20ஆ ஆம், 20இ ஆம், 21 ஆம், 22 ஆம், 22ஆ ஆம், 22இ ஆம், 22ஈ ஆம், 22ஈஈ ஆம் அல்லது 22ஈஈஈ ஆம்'' என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (xv) ஆம் உட்பந்தியில் ''கைமாற்றப்படுவதன்மீதும்; அத்துடன்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''கைமாற்றப்படுவதன் மீதும்;'' என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பந்தியின் (xvi) ஆம் உட்பந்தியில் ''மூலதன வருமான மிகை'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''மூலதன வருமான மிகை; அத்துடன்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(3) (xvi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

(xvii) 1990 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் எவரேனும் தனியாளினால் வைத்திருக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனையின் மீதும் (அத்தகைய விற்பனைக்கு நேர் முன்னர் ஏதேனும் தொழிலினது சொத்துக்களின் பாகமாகவமைந்த ஏதேனும் ஆதனம் தவிர), முழு விற்பனை வரும்படிகளும் அத்தகைய விற்பனைத் தேதியிலிருந்து ஓராண்டினுள் ஆனால் 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர், ஏலவேயுள்ள பங்கு எதுவும் தவிர பின்வரும் ஏதேனும் கம்பனியினுள் ஏதேனும் சாதாரணப் பங்கைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்படின், அதாவது—

(அ) 17இ ஆம் பிரிவில் அல்லது 22ஈஈஈ ஆம் பிரிவில் அல்லது 22ஈஈஈஈ ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனியில், அல்லது

(ஆ) 17உ ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் கம்பனியில், அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட பணத்தொகை அத்தகைய பொறுப்பு முயற்சியின் உற்பத்தித்திறனை விசாலிக்கும் நோக்கத்துக்காக மட்டுமேயென அத்தகைய கம்பனியினால் அத்தாட்சிப்படுத்தப்படின்,

அத்தகைய விற்பனையின்மீதும்:

ஆயின், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய முதலீடு தொடர்பிலான விடு தொகையொன்று ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தனியாளின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து 31 ஆம் பிரிவின்கீழ் கழிக்கப்படின் ஏற்புடையனவாதலாகாது.

ஆயின், மேலும், அத்தனியாளின் இறப்பின் மூலமாகவன்றி வேறு வகையாக அத்தகைய கொள்வனவுத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளினுள் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் பங்கிலான ஏதேனும் சொத்தாண்மை மாற்றம் இடம்பெறுமிடத்து:—

(i) எந்தப் பங்கு தொடர்பில் சொத்தாண்மை மாற்றம் இடம்பெறுகின்றதோ அந்தப் பங்கைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்பட்ட பணத்தொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாகவுள்ள அத்தகைய மூலதன வருமானமிகையின் அத்தகைய பாகம் தொடர்பில் இவ்வுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வருமானவரி விலக்களிப்பு வழங்கப்பட்டிராவிடின் அத்தகைய மூலதன வருமானமிகை எழுந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய தனியாள் ஆளாகவிருந்திருக்கும் வருமானவரி; அத்துடன்

(ii) அத்தகைய மூலதனலாபமேற்பட்ட மதிப்பீட்டாண்டுக்கான வருமானவரி விதிப்பனவு

என்பவற்றுக்கிடையிலான வித்தியாசத்தைக் கொண்ட மேலதிக வரி மதிப்பீடொன்று, இச்சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், அத்தனியாள் தொடர்பில், அத்தகைய விற்பனை செய்யப்பட்ட வரி மதிப்பீட்டாண்டுக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வரி மதிப்பீட்டறிவித்தல், மேன்முறையீடு, ஏனைய நடவடிக்கைகள் என்பன தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய மேலதிக வரி மதிப்பீட்டுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக ''எந்தப் பங்கைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்பட்ட பணத்தொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாகவுள்ள அத்தகைய மூலதன வருமான மிகையின் அத்தகைய பாகம்'' என்ற சொல்லமைப்பு அத்தகைய மூலதன வருமான மிகை முழுவதும் இப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு விற்பனை வரும்படிகளுக்கும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தை எந்தப் பங்கு தொடர்பில் சொத்தாண்மை மாற்றம் இடம்பெறுகின்றதோ அந்தப் பங்கைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்படவுள்ள பணத் தொகையைக் கொண்டுள்ள பணத்தொகை என்று பொருளாகும்;

(xviii) 22ஈஈஈ ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி மூலதனக் கம்பனி வேறேதேனும் கம்பனியில் வைத்திருக்கும் ஏதேனும் பங்கு அல்லது பங்குத் தொகுதி அதனால் விற்பனை செய்யப்படுவதன் மீதும்;

(xix) 22ஈஈஈஈ ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பினால் அல்லது பரஸ்பர நிதியத்தினால் வேறேதேனும் கம்பனியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் பங்கு அல்லது பங்குத் தொகுதி அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பினால் அல்லது பரஸ்பர நிதியத்தினால் விற்பனை செய்யப்படுவதன்மீதும்; அத்துடன்

(xx) ஏதேனும் கூறு எவரேனும் ஆளினால் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குப்பின் ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பில் அல்லது ஏதேனும் பரஸ்பர நிதியத்தில் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படும் அத்தகைய கூறு அத்தகைய ஆளினால் விற்பனை செய்யப்படுவதன்மீதும்.''.

(xxi) விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பனியொன்றின் ஏதேனும் பங்கு எவரேனும் ஆளினால் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டின் பின்னர், பங்கின் சொத்தாண்மையிலான மாற்றத்தின்மீதும்.''

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 17ஆ, 17இ, 17ஈ, 17உ, 17ஊ, 17எ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும்:—

ஏதேனும் கொள்வனவு நிலையத்தின் இலாபங்களையும் வருமானத்தையும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்

17ஆ. (1) (மூலதனச் சொத்துக்களின் விற்பனையினாலான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர) (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியின் (3) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், அத்தகைய பொறுப்பு முயற்சி தொழில் நடாத்தத் தொடங்கிய வரி மதிப்பீட்டாண்டு தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுக் காலப் பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) 1990 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொழில் நடாத்தத் தொடங்கியது;

(ஆ) கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்தல் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையின்மீது, 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலினால், இப்பிரிவு ஏற்புடையதாக ஒரு பொறுப்பு முயற்சியாகவுள்ளது என அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டது;

(இ) தொகையாகக் கருந்தேயிலை, கிறேப் இறப்பர், தகட்டு இறப்பர் ,கழிவு இறப்பர், தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய், கொப்பறா, உடன் தேங்காய்கள், தென்னந்தும்பு அல்லது இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படச் கூடியவாறான அத்தகைய வேறுபொருள் தவிர, ஏதேனும் கமத்தொழில் அல்லது ஏற்றுமதிசார் பொருளை மீள விற்பனைக்கெனக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளது; அத்துடன்

(ஈ) முன்னர் உளதாயிருந்த ஏதேனும் தொழிலைப் பிளவுபடுத்தல், மீளவமைத்தல் அல்லது கொள்ளுதல் மூலம் உருவாக்கப்படாதது.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ''ஏதேனும் கமத்தொழில் அல்லது ஏற்றுமதிசார் பொருள்'' என்ற சொல்லமைப்பு பின்வருமாறு பொருளாகும்:—

(i) ஏதேனும் கமத்தொழில் விளைபொருள்; அல்லது

(ii) ஏதேனும் கமத்தொழில் விளைபொருளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பொருள்; அல்லது

(iii) ஏற்றுமதிக்காக ஏற்றுமதியாளரொருவருக்கு வழங்கப்படவுள்ள உற்பத்தி செய்யப்பட்ட பொருள்.

17இ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், அத்தகைய கம்பெனி தொழில் கொண்டு நடாத்தத் தொடங்கிய வரி மதிப்பீட்டாண்டு தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) 1990 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொழில் கொண்டு நடாத்தத் தொடங்கியதும்;

(ஆ) கைத்தொழில்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையின்மேல், 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால், இப்பிரிவு எக்கம்பெனிக்கு ஏற்புடையதாகின்றதோ அக்கம்பெனியொன்றாக அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்; அத்துடன்

(இ) (i) கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் அல்லது கைத்தொழில் நடைமுறைகள் தொடர்பில் முன்னோடித் தன்மையினதான, கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்றை; அல்லது

(ii) உற்பத்தி நடைமுறைகளில் அல்லது கணனிமென்கலவகைகளும் கணனி தொடர்புடைய அபிவிருத்தி அல்லது கைத்தொழில் வடிவமைப்பு என்பவற்றில் பயிற்சி வழங்குவதற்கான பொறுப்பு முயற்சியொன்றைக் கொண்டு நடாத்துவதில் மாத்திரம் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆயினும், அத்தகைய பொறுப்பு முயற்சியானது, முன்னர் உளதாயிருந்த ஏதேனும் தொழிலைப் பிளவுபடுத்தலினால் மீளவமைத்தலினால், அல்லது கொள்ளுதலினால் உருவாக்கப்பட்ட பொறுப்பு முயற்சியாக இருத்தலாகாது.

17ஈ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையினாலான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்

குட்பட்ட இலாபங்களும் வருமானமும் அத்தகைய கம்பெனி தொழில் கொண்டு நடாத்தத் தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுக் காலப் பகுதியொன்றுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) 1990 சனவரி 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பின்னர் தொழில் கொண்டு நடாத்தத் தொடங்கியது;

(ஆ) கைத்தொழில்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையின்மேல், 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் இப் பிரிவு ஏற்புடையதாகும் கம்பெனியொன்றாக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டது;

(இ) ஏதேனும் அமைவிடத்தில் பொருட்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் தயாரிப்பிற்கு அல்லது உற்பத்திக்கு இருபதுக்குக் குறையாத தொழில் முயற்சிகள் ஒவ்வொன்றினதும் பிரத்தியேகப் பாவனைக்கு அந்த அமைவிடத்தில் ஒவ்வொன்றும் இரண்டாயிரம் சதுர அடிக்குக் குறையாத தள இடப்பரப்பு உட்பட உள்ளமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்யும் ஏதேனும் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துவதில் மாத்திரம் ஈடுபட்டிருப்பது;

ஆயினும் அத்தகைய பொறுப்பு முயற்சி முன்னர் உளதாயிருந்த ஏதேனும் தொழிலைப் பிளவுபடுத்தலினால், மீளவமைப்பதினால் அல்லது கொள்ளுதலினால் உருவாக்கப்பட்ட பொறுப்பு முயற்சியாக இருத்தலாகாது.

17உ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் III ஆம் பாகத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கரை கடந்த கம்பனியின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையினாலான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர), 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், (ஆணையாளர் தலைமையதிபதி நியாயமான செலவெனக் கருதுகின்ற ஏதேனும் தொகையைக் கழித்து) அத்தகைய இலாபங்களும் வருமானமும் இலங்கைக்கு அனுப்பப்படின், அத்தகைய கம்பனி அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வரி மதிப்பீட்டாண்டு தொடங்கிய ஐந்தாண்டுக் காலப் பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) இப்பிரிவு ஏற்புடையதாகும் பொறுப்பு முயற்சியொன்றாக 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளி

யிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டது; அத்துடன்

(ஆ) காப்புறுதி அல்லது வான்சேவை அல்லது கடன்களுக்குப் பொறுப் பேற்றல் அல்லது கடன்களை ஒன்றிணைத்தல் அல்லது சர்வதேச உசாத்துணை அல்லது அத்தகைய சேவைகளுள் இரண்டின் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் ஏதேனும் சேர்க்கையிலான சேவைகளை ஏற்பாடு செய்தல் தொடர்பாகக் கரையின் மீதான அல்லது கரை கடந்த கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டது.

17ஊ. (1) பண்டங்களை அல்லது பொருட்களைத் தயாரிப்பதற்கான அல்லது உற்பத்தி செய்வதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியின் விசாலிப்புக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதானதும் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டது மான இலாபங்களும் வருமானமும், இயைபான தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண் டும்.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் பொறுப்பு முயற்சி க்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) இயைபான தேதியிலிருந்து பன்னிரண்டு மாத காலப் பகுதிக்குள் அதன் உற்பத்தித் திறனை விசாலிப்பதில் 50 இலட்ச ரூபாத் தொகைக் குக் குறையாத புதிய மூலதனச் செலவினத்தை உற்றுள்ளது; அத் துடன்

(ஆ) கைத்தொழில்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரின் விதப்புரையின்மேல், இப்பிரிவு ஏற்புடையதாகும் பொறுப்பு முயற்சியாகவுள்ளதென 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டது; அத்துடன்

(இ) அத்தகைய பொறுப்பு முயற்சியில் இயைபான தேதியன்று தொடங்கு கின்ற ஆண்டின் கடைசி நாளன்று தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவர் களும் அவர்கள் ஒவ்வொருவரும் தொடர்பில் ஆணையாளர் தலைமை யதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியத்துக்கு கிரம மான உதவுதொகைகள் செலுத்தப்பட்டு வரும் ஊழியர்களின் எண் ணிக்கை இயைபான தேதிக்கு நேர் முற்போந்த பன்னிரண்டு மாதங் களுக்கும் குறையாத தொடர்ச்சியான ஒரு காலப்பகுதிக்கு அப்பொறு ப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த ஊழியர்களின், எண் ணிக்கையை இருபத்தைந்துக்குக் குன்றயாமல் விஞ்சுகின்றதென அது தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுவது;

ஆயின், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தாண்டுக் காலப் பகுதியினுள் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டின்போது எந் நேரத்திலும் அத்தகைய பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ளவர்களும் அவர்கள் ஒவ்வொருவரும் தொடர்பில் ஆணை யாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய

நிதியத்துக்குக் கிரமமான உதவுதொகைகள் செலுத்தப்பட்டு வருவது மான ஊழியர்களின் எண்ணிக்கை இருபத்தைந்தினால் அல்லது அதற்கு அதிசமானதால் அத்தகைய உச்ச எல்லையை விஞ்சாதவிடத்து, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அந்த வரி மதிப்பீட்டாண்டுக்காக அப் பொறுப்பு முயற்சியின் அத்தகைய இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விளக்களிக்கப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காகவும் ஏதேனும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சி தொடர்பாகவும்—

(அ) ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பாக ''விசாலிப்புக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான இலாபங்களும் வருமானமும்'' என்ற சொல்லமைப்பு பின்வருவதன் விஞ்சுதொகை என்று பொருளாகும்:—

(i) கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலினால் அவ்வரிமதிப்பீட்டாண்டின் அல்லது அதற்கண்மையில் இலங்கையில் நிலவிய பணவீக்கத்தைக் கருத்திற் கொண்டு அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு அப்பொறுப்பு முயற்சியின் (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையினாலான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர), அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் பத்து சதவீதத்தினால் அல்லது அத்தகைய வேறு சதவீதத்தினால் குறைக்கப்பட்ட, 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் பின்வருவதன் மேலான விஞ்சுதொகை;

(ii) அப்பொறுப்பு முயற்சியின் அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் ஆண்டுச் சராசரித் தொகையின் விஞ்சுதொகை; பொறுப்பு முயற்சியானது இயைபான தேதிக்கு முன்னர் மூன்றாண்டுகளுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குத் தொழில் கொண்டு நடாத்தியுள்ளவிடத்து அத்தகைய சராசரி தொகையானது இயைபான தேதிக்கு நேர் முற்போந்த மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு அல்லது இயைபான தேதிக்கு முன்னர் மூன்றாண்டுகளுக்குக் குறைவான காலப்பகுதிக்குப் பொறுப்பு முயற்சியானது தொழில் கொண்டு நடாத்தியுள்ளவிடத்து அது தொழில் கொண்டுநடாத்தியுள்ள முழுக் காலப்பகுதிக்கும் கணிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ''இயைபான தேதி'' என்ற சொல்லமைப்பு, 1990 ஏப்பிரல் மாதத்துக்கு முன்னதாக இல்லாததும் 1992 மார்ச்சு மாதத்துக்குப் பிந்தாததும் அப்பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆளினால் அல்லது பொறுப்பு முயற்சியானது ஒரு பங்குடைமையினால் கொண்டு நடாத்தப்படுமிடத்து அப்பங்குடைமையின் முந்துறு பங்காளர்களினால் தெரிவு செய்யப்பட்டதும், அம்மாதத்தினது கடைசி நாளிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் எழுத்தில் ஆணையாளர் தலைமை

யதிபதிக்கு அறிவிக்கப்பட்டதுமான ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாம் நாள் என்று பொருளாகும்:

ஆயின், இயைபான தேதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அவ்வாறு அறிவிக்கப்படாதவிடத்து இயைபான தேதியானது 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) ''புதிய மூலதனச் செலவினம்'' என்ற சொல்லமைப்பு, அதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு மூன்வைக்கப்பட்ட (ஏதேனும் காணி அல்லது ஏதேனும் கட்டிடம் தவிர) புதிய உற்பத்திச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதில் அப் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆளினால் அல்லது டங்காண்மையால் உறப்பட்ட செலவினம் என்று பொருளாகும்;

ஆயின், புதியதாகவிராத உற்பத்திச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதில் உறப்பட்ட செலவினம், ஆணையாளர் தலைமையதிபதிக்குப் பின்வருமாறு எண்பிக்கப்பட்டாலொழிய, புதிய மூலதனச் செலவினம் அல்லதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(i) அந்த உற்பத்திச் சாதனங்களின் கொள்வனவு [redacted] ரீதியில் நியாயப்ப[redacted]பாலது; அத்துடன்

(ii) கொள்வனவு விலை அத்தகைய உற்பத்திச் சாதனங்களின் நியாயமான சந்தைப் பெறுமதியைக் குறிக்கின்றது;

ஆயின், மேலும், இயைபான தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அப் பொறுப்பு முயற்சியின் சொத்துக்களின் பாகமாக வமைந்த ஏதேனும் சாதனத்தை இயைபான தேதிக்குப் பின்னர் பதிலீடு செய்வதற்கென உறப்பட்ட ஏதேனும் செலவினம் புதிய மூலதனச் செலவினம் அல்லதெனக் கருதப்படுதல் வேண்டும்.

17எ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஓம்னிவசு வண்டியின் தொழிற்பாட்டிலிருந்து பயணிகளை இடம்பெயர்ப்பதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் அந்த வசுவண்டி மோட்டார் வாகனப் பதிவாளரினால் முதன்முதலாகப் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் ஓம்னிவசு வண்டிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) புதியதாகவுள்ளது;

(ஆ) 1990 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர் மோட்டார் வாகனப் பதிவாளரினால் முதன்முதலாகப் பதிவு செய்யப்பட்டது; அத்துடன்

(இ) சாரதி நீங்கலாக முப்பது ஆட்களுக்குக் குறையாதவர்களுக்கு ஆசன வசதி உடையது.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் பயணிகளை இடம்பெயர்ப்பதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பாகவும் ''ஏதேனும் ஒம்னிவசு வண்டியிலிருந்தான இலாபங்களும் வருமானமும்'' என்ற சொல்லமைப்பு, பயணிகளை இடம்பெயர்ப்பதிலிருந்தான அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் அப்பொறுப்பு முயற்சியினால் தொழிற்படுத்தப்பட்ட எல்லா ஒம்னிவசு வண்டிகளினாலும் பயணிகளை இடம்பெயர்ப்பதிலிருந்தான அப்பொறுப்பு முயற்சியின் கூட்டு மொத்த முழு வரவுகளுக்கும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தை அந்த ஒம்னிவசு வண்டியினால் பயணிகளை இடம்பெயர்ப்பதிலிருந்தான முழு மொத்த வரவுகளுக்குக் கொண்டுள்ள பணத்தொகை என்று பொருளாகும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: —

''விலக்களிக்கப்படுவதாதல் வேண்டும்.'' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்—

''விலக்களிக்கப்படுவதாதல் வேண்டும்.''

ஆயின், மேற்சொல்லப்பட்ட முறையில் அத்தகைய வழங்கலை நாணயமாற்றுக் கடிதத்தினால் மேவுவது உசிதமானதல்ல அல்லது செயல்முறைக்குகந்தல்லவென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, அத்தகைய வழங்கல் அவ்வாறு மேவப்படவில்லையென்பதைப் பொருட்படுத்தாது இப்பிரிவின் கீழான விலக்களிப்பு பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாதல் வேண்டுமென அவர் பணித்தல் வேண்டும்:—

(அ) அத்தகைய வழங்கல், இலங்கையிலுள்ள ஒரு வங்கியில் திறக்கப்பட்ட நாணயமாற்றுக் கடிதத்தினால் மேவப்படின் அல்லது அத்தகைய வழங்கல் தொடர்பான ஏற்றுமதிகள் உண்மையில் செய்யப்பட்டனவென அவரைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வேறு ஆவணச் சான்று முன்வைக்கப்படின்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏற்றுமதிகளின் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதி எந்த வங்கிக்கு அனுப்பப்படுகிறதோ அந்த வங்கியினால் அத்தகைய வழங்கல் தொடர்பான ஏற்றுமதிகளின் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதியின் பெறுகை அத்தாட்சிப் படுத்தப்படின்.''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 22ஈஈஈஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது ஏதேனும் பரஸ்பர நிதியத்தின் இலாபங்களையும் வருமானத்தையும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்

22ஈஈஈஈ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் (23 ஆம் பிரிவின் கருத்துக்குட்படத் தேய்மானத்துக்கான விடுதொகையொன்று அது தொடர்பில் அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர) இலாபங்களும் வருமானமும், அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் எந்த வரி மதிப்பீட்டாண்டில் தொழில்கொண்டு நடாத்தத் தொடங்கியதோ அந்த வரி மதிப்பீட்டாண்டு தொடங்கியதிலிருந்து கணக்கிடப்பட்ட ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவு ஏற்புடையதாகும் கூறு நம்பிக்கைப்பொறுப்பாக அல்லது பரஸ்பர நிதியமாக 1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு அல்லது பரஸ்பர நிதியத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பந்தி (உஉஉ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

''(உஉஉஉ) அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில் அல்லது தொழிலில் அவரினால் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் உற்பத்தி செய்யும் நடைமுறையை அவரது சார்பாக உரிமமளிப்பதற்கான பிரதி பயனாக 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று, அல்லது அதற்குப் பின்னர் அவரினாற் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் பத்திலொன்றுக்குச் சமமான ஒரு பணத்தொகை:

ஆயின், முற்போந்த வரி மதிப்பீட்டாண்டுகளில் கழிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகைகள் அத்தகைய கொடுப்பனவுத் தொகைக்குச் சமமாகவிருப்பின், அத்தகைய ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில் எவரேனுமாளுக்கு இப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழான கழிப்பனவெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.''

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை முறையே அச்சட்டவாக்கத்தின் 23அ, 23ஆ என்ற பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

" இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிப்பதில் குறித்தசில இரட்டைக் கழிப்பனவுகள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்."

23அ. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட (மொத்தமாகக் கருந் தேயிலை, கிறேப் இறப்பர், தகட்டு இறப்பர், கழிவு இறப்பர், தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய், கொப்பறா, உடன் தேங்காய்கள், தென்னந்தும்பு, அல்லது இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு கசெற்றில் வெளி

யிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு பொருள் தவிர) ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் வதிவுள்ள ஆளின் இலாபங்களை அல்லது வருமானத்தை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதிச் செயற்பாட்டின் நோக்கத்துக்காக அத்தகைய ஆளினால் செலவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை தொடர்பில் அவ்வாறு செலவிடப்பட்ட பணத் தொகையின் இரட்டிப்புத் தொகைக்குச் சமமான தொகையொன்று கழிப்பனவாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான கழிப்பனவெதுவும் பின்வருமாறு செலவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை தொடர்பில் அனுமதிக்கப்படுதலாகாது:—

(அ) பின்வருவோருக்குச் செலுத்தப்பட்ட ஊதியம் என்றவகையாக—

(i) ஏதேனும் வியாபார முறைச் சந்தையில் அல்லது வியாபாரக் கண்காட்சியில் பங்குபற்றுகின்ற இருவருக்கு மேற்பட்ட ஊழியர்கள்;

(ii) ஏதேனும் வியாபார அலுவலகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட மூவருக்கு மேற்பட்ட ஊழியர்கள்; அல்லது

(iii) செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட தொகையை அத்தகைய ஊதியம் விஞ்சுமாயின் ஊழியர் எவரும்,

இப்பந்தியின் நோக்கங்களுக்காக—

(i) வியாபார முறைச் சந்தை, வியாபாரக் கண்காட்சி அல்லது வியாபார அலுவலகம் தொடர்பாக ''ஊழியர்'' என்பது, அத்தகைய வியாபார முறைச் சந்தை அல்லது வியாபாரக் கண்காட்சி எந்தக் காலப்பகுதியினுள் நடாத்தப்படுகிறதோ அல்லது அத்தகைய வியாபார அலுவலகம் திறக்கப்படுகிறதோ அந்தக் காலப் பகுதி தொடங்குவதற்கு நேர்முற்போந்த பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான காலப் பகுதிக்கு (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் வதிவுள்ள ஆளின் ஊழியத்தில் இருந்துள்ளவரும் அவர் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியத்துக்கான கிரமமான உதவுதொகைகள் அத்தகைய வதிவுள்ள ஆளினால் அத்தகைய ஊழியக் காலப் பகுதி பூராகவும் செய்யப்பட்டிருப்பதுமான எவரேனும் ஊழியர் என்று பொருளாகும்; அத்துடன்

(ii) எவரேனும் ஊழியர் தொடர்பாகச் ''செலுத்தப்பட்ட ஊதியம்'' என்பது, அத்தகைய வியாபார முறைச் சந்தையில் அல்லது வியாபாரக் கண்காட்சியில் பங்கு பற்றியமை சம்பந்தமான அல்லது அத்தகைய வியாபார அலுவலகத்தில் அவர் தொழிலிலிருந்தமை சம்பந்தமான பயணம், இடவசதி, உணவு என்பன தொடர்பான செலவினம் என்று அல்லது அத்தகைய ஊழியரினால் உறப்பட்ட வேறெவையேனும் செலவுகள் என்று பொருளாகும்;

(ஆ) அத்தகைய அலுவலகம் எந்த நாட்டில் அமைந்துள்ளதோ அந்த நாட்டில் வருமானத்தின் மீதான ஏதேனும் வரிக்கமைய அத்தகைய பொறுப்பு முயற்சிக்கு நிரந்தரமான தாபனம் ஒன்றிருப்பின் அத்தகைய வியாபார அலுவலகத்தைப் பேணும் நோக்கத்துக்காக;

(இ) அத்தகைய பணத்தொகை தொடர்பிலான கழிப்பனவு 23 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்படின்; அல்லது

(ஈ) 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அல்லது 1995 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) ''ஏற்றுமதிச் சந்தை அபிவிருத்திச் செயற்பாடு என்ற சொல்லமைப்பு—

(i) இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட ஏதேனும் வியாபார முறைச் சந்தையில் அல்லது வியாபாரக் கண்காட்சியில் பங்கு பற்றுதல் என்று பொருளாகும்;

(ii) இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் அமைவிடத்தில் ஏதேனும் வியாபார அலுவலகத்தைப் பேணுதல் என்று பொருளாகும்;

(iii) இலங்கைக்கு வெளியே வெளியிடப்பட்ட ஏதேனும் வெளியீட்டில் ஏதேனும் விளம்பரத்தை வெளியிடுதல் என்று பொருளாகும்;

(vi) ஏதேனும் பிரசுரத்தை, சிற்றேட்டை அல்லது வேறு மேம்படுத்துகை நூலைத் தயாரித்தல், அச்சிடுதல் அத்துடன் வெளியிடுதல் என்று பொருளாகும்; அல்லது

(v) புறநீங்கலாக (i) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்கத்துக்காகவுள்ள வேறேதேனும் செயற்பாடு என்று பொருளாகும்;

(ஆ) ''அங்கீகரிக்கப்பட்ட'' என்ற சொல்லமைப்பு, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் விதப்புரையின்மேல் அவரினால் அங்கீகரிக்கப்பட்டது என்று பொருளாகும்;

(இ) ஏதேனும் பொருள் தொடர்பாக 'இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட.'' என்ற சொல்லமைப்பு அது தொடர்பில் பின்வருமாறு அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதுமான ஏதேனும் பொருள் என்று பொருளாகும்:—

(i) இலங்கையில் அப்பொருளுக்குச் சேர்க்கப்பட்ட பெறுமதி (கப்பற் கட்டணமும் காப்புறுதியும் இறுக்கு முன்னர்) அத்தகைய பொருளின் ஏற்றுமதி விலையின் நாற்பது சதவீதத்துக்குக் குறைந்ததல்லதென ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது; அல்லது

(ii) இலங்கையில் அப்பொருளுக்குச் சேர்க்கப்பட்ட பெறுமதியின் தொழிலாளர் அமைப்புக்கூறு, இலங்கையில் அப்பொருளுக்குச் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியின் அறுபது சதவீதத்துக்குக் குறைந்ததல்லவென ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

23ஆ. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் பொருளின் உற்பத்திக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனுமாளின் இலாபங்களை அல்லது வருமானத்தை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, ஏதேனும் அறிவியல், கைத்தொழில் அல்லது கமத்தொழில் ஆராய்ச்சியைக் கொண்டு நடாத்துவதில் அல்லது அந்தப் பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் ஊழியருக்கு இலங்கையில் பயிற்சியளிப்பதில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத் தொகையின் இரு மடங்குகளுக்குச் சமமான தொகையொன்றிலான கழிப்பனவு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; அத்தகைய ஆராய்ச்சி அல்லது பயிற்சி, அத்தகைய பொருளின் உற்பத்திசெய்யும் நடைமுறையை அல்லது நேரடியாகத் தரத்தை உயர்த்துவது தொடர்பானதாக விருத்தல் வேண்டும்.

(2) பின்வருமாறு உறப்பட்ட ஏதேனும் செலவினம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான கழிப்பனவெதுவும் அனுமதிக்கப்படுதல் ஆகாது:—

(அ) 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அல்லது 1995 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்;

(ஆ) அத்தகைய செலவினம் தொடர்பிலான கழிப்பனவொன்று—

(i) 23 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்படின்; அல்லது

(ii) 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்படற்பாலதல்லாததாயிருப்பின்.''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) ''(5அ) என்னும் உட்பிரிவின் அத்துடன் (5இ) என்னும் உட்பிரிவின்'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''(5ஆ) என்னும் உட்பிரிவின், (5இ) என்னும் உட்பிரிவின் அத்துடன் (5ஈ) என்னும் உட்பிரிவின்'' என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) ''அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவு தொடர்பாக, அத்தகைய தகைமை பெறும் கொடுப்பனவுத் தொகைக்குச் சமமான விடுதொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும்.'' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:— ''அவ்வரி மதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவு தொடர்பாக, அத்தகைய தகைமை பெறும் கொடுப்பனவுத் தொகைக்குச் சமமான விடுதொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1990 ஒக்ரோபர் 1 ஆம் தேதிக்கு முன்னர், பிரிவு 17இ அல்லது பிரிவு 22ஈஈஈ அல்லது பிரிவு 22ஈஈஈஈ என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியிலுள்ள ஏதேனும் உளதாயிருக்கும் பங்கு தவிர, ஏதேனும் சாதாரணப் பங்கைக் கொள்வனவு செய்வதில், அல்லது பிரிவு 17ஊ இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனுமாளினால் செய்யப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவு ஒன்று 1990 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத் தொடர்பு மூலம்

அத்தகைய ஆள் அவ்வாறு, தெரிவுசெய்யின், 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டில் செய்யப்பட்டுள்ளதாக இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காகக் கருதப்படுதல் வேண்டும்.''.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(i) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம்:—

''(vii) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் உருவாக்கப்பட்டதும் நிருவகிக்கப்படுவதுமான செவன நிதியத்துக்கு'';

(ii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் ''அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறுப்பு முயற்சியல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்'' என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம்; அத்துடன்

(iii) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின் (ix) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:—

''(x) 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைக் கற்கைகள், நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை கொள்கைக் கற்கைகள், நிறுவகத்திற்கு''; அத்துடன்

(iv) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்:—

''(ட) எவரேனும் ஆளினால்—

(i) பிரிவு 17இ என்பதில் அல்லது பிரிவு 22ஈஈஈ என்பதில் அல்லது பிரிவு, 22ஈஈஈஈ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட, அல்லது

(ii) முதலீடு செய்யப்படும் பணத்தொகையானது அத்தகைய பொறுப்பு முயற்சியின் உற்பத்திக் கொள்ளளவை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே என அத்தகைய கம்பனியால் உறுதிப்படுத்தப்படுமாயின், 17ஊ என்

னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் பொறுப்பு முயற்சியொன்றைக் கொண்டு நடாத்துகின்ற

கம்பனியொன்றாகிய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில் உளதாம் பங்குகளல்லாத வேறு சாதாரண பங்குகளின் கொள்வனவில் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகை;

ஆயினும், அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட பணத்தொகை 14 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (xvii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விற்பனையின் முழு வருவாயிலிருந்ததாயிருக்குமிடத்து, 14 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய விற்பனையினின்றெழும் மூலதன ஆதாயங்கள், தொடர்பில் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு ஒன்று வழங்கப்பட்டிருப்பின், இப்பிரிவின்கீழ் விடுதொகை எதுவும் கழிக்கப் படற்பாலதாதல் ஆகாது.''

(3) அப்பிரிவின் (5இ) என்னும் உட்பிரிவின் ''1988 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1988 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1990 ஏப்பிரல், 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(4) அப்பிரிவின் (5இ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்:—

''(5ஈ) 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது, அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான, ஒரு கம்பனி தவிர்ந்த எவரேனும் ஆளின் வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்தான கழிவு—

(i) அவரால் செய்யப்பட்ட அல்லது அவரினாற் செய்யப் பட்டிருக்கின்றதெனக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) அத்துடன் (ட) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த தகைமைபெறும் எல்லாக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அத்தகைய வரி மதிப்பிடற்குரிய வருமானத்தின் மூன்றிலொன்று அல்லது ஐம்பதாயிரம் ரூபா என்பவற்றில் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகையினை விஞ்சுதலாகாது;

(ii) அவரால் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப் பட்டிருக்கின்றதெனக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (இ), (க) அத்துடன் (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைபெறும் எல்லாக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது;

(iii) அவரால் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப் பட்டிருக்கின்றதெனக் கருதப்பட்ட (2) ஆம் உட் பிரிவின் (ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட தகைமை பெறும் ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில் அத்தகைய வரி மதிப்பிடற்பாலதான வருமானத்தின் மூன்றிலொரு பங்கை விஞ்சுதலாகாது; அத்துடன்

(iv) இந்த உட்பிரிவின் (i) ஆம் (ii) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைபெறும் எல்லாக் கொடுப்பனவுகளினதும் கூட்டு மொத்தம் தொடர்பில் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது.''; அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக'' (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) அல்லது (ட) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்'';

(6) அப்பிரிவின் (7அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:—

''(7ஆ) உட்பிரிவு (2) என்பதன் (ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பங்கின் கொள்வனவிற்கெனச் செய்யப்பட்ட தகைமைபெறும் ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆளின் வரி மதிப்பிடற் பாலதான வருமானத்திலிருந்து விடுதொகையொன்று கழிக்கப் பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய விடுதொகை கழிக்கப் பட்ட வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய கொள்வன வுத் தேதியின் பின்னர் ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குள் அப்போது அத்தகைய பங்கைக் கொள்வனவு செய்த தனியாளின் இறப்பினால் அல்லாது வேறு வகையில் அத்தகைய பங்கின் சொத்தாண்மையில் மாற்றமொன்று இருக்குமிடத்தும், இச்சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய விடு தொகை அளிக்கப்படாதிருப்பின் விடுதொகை எவ்வாளுக்கு அளி க்கப்பட்டுள்ளதோ அவ்வாள் தொடர்பில் அவ்வாள் எந்த வரு மான வரிக்கு ஆளாகியிருந்திருப்பாரோ அந்த வருமானவரிக்கும் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அறவிடப்பட்ட வரித் தொகைக் கும் இடையிலான வித்தியாசத்தை உள்ளடக்கிய மேலதிக வரி மதிப்பீடொன்று, செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வரி மதிப்பீட்டு அறிவித்தல், மேன்முறையீடு அத்துடன் வேறு நட வடிக்கைகள் தொடர்பில் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்''; அத்துடன்

(7) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில், ''உட்பிரிவின் (ஈ), (க) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, ''உட்பிரிவின் (ஈ), (க) அல்லது (ட) என்னும் பந்தியில்'' என்னும் சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலம்.

*12.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவில் ''ஏதேனும் ஆதனம், கொள்ளப்பட்ட பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக்கம்பெனி எதனிலும், ஏதேனும் பங்காக அல்லாத ஆதனம் எதுவும் கொள்ளப்பட்ட பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டு'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(2) அப்பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவில் ''அத்தகைய காலப்பகுதிக்குள் ஏதேனும் சொத்தாண்மை மாற்றத்திலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய காலப் பகுதிக்குள் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனி எதனிலும் ஏதேனும் பங்காக அல்லாத ஆதனம் எதுவும் கொள்ளப்பட்ட பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டு'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்—:—

''(3ஆஆ) ஆளொருவரின் வரி விதிக்கற்பாலதான வருமானமானது அத்தகைய ஆளினால் அத்தகைய பங்கு கொள்ளப்பட்ட தேதியின் பின்னர் ஓராண்டுக் காலப் பகுதியொன்றுக்குள் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனி எதிலும் ஏதேனும் பங்கின் சொத்தாண்மையினது மாற்றத்தினின்றெழும் ஏதேனும் மூலதன ஆதாயத்தை உள்ளடக்குமிடத்தும் அத்துடன் இதனகத்துப் பின்னர் இவ்வுட்பிரிவில் ''வருமானத்தின் இணையான பாகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வருமானத்தின் பாகமொன்றின்மீது செலுத்தற்பாலதான வருமானவரி இருபது சதவீதத்தை விஞ்சுமிடத்தும் அப்போது, வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில் வரியானது பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும்:—

(அ) வருமானத்தின் இயைபான பாகம் அத்தகைய மூலதன ஆதாயத்தின் தொகையை விஞ்சுவதாயின்:—

(i) அத்தகைய மூலதன ஆதாயத்தின் தொகைக்குச் சமம் என்றாற் போன்று வருமானத்தின் அத்தகைய பாகத்தின்மீது செலுத்தற்பாலதான வரி வீதம் இருபது சதவீதமாயிருத்தல் வேண்டும்.

(ii) வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதித் தொகையின் மீது செலுத்தற்பாலதான வரியானது இச்சட்டத்தின்மீது அதற்கு ஏற்புடைத்தாகின்றவாறு பத்துச் சதவீதத்திற்கு மேற்பட்ட அத்தகைய வீதங்களுக்கிணங்கக் கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வருமானத்தின் இயைபான பாகம் அத்தகைய மூலதன ஆதாயத்தின் தொகையை விஞ்சவில்லையாயின் வருமானத்தின் இயைபான பாகம் முழுவதன்மீதும் செலுத்தற்பாலதான வரியானது, இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இருபது சதவீதமாதல் வேண்டும்.''

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்திற்குப் பதிலாக, பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலம்:—

''ஆயினும் விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியொன்று:—

(i) 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்வரும் மூன்று வரி மதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றிற்கும்; அத்துடன்

(ii) 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கும்,

பந்தி (ஆ) என்பதன்கீழ் வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாதல் ஆகாது, அத்துடன்—

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்:—

''(ஆஆ) 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் விலை கோரிப் பெறப்படும் பங்குடை பகிரங்கக் கம்பெனியொன்றினால் எந்த இலாபங்களின்மீது ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பெனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் கணிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து, வதிவற்ற எவரேனும் ஆளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் மொத்தப் பங்கிலாபங்களின், கூட்டு மொத்தத் தொகையின் பதினைந்து வீதத்திற்குச் சமமான ஒரு தொகை; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில்,

(i) அவ்வுட் பந்தியின் (அ) என்னும் விடயத்தில், ''1980 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படற் பாலதாயின் அதன் ஐம்பது சதவீதத்தால்; அல்லது'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 1980 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படற் பாலதாயின் அதன் ஐம்பது சதவீதத்தால்;'' என்னும் சொற் களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(ii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் ''1980 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் செலுத்தப்படற் பாலதாயின் அதன் இருபது சதவீதத்தால்'' என்னும் சொற் களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1980 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் செலுத்தப்படற்பால தாயின் அதன் இருபத்தைந்து சதவீதத்தால்'' என்னும் சொற் களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1980 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர் செலுத்தப்படற்பாலதாயின் அதன் இருபத்தைந்து சதவீதத்தால்; அல்லது'' என்னும் சொற்களை யும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்; அத்துடன்

(iii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தை உடனடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

''(இ) பங்கிலாபம் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்படற்பாலதாயின் பதினேழும் பதினேழில் பதினொரு சதவீதத்தால்''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:—

''(உ) அந்தப் பங்கிலாபமானது 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபமொன்றாக இருக்குமிடத்தும்''.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 37அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:—

"வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பனி எதனிடமிருந்து பெறப்பட்டதும் எவரேனும் வதிவற்ற செலுத்தற்பாலதுமான ஏதேனும் பங்கிலாபத்திலிருந்து வருமான வரியைக் கழித்தல்.

37அ. வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும் இயைபான பங்கிலாபமானது, இச்சட்டத்தின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பங்கிலாபமொன்றில் முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பாகமாக அல்லாதிருக்கும் பங்கிலாபமொன்றின் முழுத் தொகையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கொண்டிருப்பின் எவரேனும் வதிவற்ற ஆளுக்கு 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தற்பாலதாகின்ற அத்தகைய வதிவுள்ள கம்பெனியினால் ஒன்றில் நேரடியாக அல்லது இடைநிலைக் கம்பெனி ஒன்றுக்கூடாக அல்லது பலவற்றிற்கூடாக ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்டு பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபத் தொகையிலிருந்து (இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் ''இயைபான பங்கிலாபம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்). அத்தகைய இயைபான பங்கிலாபத்தின் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான வருமான வரியைக் கழித்துக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இப்பிரிவின்கீழ் வதிவுள்ள கம்பெனியொன்று கழித்துக் கொள்ளுமாறு தேவைப்படுத்தப்பட்ட வருமான வரித் தொகையானது, அத்தகைய வதிவுள்ள கம்பெனியிடமிருந்து அரசுக்குப் போமதியான கடனொன்றாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகையதாக உடனடியாக அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும் அல்லது அத்தகைய வதிவுள்ள கம்பெனியினால் வேறு வகையாகக் கொடுபடற்பாலதான ஏதேனும் வருமான வரியோடு மேலதிகமாக அத்தகைய வதிவுள்ள கம்பெனியின்மீது வரி மதிப்பிடப்பட்டு அறவிடவும்படலாம்.

ஆயின், இப்பிரிவின் நோக்கங்களுக்காக இயைபான பங்கிலாபத் தொகையைத் தீர்மானிக்கையில் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்காக எந்த இலாபங்களின்மீது அல்லது வருமானத்தின்மீது அத்தகைய வதிவுள்ள கம்பெனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் கணிப்பிடப்பட்டதோ அந்த இலாபங்களிலிருந்து அல்லது வருமானத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட அத்தகைய பங்கிலாபத்தின் அத்தகைய பாகம் கணக்குக்கெடுத்துக் கொள்ளப்படுதலாகாது'';

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் ''ஆனால் 1984 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''ஆனால் 1984 ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர், அல்லது 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்றுஅல்லது அதன் பின்னர் எவரேனும் வதிவுள்ள ஆளுககு விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனியொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபமெதற்கும் ஏற்புடையனவாதலாகாது.''; என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்,

(அ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''பதினேழில் மூன்று சதவீதத்தால்'' மற்றும் ''பதினேழில் மூன்று சதவீதத்திற்குச்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே ''பதினேழும் பதினேழில் பதினொரு சதவீதத்தால்'' மற்றும், ''பதினேழும் பதினேழில் பதினொரு சதவீதத்திற்குச்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தில்—

(i) ''ஏதேனும் பங்கிலாபத் தொகைக்கு அல்லது அதன் தொடர்பில்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் பங்கிலாபத் தொகைக்கு அல்லது அதன் தொடர்பில்; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ii) அக்காப்பு வாசகத்தின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:—

''(ஈ) 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் விலை கோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனியொன்றிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபத் தொகைக்கு அல்லது அது தொடர்பில்,''.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் ''ஆள் ஒருவருக்கு ஏற்புடையதாதலாகாது'', என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆள் ஒருவருக்கு ஏற்புடையதாதலாகாது'':

ஆயின், மேலும் இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக—

(1) நம்பிக்கைப் பொறுப்பு'' என்பது கூறு நம்பிக்கைப் பொறுப்பு எதனையும் உள்ளடக்குதலாகாது;

(2) ''நம்பிக்கைப் பொறுப்பாளர்'' என்பது ''கூறு நம்பிக்கைப் பொறுப்பு எதனதும் நம்பிக்கைப் பொறுப்பாளரை உள்ளடக்குதலாகாது.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''நம்பிக்கைப் பொறுப்பு'' என்னும் பதம் கூறு நம்பிக்கைப் பொறுப்பு எதனையும் உள்ளடக்குதலும் அத்துடன் ''நம்பிக்கைப் பொறுப்பாளர்'' என்னும் பதம் கூறு நம்பிக்கைப் பொறுப்பு எதனதும் நம்பிக்கைப் பொறுப்பாளரை உள்ளடக்குதலும் ஆகாது''.

*19.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு, ''நம்பிக்கைப் பொறுப் பொன்றின் நம்பிக்கை பொறுப்பாளர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் நம்பிக்கைக் கூறு பொறுப்பு அல்லாத நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

*20.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய தலைப்பும் புதிய பிரிவும் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்ப துடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் ''ஆஆ கூறு நம்பிக்கைப் பொறுப்பு கள்'' எனவும் ''பிரிவு 64அ'' எனவும் பயனுறுதலும் வேண்டும்:—

**"ஆஆ—கூறு நம்பிக்கைப் பொறுப்புகள்**

கூறு நம்பிக் கைப் பொறுப்பு ஒவ்வொன்றும் கம்பனியொன் றாகக் கருதப்படு தல்.

*64அ.* *(1)* இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூறு நம்பிக் கைப் பொறுப்பு ஒவ்வொன்றும் அத்துடன் இருவயினொத்த நிதியம் ஒவ்வொன்றும் இலங்கையில் வதிவுள்ள கம்பெனியொன் றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இலங் கையில் வதிவுள்ள கம்பெனிகள் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒவ்வொன்றிற்கும் அத்துடன் இருவயினொத்த நிதியம் ஒவ்வொன்றிற்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(2)* ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்க மின்றி—

(அ) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பிலுள்ள அல்லது இருவயினொத்த நிதியமொன்றிலுள்ள ஒரு ''கூறு'', அக்கம்பெனியின் ''பங்கு'' ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பில் அல்லது இரு வயினொத்த நிதியத்தில் கூறொன்றைக் கொண்டிருப் பவர் அக்கம்பெனியின் பங்குதாரர் ஒருவராகக் கருதப் படுதல் வேண்டும்;

(இ) அக்கூறு நம்பிக்கைப் பொறுப்பிற்கமைய அல்லது இரு வயினொத்த நிதியத்திற்கமைய ஏதேனும் ஆதனத்தி லிருந்து அல்லது அக்கூறு நம்பிக்கைப் பொறுப்பிற்காக அல்லது இருவயினொத்த நிதியத்திற்காக அல்லது அதன் சார்பில் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பினால் அல் லது ஏதேனும் இருவயினொத்த நிதியத்தின் கட்டுக் காப்பாளரினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்திலின்று ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப் பின் நம்பிக்கைப் பொறுப்பாளரால் அல்லது அத்தகைய கட்டுக்காப்பாளரினால் பெறப்பட்ட அல்லது அவரது நன்மைக்கென அவருக்கு உண்டான அல்லது திரண்ட இலாபங்களும் வருமானமும் அக்கம்பெனியின் இலாபங் களும், வருமானமுமாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பினது அல்லது இருவயினொத்த நிதியத்தினது இலாபங்களை அல்லது வருமானத்தை அதன் கூறுகளைக் கொண்டிருப்பவர் களுக்குப் பகிர்ந்தளித்தல் எதுவும் அக்கம்பெனியின் பங்கு தாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபமொன் றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(உ) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது இரு வயினொத்த நிதியத்தின் செலுத்தப்பட்ட பெறுமதி யானது, அக்கம்பெனியின் ஏதேனும் பங்கின் செலுத்தப் பட்ட பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(3) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமையாளருக்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது ஏதேனும் இருவயினொத்த நிதியத்தின் முகாமையாளருக்கு அல்லது கட்டுக்காப்பாளருக்கு வேதனம் என்ற வகையில் அக்கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது இருவயினொர்த்த நிதியத்தின் நிதிகளி லிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட ஏதேனும் பணத் தொகை, 23 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, அக்கம்பெனியால் அதன் வரு மானத்தின் உற்பத்தியில் உறப்பட்ட வெளிப்பாடுகளும் செலவுகளும் ஆகும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''1985, ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1985 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும், அத்துடன் 37அ என்னும் பிரிவின்கீழ், 1991 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதுமான ஏதேனும் வரிமதிப்பீட்டாண் டில்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு, ''நம்பிக்கைப் பொறுப் புக்கான பயன்பெறுநர்மேல் விதிக்கற்பாலதான'' என்னும் சொற்களுக்குப் பதி லாக, ''ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பாக, அல்லாத நம்பிக்கைப் பொறுப் பொன்றிற்கான பயன்பெறுநர்மேல் விதிக்கற்பாலதான'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''சந்தைப் பெறுமதி'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம்—

''இருவயினொத்த நிதியம்'' என்பது பிணைப் பொறுப்புகள் பேரவையால் இருவயினொத்த நிதியமொன்றாக உரிமமளிக்கப் கப்பட்ட ஏதேனும் இருவயினொத்த நிதியம் என்று பொரு ளாகும்;

(2) ''விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி'' என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம்:—

''விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி'' என்பது இலங்கையில் வதிவுள்ளதும் அக்கம்பெனி தொடர்பில் 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டு தொடர்பில் எக்கம்பெனியின் பங்குகள் வரிமதிப்பீட்டாண்டு முழுவதும் விலை கோரிப் பெறப்படுகின்றனவோ அக்கம்பெனியொன்றாகும் என விலை மதிப்பீட்டாளர் திருப்தியுறுகின்றாரோ அக்கம்பெனியெது வுமென அல்லது அக்கம்பெனியானது அந்த வரி மதிப்பீட்டாண் டின்போது கூட்டிணைக்கப்பட்டவிடத்து கூட்டிணைப்புத் தேதியி லிருந்து அந்த வரி மதிப்பீட்டாண்டின் இறுதிவரை பிணையங்கள் பேரவையால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதி பரிவர்த்தனை நிலையத்தால் வெளியிடப்பட்ட அலுவலக முறை யான நிரலிலுள்ள கம்பெனியொன்று எனப் பொருள்படும்;

(3) ''வதிவுள்ள அல்லது இலங்கையில் வதிவுள்ள'' என்பதன் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன் மூலம்:—

''பிணையங்கள் பேரவை'' என்பது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கப் பிணையங்கள் பேரவைச் சட்டத்தால் தாபிக் கப்பட்ட பிணையங்கள் பேரவை என்று பொருளாகும்.

(4) ''நம்பிக்கைப் பொறுப்பாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தில் ''எவ ரேனும் ஆளின் சார்பில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எவ ரேனும் ஆளின் சார்பிலும் அத்துடன் ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பில், அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கும் சாதனத்தினால் அக்கூறு நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஆளின் சார்பிலும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம், அத்துடன்

(5) ''நம்பிக்கைப் பொறுப்பாளர் என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத் துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம்:—

''கூறு நம்பிக்கைப் பொறுப்பு'' என்பது பிணையங்கள் பேரவையால் கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றாக உரிமமளிக் கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு என்று பொரு ளாகும்''.

24. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத் தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணையின் பாகம் v என்பதில் ''1980 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1980 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(2) அந்த அட்டவணையின் பாகம் v என்பதனை உடனடுத்துப் பின்வரும் பாகங்களை உட்புகுத்துவதன் மூலம்:—

பாகம் vஅ

1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் விலைகோரிப் பெறப்படும் பங்குடைக் கம்பெனியொன்றும் அக் கம்பெனி தொடர்பில் விலைமதிப்பீட்டாளர், 1992 மார்ச்சு 31 ஆம் தேதியன்றுள்ளவாறு:—

(i) அக்கம்பெனியின் பங்குப் பதிவேட்டில் பங்குதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை இருநூறை விஞ்சுகின்றது எனவும்; அத்துடன்

(ii) ஐந்து ஆட்கள் ஒருமித்து நேரடியாகவோ அல்லது எவரேனும் நியமத்தர் ஊடாகவோ அத்தேதியன்றுள்ளவாறு அக்கம்பனியின் வழங்கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனத்தின் அறுபது சதவீதத்திற்கு மேல் கொண்டிருக்கவில்லை எனவும் திருப்தியுறுகின்றாரோ அந்தக் கம்பெனியொன்றுமாகிய ஏதேனும் கம்பெனி முறையே 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பெனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது .............40 சதவீதம்:

ஆயினும், அத்தகைய கம்பெனியானது, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களையும் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சிகளையும் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதற் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிற் பொறுப்பு முயற்சி கம்பெனியொன்றாக மாற்றப்படுவதன் மூலம் உருவாக்கப்பட்ட கம்பெனியாகவிருக்குமிடத்து, அத்தகைய கம்பெனி தொடர்பில் இப்பாகத்தின் ஏற்பாடுகள், (ii) ஆம் இனத்தில், ''அறுபது சதவீதம்'' என்னும் சொற்களைப் பற்றிய குறிப்பீட்டிற்குப் பதிலாக ''அறுபத்தைந்து சதவீதம்'' என்னும் சொற்களைப் பற்றிய குறிப்பீடு இடப்படுவதைப் போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்.

இப்பாகத்தின் நோக்கங்களுக்காக—(அ) இனம் (i) அல்லது இனம் (ii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள்—

(அ) எவரேனும் தனியாளாக இருக்குமிடத்து, அத்தனியாளினால் அவரது அல்லது அவளது வாழ்க்கைத் துணையால் அல்லது (அத்தேதியன்றுள்ளவாறு ஒரு பிள்ளையாக அல்

லாது எவரேனும் புதல்வன் அல்லது புதல்வியல்லாத வேறு) பிள்ளைகளால் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது எவரேனும் நியமத்தர் ஊடாகவாயினுஞ்சரி கொண்டிருக்கப்படும் அக் கம்பெனியின் ஏதேனும் பங்கு அத்தனியாளினால் கொண் டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் கொளிக் கம்பெனியின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனியாகவிருக்குமிடத்து அத்தகைய துணைநிலைக் கம் பெனியால் கொண்டிருக்கப்படும் அக்கம்பெனியின் ஏதே னும் பங்கு அத்தகைய கொளிக்கம்பெனியால் கொண் டிருக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

''கொளிக்கம்பெனி'' அத்துடன் ''துணைநிலைக் கம்பெனி'' என்னும் சொல்லமைப்புகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத் தின் 150 ஆம் பிரிவில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருள்களையுடையவையாதல் வேண்டும்.

பாகம் Vஆ

1992 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் விலைகோரிப் பெறப்பட்ட பங் குடைப் பகிரங்கக் கம்பெனியும் எக்கம்பெனி தொடர்பில் அந்த வரி மதிப்பீட் டாண்டில் இறுதித் தினத்தன்று,

(i) அத்தகைய கம்பெனியின் பங்குப் பதிவேட்டில் பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை இருநூறை விஞ்சவில்லை எனவும்; அத்துடன்

(ii) அத்தேதியன்றுள்ளவாறு ஐந்து ஆட்கள் ஒருமித்து நேரடியாகவோ அல்லது எவரேனும் நியமித்தர் ஊடாகவோ அக்கம்பெனியின் வழங் கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனத்தின் அறுபது சதவீதத்திற்கு மேல் கொண்டிருக்கவில்லை எனவும்

விலைமதிப்பீட்டாளர் திருப்தியுறுகின்றாரோ அக்கம்பெனியுமாகிய ஏதேனும் கம் பெனி

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பெனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது .......... 40 சதவீதம்;

ஆயினும் அத்தகைய கம்பெனியானது, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களையும் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சிகளையும் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதற் சட்டத் தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத் திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழில் பொறுப்பு முயற்சி, கம்பெனி யொன்றாக மாற்றப்படுவதன்மூலம் உருவாக்கப்பட்ட கம்பெனியாகவிருக்குமிட த்து, அத்தகைய கம்பெனி தொடர்பில் இப்பாகத்தின் ஏற்பாடுகள் (11) ஆம்

இனத்தில் ''ஆறுபது சதவீதம்'' என்னும் சொற்களைப் பற்றிய குறிப்பீட்டிற்குப் பதிலாக ''அறுபத்தைந்து சதவீதம்'' என்னும் சொற்களைப் பற்றிய குறிப்பீடு இடப்பட்டதைப் போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்;

இப்பாகத்தின் நோக்கங்களுக்காக இனம் (1) அல்லது இனம் (11) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள்—

(அ) எவரேனும் தனியாளாக இருக்குமிடத்து, அத்தனியாளினால் அவரது அல்லது அவளது வாழ்க்கைத் துணையால் அல்லது (அத்தேதியன்றுள்ளவாறு ஒரு பிள்ளையாக அல்லாத எவரேனும் புதல்வன் அல்லது புதல்வியல்லாத வேறு) பிள்ளைகளால் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது எவரேனும் நியமத்தர் ஊடாகவாயினுஞ்சரி கொண்டிருக்கும் அக்கம்பெனியின் ஏதேனும் பங்கு அத்தனியாளினால் கொண்டிருக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் கொளிக் கம்பெனியின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனியாக இருக்குமிடத்து அத்தகைய துணைநிலைக் கம்பெனியால் கொண்டிருக்கப்படும் அக்கம்பெனியின் ஏதேனும் பங்கு அத்தகைய கொளிக் கொம்பனியால் கொண்டிருக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

''கொளிக் கம்பெனி'' அத்துடன் ''துணைநிலைக் கம்பெனி'' என்னும் சொல்லமைப்புகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருள்களையுடையனவாதல் வேண்டும்.

(3) ''பாகம் VIII அ'', ''பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக

பாகம் IX

''பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

(4) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலம்;

''பாகம் X''

கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம், 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் வருமானவரி வீதம்:

அக்கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது ............. 50 சதவீதம்.''.

25. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை, அவ்வட்டவணையின் (iii) ஆம் இனத்தில், ''ஒரு சிறிய கம்பெனி அல்லது விலைகோரிப் பெறப்படும் பங்குடை பகிரங்கக் கம்பெனி அல்லது மக்கள் கம்பெனி தவிர்ந்த வேறு ஏதேனும் ''கம்பெனியால் செய்யப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக (ஒரு சிறிய கம்பெனி, அல்லது விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி அல்லது ஒரு மக்கள் கம்பெனி தவிர்ந்த வேறு) கூறு நம்பிக் கைப் பொறுப்பொன்றினால் அல்லது ஓர் இருவயினொத்த நிதியத்தால் அல்லது ஒரு கம்பெனியால் செய்யப்பட்ட'' என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

26. (1) இச்சட்டத்தின் 2 (3) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 (1) ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 11 (2) (i) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 (2) (ஆ) என்னும் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும், 1980 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 13 (2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 (2) ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா' நோக்கங்களுக்காகவும் 1990 யூன் 12 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் 16 (2) (அ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 (3) ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 யூன் 12 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

27. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 1990 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

*[1990, நவெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியிலுள்ள ''கட்டுப்பணம் நீங்கலாக, ஆயுட் காப்புறுதி தொடர்பில் பெற்றுக் கொள்ளப் பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படற்பாலதான மொத்தத் தொகை;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கட்டுப்பணம் நீங்கலாக—

(i) ஆயுட் காப்புறுதி தொடர்பிலும்; அத்துடன்

(ii) வேலைநிறுத்தத்தினால், கலகத்தினால், குடிக் கொந் தளிப்பினால் அல்லது பயங்கரவாதச் செயல்களினால் ஆகும் சேதத்துக்கு அல்லது அழிவுக்கு எதிரானதும் அத்துடன் வேலைநிறுத்தம், கலகம், குடிக்கொந்தளி ப்பு அத்துடன் பயங்கரவாதம் என்பனவற்றிற்கான அரசாங்க நிதியத்துக்குச் செலுத்தப்பட்டதுமான காப் புறுதி தொடர்பிலும்,

பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படற் பாலதான மொத்தத் தொகை;'' என்னும் சொற்களை இடு வதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியிலுள்ள, ''ஆனால், அவ்வங்கியில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறின் தொழிற்பாட்டிற்கு ஏற்றிக் கூறற்படற்பாலனவான வரவு களை உள்ளடக்குதலாகாது'' என்னும் சொற்களுக்குப் பதி லாக,

''ஆனால்—

(i) அத்தகைய வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறின் தொழிற்பாட்டிற்கும்; அத்துடன்

(ii) அத்தகைய வங்கியானது, வேறு ஏதேனும் வங்கியுடன் 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துகொள்ளும் கொடுக்கல் வாங்கல் ஏதேனுக்கும்,

ஏற்றிக் கூறற்படற்பாலனவான வரவுகளை உள்ளடக்குதலாகாது'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(5) பொருட்களை உற்பத்தி செய்யும் ஏதேனும் தொழிலின் ஏதேனும் காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவினை நிச்சயப்படுத்துவதில் அத்தகைய தொழிலைக் கொண்டு நடத்துபவரான ஆளினால் அத்தகைய பொருட்கள் தொடர்பில், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ்ச் செலுத்தப்பட்டதான உற்பத்தித் தீர்வை ஏதேனுக்கும் சமமான தொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், ஏதேனும் காலாண்டுக்காக, அவ்வாறு கழிக்கப்படற்பாலதான தொகை, அத்தகைய தயாரிப்புத் தொழிலைக் கொண்டு நடத்துகையில் ஏதேனும் பொருளின் விற்பனையிலிருந்து, அக்காலாண்டுக்கெனக் கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கப்பெறற்பாலதான தொகையை விஞ்சுகின்றவிடத்து அவ்வாறு விஞ்சும் தொகையானது அக்காலாண்டினை உடன் அடுத்துறும் காலாண்டுக்கு முன் கொண்டு செல்லப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த அடுத்துறும் காலாண்டுக்கான அத்தொழிலின் மொத்த விற்பனை வரவினை நிச்சயப்படுத்துவதில் கழிக்கப்படற்பாலதாகுதலும் வேண்டும். அத்துடன் அவ்வாறே தொடர்தலும் வேண்டும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரால் கழிப்பனவு செய்யப்படுதல்.

47. எவரேனும் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரினால் பதிவு செய்யப்பட்ட இன்னொரு உற்பத்தியாளருக்கு, ஏதேனும் காலாண்டின்போது செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஏதேனும் தொடர்பில் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையானது, முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரால் பொருட்களைத் தயாரிக்கும் அவரது தொழிலில் பயன்

படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரியை உள்ளடக்கியதாயிருக்குமிடத்து, அவ்வாறு உள்ளடக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியானது, முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து எழுகின்ற, மொத்த விற்பனை வரவு தொடர்பில் முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரினால் அக்காலாண்டுக்கெனச் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி ஏதேனிலுமிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின்—

(அ) அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகை ஏதேனிலும் உள்ளடக்கப்பட்டதான மொத்த விற்பனை வரவு வரிக்கென—

(i) அத்தொழிலில் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொறித் தொகுதி, எந்திரத் தொகுதி, இணைப்புகள், வாகனங்கள், கட்டிடங்கள் அல்லது வேறு மூலதனச் சொத்துக்கள் தொடர்பில்;

(ii) விலக்களிப்புச் செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தித் தொழில் எதனிலும் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருள் தொடர்பாக, 1989 ஏப்பிரல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கிய ஏதேனும் காலாண்டுக்காக;

(iii) நான்காம் பிரிவின்கீழ், மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளதான ஏதேனும் தொழிலில் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருள் தொடர்பில்;

(iv) இரண்டாவதாகக் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட எந்த உற்பத்தியாளருக்கு அத்தகைய பணத்தொகைக் கொடுப்பனவு செய்யப்பட்டதோ அந்த உற்பத்தியாளரிடமிருந்து, 46 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான உறுதிச் சீட்டொன்றை,முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் பெற்றிருந்தாலன்றி;

கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

(ஆ) பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் ஒருவர் என்றவாறு அவர் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் எவரேனுமாளினால் அவ்வாறு செலுத்தப்பட்ட ஏதேனும் பணத் தொகையில் உள்ளடக்கப்பட்டதான மொத்த விற்பனை வரவு வரி ஏதேனும், அத்தகைய பதிவு செய்யப்பட்ட

உற்பத்தியாளர் எந்தக் காலாண்டின்போது மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராகின்றாரோ அந்தக் காலாண்டிற்கெனச் செலுத்தப்படற்பாலதான, அவரால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை தொடர்பில் எழுகின்ற மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து கழிப்பனவு ஒன்றாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) (i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலாண்டுக்கான கழிப்பனவுத் தொகையானது அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அக்காலாண்டுக்கான முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய மொத்த விற்பனை வரவு வரியை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய மேன்மிகை திருப்பிக் கொடுபடலாகாது; ஆனால், அக்காலாண்டினை உடன் அடுத்துவரும் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில், அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து அவ்வாறு எந்தளவுக்குக் கழிக்கப்படக் கூடுமோ அந்தளவுக்கும், அத்துடன் அத்தகைய மேன்மிகையின் ஏதேனும் மிகுதி, அதற்கடுத்துவரும் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டுக்கெனச் செலுத்தப்படற்பாலதான கழிப்பனவுத் தொகையானது, அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அக்காலாண்டுக்காக முதற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய மொத்த விற்பனை வரவு வரியை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய மேன்மிகையானது, அக்காலாண்டினை உடன் அடுத்து வரும் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து, அவ்வாறு எந்தளவுக்குக் கழிக்கப்படக்கூடுமோ அத்தளவுக்கும்; அத்துடன், அத்தகைய மேன்மிகையின் ஏதேனும் மிகுதி, உடன் அதற்கடுத்துவரும் காலாண்டுக்கென

அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற் பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறே தொடர்ந் தும் கழிக்கப்படுதலும் வேண்டும். எந்தக் காலாண் டில் அத்தகைய மேன்மிகை எழுகின்றதோ அந்தக் காலாண்டிலிருந்து கணக்கிடப்படும் நான்காம் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப்படற்பால தான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து கழிக்கப்பட முடியாதுள்ள அத்தகைய மேன்மிகை யின் ஏதேனும் விஞ்சு தொகை, 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய் யப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

''சுங்கத்தலைமை யதிபதிக்குச் செலுத்தப்பட்ட மொத்த விற் பனை வரவு வரி யின் கழிப்பனவு

48. பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் எவரேனும் பொருட் களை உற்பத்தி செய்யும் அவரது தொழிலில் அத்தகைய உற் பத்தியாளரினால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பில், ஏதேனும் காலாண்டின்போது மொத்த விற்பனை வரவு வரியை 12 ஆம் பிரிவின் கீழ் சுங்கப்பகுதி தலைமையதிபதிக்குச் செலுத் தியிருக்குமிடத்து, அத்தகைய மொத்த விற்பனை வரவு வரி யானது, அவரால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை யிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவு தொடர்பில் அக் காலாண்டுக்கென அவரால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின்—

(அ) அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரிக் கென—

(i) அத்தொழிலில் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொறித் தொகுதி, எந்திரத் தொகுதி, இணைப்புக்கள், வாகனங் கள், கட்டிடங்கள் அல்லது வேறு மூலதனச் சொத்துக்கள் தொடர்பில்;

(ii) விலக்களிப்புச் செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தித் தொழில் ஏதேனிலும் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருள் தொடர்பாக, 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கிய ஏதேனும் காலாண்டில்;

(iii) நான்காம் பிரிவின் கீழ், மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளதான ஏதேனும் தொழிலில் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருள் தொடர்பில்; அல்லது

(iv) அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் உறுதிச்சீட்டொன்றினைச் சுங்கப்பகுதி பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து அத்தகைய பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் பெற்றிருந் தாலன்றி,

கழிப்பனவு எதுவும் செய்யப்படலாகாது; அத்துடன்

(ஆ) (i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலாண்டுக்கான கழிப்பனவுத் தொகையானது, அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அக்காலாண்டுக்கெனச் செலுத்தப்படற்பால தான மொத்த விற்பனை வரவு வரியின் தொகையை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய மேன்மிகை திருப்பிக்கொடு படலாகாது; ஆனால், அக்காலாண்டினை உடன் அடுத்து வரும் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப்படற்பாலதான, மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து அவ்வாறு எந்தள வுக்குக் கழிக்கப்படக் கூடுமோ அந்தளவுக்கும், அத்துடன் அத்தகைய மேன்மிகையின் ஏதேனும் மிகுதி, அதற்கடுத்து வரும் காலாண்டுக்கெனச் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறே, தொடர்ந்தும் கழிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொழாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டுக்கான கழிப்பனவுத் தொகையானது, அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அக்காலாண்டுக்கெனச் செலுத்தப்படற்பால தான மொத்த விற்பனை வரவு வரித்தொகையை விஞ்சு கின்றவிடத்து, அத்தகைய மேன்மிகையானது, அக்காலாண் டினை உடன் அடுத்துவரும் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப் படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து, அவ்வாறு எந்தளவுக்குக் கழிக்கப்படக்கூடுமோ அந்தளவுக் கும்; அத்துடன், அத்தகைய மேன்மிகையின் ஏதேனும் மிகுதி, அதற்கடுத்துவரும் காலாண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவரால் செலுத்தப் படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும் அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதலும் வேண்டும். எந் தக் காலாண்டில் அத்தகைய மேன்மிகை எழுகின்றதோ அந் தக் காலாண்டிலிருந்து கணக்கிடப்படும் நான்காம் காலாண் ண்டுக்கென அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர் பில் அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற் பனை வரவு வரியிலிருந்து கழிக்கப்பட முடியாதுள்ள அத்

தகைய மேன்மிகையின் ஏதேனும் விஞ்சு தொகை, 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது:—

(1) ''அத்தகைய வழங்குநருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய வழங்குநருக்குச் செலுத்தப் படுதல் வேண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:—

''ஆயின், மேற்சொல்லப்பட்ட விதமாக நாணயக் கடிதம் மூலம் அத்தகைய வழங்கல் மேவப்படுதல் உசிதமற்றதாகுமென அல்லது இயலாததாகுமென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, அத்தகைய பொருளின் தயாரிப்பில் அல்லது உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களுக்குச் சார்த்தப்படக்கூடியவாறு வழங்குநரால் செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியின் அத்தகைய தொகையானது—

(அ) அத்தகைய வழங்கல் இலங்கையிலுள்ள வங்கியொன்றில் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றின் மூலம், அல்லது அத்தகைய வழங்கலுடன் தொடர்புடையதான அவ்வேற்றுமதிகள், ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துமளவுக்கு அவரால் தேவைப்படுத்தப் பட்டவாறான அத்தகைய வேறு ஆவணச் சான்றின் மூலம் மேவப்பட்டிருக்குமாயின்; அத்துடன்

(ஆ) அத்தகைய வழங்கலுடன் தொடர்புடையதான ஏற்றுமதிகளின் பெறுமதிக்குரிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை பற்றி, அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி எந்த வங்கிக்கு அனுப்பப் பட்டதோ அந்த வங்கியினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்குமாயின்,

ஆணையாளர் தலைமையதிபதியினால் கொடுப்பனவு செய்யப் படுதல் வேண்டும்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு, அதன் உட்பிரிவு (4) இல் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:—

(1) பந்தி (iii) இல் ''ஏதேனும் கீழொப்பந்தம்; அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் கீழொப்பந்தம்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) பந்தி (iv) இல் ''ஏதேனும் ஒப்பந்தம்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் ஒப்பந்தம்; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) பந்தி (iv) ஐ உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்: —

''(v) சினிமாப் படச்சுருள்களின் வழங்குகைக்கெனத் தயாரிப்பாளரொருவரினால் செய்யப்படும் ஏதேனும் ஒப்பந்தம்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு, ''அதிகாரம் பெற்ற பிரதிநிதி'' என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''வங்கி'' என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றெனப் பொருள்படும்;''

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம்

*[1990, திசெம்பர் மாதம் 06 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழைத் தனதுடைமையில் வைத்திருக்கும் எவரேனும் ஆளுக்கு வரிச் சலுகைகளுக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்தகைய சான்றிதழ்கள் எப்பணங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டனவோ, அவரது இயைபான இலாபங்களை அல்லது வருமானத்தைக் குறித்துக்காட்டும் அப்பணங்களைத் தேசிய சேமிப்பு வங்கியில் விசேட கணக்குகளில் வைப்பிலிடுவதனை இயலச் செய்வதற்கும்; அத்தகைய விசேட கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணங்களின்மீது ஒரு வரியை விதித்து அறவிடுவதற்கும்; அத்தகைய விசேட கணக்குகளில் பணங்களை வைப்பிலிடும் ஆட்களுக்கு அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானம் தொடர்பான தவறுகைகளுக்கான குற்ற வழக்குகளுக்கெதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கும்; அவற்றோடு சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழைத் தனதுடைமையில் வைத்திருக்கின்றவரும்—

(அ) அவரது இயைபான இலாபத்தின் அல்லது வருமானத்தின் முழுமையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் குறித்துக்காட்டுகின்ற பணங்களிலிருந்து அத்தகைய வைப்புச் சான்றிதழைக் கொள்வனவு செய்துள்ளாரென உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது வேறெவரேனும் அலுவலரினால் கண்டுபிடிக்கப்படுகின்றவரும்;

(ஆ) 1989 மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எழுந்த அல்லது அவருக்குத் திரண்ட இலாபங்கள் அல்லது வருமானம் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில், வருமான வரியை அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவை விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரியை, அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொழில் மொத்த வரவுவரியை, அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியைத் தட்டிக் கழித்துள்ளாரென்ற ஏதேனும் சார்த்துகைக்காக அல்லது சந்தேகிப்புக்காக உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின்

ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அவர் தொடர்பான ஏதேனும் நுண்ணாய்வு தொடங்கு முன்னர், தாம் அத்தகைய வைப்புச் சான்றிதழ்களை அவரது இயைபான இலாபங்களினதும் வருமானத்தினதும் முழுமையை அல்லது அதன் பாகத்தைக் குறிக்கின்ற பணங்களினின்றும் அவற்றிலிருந்தும் கொள்வனவு செய்துள்ளாரென உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது எவரேனும் அலுவலருக்குத் தன்னிச்சையாகவே வெளியிட்டுள்ளவரும்,

ஆன எவரேனுமாளுக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோராளும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் ''இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆள்'' என்று குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வைப்புச் சான்றிதழும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் ''இச்சட்டம் ஏற்புடையதாகும் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்'' என்று குறிப்பீடு செய்யப்படுதலும் வேண்டும்.

3. (1) இச்சட்டம் ஏற்புடையதாகும் எவரேனுமாள், இச்சட்டம் ஏற்புடையதாகும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழை வங்கிக்கு விற்கலாம் என்பதுடன், அத்தகைய விற்பனையாலான முழு வரும்படிகளையும் வங்கியில் அந்நோக்கத்துக்காக அவரினால் திறக்கப்படக் கூடிய அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரது வரவுக்கு வைப்பிலிடலாம்.

(2) இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆள் எவரினாலும் விற்பனைக்கென வங்கிக்கு முனையப்பட்ட இச்சட்டம் ஏற்புடையதாகும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழை, அத்தகைய வைப்புச் சான்றிதழ் இச்சட்டம் ஏற்புடையதாகும் வைப்புச் சான்றிதழ் என ஆணையாளர் தலைமையதிபதி வங்கிக்கு அத்தாட்சிப்படுத்தினால், வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விலையில் கொள்வனவு செய்தல் வங்கிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

4. (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் வைப்பை இடும் ஒவ்வோராளும்—

(அ) இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் வங்கிக்கு ஒரு வெளிப்படுத்துதலைச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வங்கிக்கு விற்கப்பட்டதும், இச்சட்டம் ஏற்புடையதாகின்றதுமான குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழின் முகப் பெறுமதியின் பத்துசத வீதத்துக்குச் சமமான தொகையொன்றிலான வரியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(இ) (ஆ) என்னும் பந்தியின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து, அந்தக் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ் தொடர்பாக 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின்

ஏற்பாடுகளின்கீழ் அவரினால் செலுத்தப்பட்ட ஏதேனும் முத்திரைத் தீர்வையின் தொகையைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ்க் கழிக்கத்தக்க ஏதேனும் தொகையைக் கழித்த பின்னர் அவ்வுட்பிரிவின்கீழ் எவரேனுமாளினால் செலுத்தப் படற்பாலதான வரியானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்தகைய ஆளினால் 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட கணக்கு எத்தேதியன்று திறக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள், அக்கணக்கில் அவரது வரவிலிருக்கும் பணங்களிலிருந்து வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவிற்குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய விசேட கணக்கில் எவரேனுமாளின் வரவிலிருக்கும் பணங்களிலிருந்து (2) ஆம் உட்பிரிவின் கீழ் வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் வரிக்கொடுப்பனவு அத்தகைய ஆளினால் அதிகாரமளிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரி அத்தகைய ஆளினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

5. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிலிட்டுள்ள எவரேனுமாளை, அத்தகைய ஆளினால் அத்தகைய விசேட கணக்கு எத்தேதியன்று திறக்கப் படுகிறதோ அத்தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டாண்டுக் காலப் பகுதி முடிவுறுமுன்னர், 4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரிக் கொடுப்பனவின் பின்னர் அத்தகைய விசேட கணக்கில் அவரது வரவிலிருக்கும் மீதித் தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை மீளப் பெறுவதற்கு அனுமதித்தலாகாது.

ஆயின், அத்தகைய ஆள்—

(அ) வங்கியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, மேற்சொல்லப்பட்ட இரண்டாண்டுக் காலப் பகுதி முடிவுறுமுன்னர், அத்தகைய மீதித் தொகையின் மேல் திரளுகின்ற வட்டி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை மீளப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வங்கிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத் தொடர்பின்மூலம், அத்தகைய மீதி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலப்பகுதிக்காக, ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஏதேனும் வரியையும் அதன் மீதான ஏதேனும் தண்டத்தையும் கொடுத்துத் தீர்ப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பும்படி வங்கியை வேண்டலாம்.

6. மூன்றாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவரேனுமாளின் வரவிலிருக்கின்ற மீதித் தொகை

யின்மேல், 4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரிக்கொடுப்பனவைச் செய்த பின்னர், சேமிப்புக் கணக்குகளின் வரவிலிருக்கும் பணங்களின்மீது வங்கியினால் செலுத்தப்படற்பாலதான நடப்பு வட்டி வீதத்தில் வங்கியானது வட்டி செலுத்துதல் வேண்டும்.

7. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணங்களின்மீதானதும் 5 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான இரண்டாண்டுக் காலப் பகுதியின்போது திரளுகின்றதுமான வட்டி, வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

8. இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் 4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரியைச் செலுத்தியவராகக் கருதப்படுகின்றவருமான எவரேனும் ஆள் பின்வருவனவற்றுக்கு ஆளாதலாகாது:—

(அ) (i) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரால் வைப்பிலிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட, வைப்புச் சான்றிதழ்களின் விற்பனையினாலான வரும்படிகளினால் குறிக்கப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களின் அல்லது வருமானத்தின் அத்தகைய பாகம் தொடர்பில், வருமானவரி அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகும் சட்டத்தின்கீழ் ஏதேனும் வருமானவரி அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு; அல்லது

(ii) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு அவரது தேறிய செல்வத்தின் எந்தப் பாகத்தைக் கொள்ளுவதற்கு 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரினால் வைப்பிலிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் விற்பனையினாலான வரும்படிகளினால் குறிக்கப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களின் அல்லது வருமானத்தின் அத்தகைய பாகம் பயன்படுத்தப்பட்டுள்ளதோ, அவரது தேறிய செல்வத்தின் அந்தப் பாகம் தொடர்பில், செல்வ வரி அல்லது செல்வ வரியின் மீதான மிகையிறுப்பனவின் விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின்கீழ் ஏதேனும் செல்வவரி அல்லது செல்வவரியின் மீதான மிகையிறுப்பனவு; அல்லது

(iii) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலாண்டுக்கு, 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரினால் வைப்பிலிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் விற்பனையிலான வரும்படிகளினால் குறிக்

கப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களினது அல்லது வருமானத்தினது அத்தகைய பாகம் மொத்த வரவின் எந்தப் பாகத்திலிருந்து எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ அந்தப் பாகம் தொடர்பில், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான ஏதேனும் தொழில் மொத்த விற்பனை வரவு வரி அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி; அல்லது

(ஆ) பின்வருவனவற்றின் கீழான ஏதேனும் தவறுக்கான ஒரு குற்ற வழக்குக்கு அல்லது ஒரு தண்டத்துக்கு:—

(i) பந்தி (அ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது இயைபான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது இவை சம்பந்தமாக அல்லது பந்தி (அ) (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது அது சம்பந்தமாக 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த எந்த வரி மதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் வருமான வரியின் அல்லது வருமான வரி மிகையிறுப்பனவின், அல்லது செல்வ வரியின் அல்லது செல்வ வரி மிகையிறுப்பனவின் விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகும் சட்டம்; அல்லது

(ii) பந்தி (அ) (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த வரவின் அத்தகைய பாகம் தொடர்பில், 1989 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலாண்டு தொடர்பாக 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம்.

9. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும்,—

(அ) (i) வருமானவரி அல்லது வருமானவரியின் மிகையிறுப்பனவு அல்லது செல்வவரி அல்லது செல்வவரியின் மிகையிறுப்பனவு விதித்தல் தொடர்பாக அப்போதைக்குள்ள சட்டத்தினதும்; அல்லது

(ii) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தினதும்,

ஏற்பாடுகளின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் வரி மதிப்பீட்டின் அல்லது

(ஆ) வேறேதேனும் கருமத்தினதும்,

மீளாய்வை அதிகாரமளிப்பதாக (இது அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இறுதியானதும் முடிவானதுமாக வந்திருத்தல் வேண்டும்) வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

10. (1) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் ஒவ்வோர் அலுவலரும் அல்லது ஊழியரும், இச்சட்டத்தைச் செயற்படுத்துகையில் அவரது அறிவுக்கெட்டக்கூடிய எல்லாக் கருமங்களும் பற்றி இரகசியத்தைப் பேணிக் காத்தலும் இரகசியத்தைப் பேணிக் காப்பதில் உதவுதலும் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதியுடன் அல்லது எவரேனும் அலுவலருடன் அல்லது ஒரு சட்ட நீதிமன்றத்துடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காக, 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்குத் தொடர்பான பின்வரும் விபரங்கள் பற்றிக் கடிதத் தொடர்பு கொள்ளலாம்:—

(அ) கணக்கு வைத்திருப்பவரின் பெயரும் வருமானவரிக் கோப்பிலக்கமும்;

(ஆ) தொழில் ஏதேனுமிருப்பின் அதன் பெயரும், வருமானவரிக் கோப்பிலக்கமும்;

(இ) வைப்பு அல்லது மீளப் பெறுகைத் தேதி;

(ஈ) வைப்பிலிடப்பட்ட அல்லது மீளப் பெறப்பட்ட தொகை;

(உ) அத்தகைய விசேட கணக்குத் தொடர்பாக பிரிவு 4 (1) (அ) வின் கீழ்ச் செய்யப்பட்ட வெளிப்படுத்துதலில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

11. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

''வங்கி என்பது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருளாகும்;

''ஆணையாளர் தலைமையதிபதி'', ''இலாபங்கள்'', ''வருமானம்'', ''செல்வம்'', ''வரிமதிப்பீட்டாண்டு'' என்ற சொல்லமைப்புகள், முறையே 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''ஆள்'' என்பது ஒரு கம்பெனியையும் ஆட்கள் குழுவையும் உள்ளடக்குகின்றது.

எவரேனுமாள் தொடர்பாக ''இயைபான இலாபங்கள் அல்லது வருமானம்'' என்பது, பின்வரும் எவையேனும் இலாபங்கள் அல்லது வருமானம் என்று பொருளாகும்:—

(அ) 1989 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரினால் பெறப்பட்டவை அல்லது அவரது நன்மைக்கு எழுந்தவை அல்லது திரண்டவை; அத்துடன்

(ஆ) வருமான வரி விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டத்தின்கீழ் அவை தொடர்பில் விபரத் திரட்டெதுவும் அவரினால் கொடுத்துதவப்படாதவை, அல்லது, அவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் வெளிவிடப்பட்டிராதவை; அத்துடன்

(இ) வருமானவரி அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டத்தின்கீழ் வருமான வரி அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு இறுக்கப்படற்பாலதாகவிருந்தவை;

''குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்'' என்பது—

(அ) 1989 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் சட்டத்தின்கீழ்; அத்துடன்

(ஆ) 1990 யூன் 20 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1991 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர்

வழங்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழ் என்று பொருளாகும்;

''வருமானவரி'' அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டம்'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க செல்வ வரியின் மீதான மிகையிறுப்பனவுச் சட்டம், அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வவரியின் மீதான மிகையிறுப்பனவுச் சட்டம் என்று பொருளாகும்.

12. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை

**1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம் பிரிவு 4(1)(அ) வின் கீழான வெளிப்படுத்தல்**

வருமானவரிக் கோப்பிலக்கம்:

(ஏதேனுமிருப்பின்)....................

விசேட கணக்கு இல.:................

தொழிலின் பெயர் ஏதேனுமிருப்பின்:...............

தேதி:...................

.................................................................

(முகவரி)

என்ற முகவரியைச் சேர்ந்த திரு./திருமதி/செல்வி.................(முழுப் பெயர்) ஆகிய நான்—நாங்கள்................இத்தால்

(1) உங்களை வேண்டுகின்றேன்/வேண்டுகிறோம்—

(அ) .......... இன் நியதிகளின்படி..........ரூபா கொண்ட ஒரு பணத் தொகையை (ரூபா..........) .......... முகவரியைச் சேர்ந்த.......... என்பவரின் பெயரில் ஒரு விசேட கணக்கில் இட்டு வைப்பதற்கு ஏற்றுக் கொள்ளும்படி,

(ஆ) ..........ரூபா தொகையினதான (ரூபா..........) இத்தொகையின் மீது வருமதியாகவுள்ள வரியை உண்ணாட்டரசிறை ஆணையாளருக்கு நேரடியாக அனுப்பும்படி,

(இ) அக்கணக்கிலுள்ள மீதித் தொகை..........உடன் வைத்திருக்கும்படி, அளிக்கப்பட்ட தொகை ரூபா..........ரூபா............

வரி கழித்தகு 20 சதவீதத்தைக் கழிக்க ரூபா................,

செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையைக் கழிக்க ரூபா..........,ரூபா...........

தேசிய சேமிப்பு வங்கியினால் விசேட கணக்கில் வைத்திருக்கப் பட வேண்டிய மீதித் தொகை ரூபா..........ரூபா..........

(2) இத்தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுறு முன்னர் இந்த மீதித் தொகையின் எப் பாகத்தையும் மீளப் பெறமாட்டேன்/மீளப் பெற மாட்டோம் எனப் பொறுப்பேற்கிறேன்/பொறுப்பேற்கிறோம்;

(3) எனது/எங்கள் விசேட பணவைப்புப் புத்தகம் உங்கள் வங்கியினது காப்பான கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படுவதற்கு உடன்படுகிறேன்/ உடன்புடுகிறோம்;

(4) அப்போதைக்குள்ளனவும், காலத்துக்குக் காலம் பயனுடையனவாக வரக்கூடியனவுமான உங்கள் வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள் பற்றிய விதிகளினால் பிணிக்கப்படுவதற்கு மேலும் உடன்படுகின்றேன்/ உடன்படுகிறோம்;

(5) அப்பயன்பட்ட வேண்டுகோளொன்று என்னால்/எங்களால் எழுத்தில் உங்களுக்குச் செய்யப்படுவதன்மேல் இந்த மீதித் தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பும்படி இத்தால் அதிகாரமளிக்கிறேன்/அதிகாரமளிக்கிறோம்.

வைப்பிலிடுபவரின் ஒப்பம்.

எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.

கிளை முகாமையாளரின் ஒப்பம்.

# 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம்

*[1990, திசெம்பர் மாதம் 06 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**பொதுவில் கைத்தொழில்களையும் குறிப்பாக ஏற்றுமதிக் கைத்தொழில்களையும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக ஊக்குவிப்புக்களையும், உள்ளமைப்பையும் ஏற்பாடு செய்யும் மற்றும் அதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கும் நோக்குடன், கைத்தொழில் மேம்படுத்தல் ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும், கைத்தொழில் மதியுரைப் பேரவையொன்றை அமைப்பதற்கும், பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுக்களை அமைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், இச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு தவிர்ந்த ஏனைய ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் ''நியமித்த தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும், அத்துடன் 24 ஆம் பிரிவு 1991 யூலை 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பாகம் I

### கைத்தொழில் பொறுப்புமுயற்சிகளைப் பதிவுசெய்தல்

2. (1) நியமித்த தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்கிய கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றைக் கொண்டு நடாத்தும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய பொறுப்பு முயற்சி கொண்டு நடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தை, நியமித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

(2) நியமித்த தேதிக்குப் பின்னர் தொடங்கப்படும் கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றைக் கொண்டு நடாத்தும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய, பொறுப்பு முயற்சி கொண்டு நடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தை அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சி தொடங்கப்பட்டு மூன்று மாதங்களினுள் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான இடப்பரப்பில் உள்ள தொழில் முயற்சியொன்றுக்கு அல்லது உரிமம் பெற்ற தொழில் முயற்சியொன்றுக்கு இப்பிரிவில் உள்ளது எதுவும் ஏற்புடையதாதல் ஆகாது.

3\. (1) இரண்டாம் பிரிவின்கீழ் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ் வொன்றும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்விண்ணப்பம் பின்வருவன உள்ளிட்ட விதித்துரைக்கப் பட்ட விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும், அவையாவன:—

(அ) கைத்தொழில் பொறுப்பு முயற்சியின் சொந்தக்காரர்களின் பெயரும், முகவரியும்;

(ஆ) கைத்தொழில் பொறுப்பு முயற்சி கொண்டு நடாத்தப்படும் இடம் அல்லது அமைவிடம்;

(இ) அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் உற்பத்தி செய்யப் படும் கைத்தொழில் விளைபொருட்கள்;

(ஈ) அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை; அத்துடன்

(உ) அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சியின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் காணி, கட்டிடங்கள், கட்டமைப்புகள் ஆகியவை பற்றிய அளவுக் குறிப்பீடுகள்.

(2) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் ஒன்றின் விடயத்தில், அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சி கொண்டு நடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தைப் பதிவு செய்வதற் கான விண்ணப்பமொன்றுடன், 26 ஆம் பிரிவின்கீழ் அக்கைத்தொழில் பொறுப்பு முயற்சி தொடர்பில் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.

4\. (1) பதிவாளர், 3 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்று கிடைக் கப்பெற்றதன்மீதும், அத்தகைய விண்ணப்பத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட இடத் தில் அல்லது அமைவிடத்தில் கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்று கொண்டு நடாத்தப்படுகின்றது எனத் திருப்தியடைந்ததன்மீதும், விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் அமைந்த பதிவுச் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்க் கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில் சான்றிதழொன்று வழங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய கைத் தொழில் பொறுப்பு முயற்சியின் சொந்தக்காரர், 3 ஆம் உட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) விலிருந்து (உ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட் டுள்ள விபரங்களையும், அத்துடன் அவ்வாண்டுக்கான அக்கைத்தொழில் பொறு ப்பு முயற்சியின் மொத்த விற்பனை வரவையும் மொத்த உற்பத்தியையும் அடக்கிய ஆண்டு விபரத்திரட்டொன்றை, அடுத்துவரும் ஆண்டு மார்ச்சு முப்பத் தோராம் நாளுக்கு முன்னராகப் பதிவாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

5\. (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்றை ஆளொருவர் கொண்டு நடாத்துமிடத்து, பதி வாளர், அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சி எம்மாகாணத்தினுள் கொண்டு நடாத்தப்படுகின்றதோ, அம்மாகாணத்திற்கென அரசியலமைப்பின்

154ஞ என்னும் உறுப்புரையின்கீழ்த் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சி கொண்டு நடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தை 2 ஆம் பிரிவுக்கு இசையப் பதிவு செய்யுமாறு அத்தகைய கைத்தொழில் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆளைத் தேவைப் படுத்தும் கட்டளையொன்றைக் கோரி விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தகைய மேல் நீதிமன்றத் திற்கு முகவரியிடப்படும் எழுத்திலான மனு மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXIV ஆம் அத்தியாயத்தில் விதிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்க விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

6. சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அல்லது அமைவிடத்தில் கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்று கொண்டு நடாத்தப்படுகின்றது என் னும் பயன்படவமைந்த, அத்துடன் அத்தகைய இடம் அல்லது அமைவிடம் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்னும் பயன்படவமைந்த பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்று 5 ஆம் பிரிவின்கீழ் தொடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏல்தக வுடையதாதல் வேண்டும் என்பதுடன், அது அதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வு களுக்கான முதற்றோற்றச் சான்றாகவிருத்தலும் வேண்டும்.

## பாகம் II

## கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு

7. (இதனகத்துப் பின்னர் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப் படும்) கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு என அழைக்கப்பட வேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) ஆணைக்குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச் சுக்கான செயலாளர்;

(இ) கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்தல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஈ) வியாபாரம், வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(உ) புடவைக் கைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(ஊ) சிறு கைத்தொழில் என்னும் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(எ) கமத்தொழில், பண்ணை அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(ஏ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்;

(ஐ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஒ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தவிசாளர்; அத்துடன்

(ஓ) கைத்தொழிற்றுறையில் பரந்த அனுபவம் கொண்டவர்களும் திறமையுள்ளவர்களுமென அமைச்சர் காணும் ஆட்களிடையேயிருந்து, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்துக்குக்குறையாதவர்களும், ஏழுக்கு மேற்படாதவர்களுமான ஆட்கள்.

(2) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால், அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சனாதிபதிக்கு முகவரியிடப்படும் கடிதம் மூலம் ஆணைக்குழுவிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(4) சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரை காரணம் காட்டாமலே அகற்றலாம்.

(5) மூன்றாம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் இறப்பதன், பதவி விலகலின் அல்லது அகற்றப்படுவதன் காரணமாக ஆணைக்குழுவில் வெற்றிடம் எதுவும் ஏற்படுமிடத்து சனாதிபதி, அப்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புதல் வேண்டும்.

(7) அத்தகைய எவரேனும் உறுப்பினர் இறப்பதன், பதவி விலகுவதன் அல்லது அகற்றப்படுவதன் காரணமாக எழுகின்ற வெற்றிடம் ஒன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவருக்கு முன் பதவி வகித்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரே ஆணைக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராதவிடத்து, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரே அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், அத்தகைய செயலாளர் ஆகிய இருவருமே ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தராதவிடத்து, அத்தகைய கூட்டத்திற்கு வருகை தந்துள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் (15) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கான உறுப்பினர் ஒருவரைத் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(9) ஆணைக் குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஆறாதல் வேண்டும்.

(10) தவிசாளர் அல்லது ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் ஆள், அவரது சொந்த வாக்குடன் மேலதிமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(11) ஆணைக்குழு குறைந்தது ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு முறைபேனும் கூடுதல் வேண்டும் என்பதுடன், அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டு நடாத்தப்படுவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

(12) ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்கு இருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன், ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், ஆணைக் குழுவில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(13) ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

(14) (1) (ஆ) என்னும் உட்பிரிவில் அல்லது (1) (இ) என்னும் உட்பிரிவில் அல்லது (1) (எ) என்னும் உட்பிரிவில் அல்லது (1) (ஏ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவரது இடத்தில் அவரது மாற்றாளாக ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கென அவரது அமைச்சின் சிரேட்ட அலுவலர் ஒருவரைப் பதவிப் பெயர் குறித்து நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய பதவிப் பெயர் குறித்த நியமனம் பற்றி ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அவர் அறிவித்தலும் வேண்டும்.

(15) பதினான்காம் உட்பிரிவின்கீழ்ப் பதவிப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மாற்று உறுப்பினர் ஒருவர் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கும் அங்கு வாக்களிக்கவும் உரிமையுடையவராதல் வேண்டும்; ஆனால், ஆணைக்குழுவின் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கென (8) ஆம் உட்பிரிவின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவற்றவராதல் வேண்டும்.

(16) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அவரது பதவியின் பயன்கொண்டு ஆணைக்குழுவில் பிரதிநிதியாகவிருப்பதற்கு உரித்துடைய ஒன்றுக்கு மேற்பட்ட பதவியை வகிக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்துமூலம், ஆணைக்குழுவில் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் பதவியைக் குறித்துக் காட்டலாம் என்பதுடன், அவர் வகிக்கும் மற்றைய பதவியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வேறோர் அலுவலரைப் பெயர் குறித்து நியமித்தலும் வேண்டும்.

(17) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ஆணைக்குழுவின் முடிபுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும். ஆணைக்குழு, இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை அத்தகைய செயலாளருக்குக் கையளிக்கலாம்.

9. ஆணைக்குழுவுக்குச் செயலாளரும், ஆணைக்குழுவின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு பணியாட்டொகுதியினரும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

10. (1) ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) கைத்தொழில் மயப்படுத்தலுக்கான தோதான பெருமட்டப் பொருளாதாரக் கொள்கைகள் உட்பட, கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான கொள்கை நடவடிக்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனையளித்தல்.

(ஆ) கைத்தொழில் மயப்படுத்தலுக்கான முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பையும், கைத்தொழில் மேம்படுத்தலையும் உறுதிப்படுத்தல்;

(இ) கைத்தொழில் மயப்படுத்தலுக்காக நிறுவனஞ்சார் செயல்முறைமைகள் வழங்கப்படுதலை உறுதிப்படுத்தல்;

(ஈ) கைத்தொழில்சார் உள்ளமைப்புக்களையும், சேவைகளையும் வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரித்தல்.

(உ) கைத்தொழில்களுக்கெனத் திட்டவட்டமான விளைபொருட்கள், மற்றும் சந்தைத் தகவல் உள்ளமைப்பொன்றை ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஊ) அமைச்சரினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றவாறான கைத்தொழில் பற்றிய அத்தகைய கருமங்கள் தொடர்பில் விசாரணைகளைச் செய்தலும், அமைச்சருக்கு அறிக்கைகளைச் செய்தலும்.

(2) ஆணைக்குழு, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்யத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில், ஆணைக்குழுவானது பின்வருவனவற்றிற்கான அவசியத்தைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:—

(அ) திறமைவாய்ந்தவையும், சர்வதேச போட்டித் திறன் வாய்ந்தவையுமான கைத்தொழில்களின் அபிவிருத்தியையும், வளர்ச்சியையும் ஊக்குவித்தல்;

(ஆ) பொருளாதாரத்தில் அமைப்புசார் மாற்றங்களுக்கான சீராக்கலுக்குத் துணைதந்து ஊக்குவித்தல்;

(இ) தேசியக் கொள்கை அனுமதிக்கின்றமட்டில், கைத்தொழில் ஒழுங்குபடுத்தலை ஆகக் குறைந்தளவுக்குக் குறைத்தல்.

(4) பத்து (1) (ஊ) என்னும் பிரிவின் கீழ் ஏதேனும் விடயத்தை விசாரணைக்கு, ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதில், அமைச்சர், ஆணைக்குழு அதன் இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகளை முறையே எக்காலப் பகுதிக்குள் அமைச்சருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமோ அக்காலப் பகுதிகளைக் குறித்துரைக்கலாம்.

(5) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ், பின்வருவன பற்றி விசாரணைசெய்து அறிக்கையிடுமாறு ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தலாம்—

(அ) ஏதேனும் கைத்தொழிலுக்கு அரசாங்கத்தினால் நிதிசார் உதவி அல்லது வேறு உதவி வழங்கப்படுதல்.

(ஆ) அரசாங்கம் ஏதேனும் கைத்தொழிலுக்கு நிதிசார் உதவியை வழங்குவதற்குள்ள அவசியம் அல்லது ஏதேனும் கைத்தொழிலுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் நிதிசார் உதவியை மீளப் பெறுவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உள்ள அவசியம்;

(இ) இலங்கைக்குள் எவையேனும் பண்டங்களை இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு உள்ள அவசியம்; அல்லது

(ஈ) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள் மீதான தீர்வைகளை விதிப்பதற்கு, அகற்றுவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உள்ள அவசியம்.

11. ஆணைக்குழு அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறானவையும், விதித்துரைக்கப்பட்ட தகைமைகள் வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டமைந்தனவையுமான அத்தகைய குழுக்களை நியமிக்கலாம் என்பதுடன், இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள எவையேனும் பணிகளை அத்தகைய குழுக்களுக்குக் கையளிக்கவும் செய்யலாம்.

12. ஆணைக்குழு, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் இறுதியிலும், அந்த ஆண்டின்போது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட வேலை பற்றிய அறிக்கை யொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சர் அத்தகைய அறிக்கையைப் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

## பாகம் III

## கைத்தொழிலுக்கான மதியுரைப் பேரவை

13. (1) (இதனகத்துப் பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப் படும்) ''கைத்தொழிலுக்கான மதியுரைப் பேரவை'' என அழைக்கப்பட வேண்டிய பேரவையொன்று இருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்;

(ஆ) கைத்தொழில் அபிவிருத்திக்கான அதன் பங்களிப்பைக் கருத்திற் கொண்டு, அமைச்சரினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு தனி அவையினாலும், சம்மேளத்தினாலும், அல்லது கழகத்தினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரு உறுப்பினர்கள்;

(இ) அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களும், கைத்தொழிலைப் பிரதிநிதித் துவம் செய்பவர்களுமான விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினரான ஆட்கள்;

(ஈ) கைத்தொழிற்றுறையில் பரந்த அனுபவம் வாய்ந்தவர்களும், திறமை மிக்கவர்களும் என அமைச்சர் காணும் ஆட்களிடையேயிருந்து அமைச் சரினால் நியமிக்கப்படும் பதினைந்துக்கு மேற்படாத ஆட்கள்.

14. பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) கைத்தொழில் தொடர்பிலான பிரச்சினைகளையும், கைத்தொழில் அபிவிருத்திக்காக அரசாங்கத்துடனான கூட்டுக் கைத்தொழில், நிகழ்ச் சித் திட்டங்களைக் கலந்தாராய்வதற்கென இலங்கையில் உள்ள கைத் தொழில் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஆ) கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனுறுதித் தன்மை பற்றி அமைச்சருக்கு ஆலோசனையளித்தல்.

15. (1) பேரவையானது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்று வதற்கு அவசியமானவாறாக அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் அத்தகைய, கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுவதற்கான நடவடிக்கை முறை, 13 (2) ஆம் பிரிவின் (ஆ), (இ) அத்துடன் (ஈ) ஆகிய பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம், பேரவையின் தவிசாளரைத் தேர்ந்தெடுத்தல், 13 (2) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தனி அவைகளை, சம்மேளனங்களை அத்துடன் கழகங்களை ஏற்றங்கீகரிப்பதற்கான வழிகாட்டல்கள், அத்துடன் கைத்தொழிலைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஆட்களைத் தெரிவு செய்யும் முறை ஆகியன, விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) பேரவை, ஒவ்வோராண்டின் இறுதியிலும், அவ்வாண்டின் போதான அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரிப்பித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

## பாகம் IV

### பிராந்திய கைத்தொழில் சேவைக்குழுக்கள்

16. (1) அமைச்சர், ஒவ்வொரு மாகாணத்தினதும் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அம்மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துக்காக அத்தகைய மாகாணத்தினுள் பிராந்தியங்களைத்தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ்த் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு பிராந்தியத்துக்கும், பிராந்திய கைத்தொழில் சேவைக் குழு என அழைக்கப்படும் குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய குழு, அத்தகைய பிராந்தியம் அமைந்துள்ள மாகாணத்தின் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

17. பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) அமைச்சருக்கும், அத்தகைய குழு எப்பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்டதோ அப்பிராந்தியம் அமைந்துள்ள மாகாணத்தின் பிரதம அமைச்சருக்கும், அத்தகைய பிராந்தியத்தில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி பற்றி ஆலோசனை வழங்குதல்;

(ஆ) அத்தகைய பிராந்தியத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கான திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தல்;

(இ) தேசியக் கொள்கைகளுக்கிணங்க அத்தகைய பிராந்தியத்தில் கைத்தொழில் அபிவிருத்தியை மேம்படுத்தலும், துரிதப்படுதலும்;

(ஈ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு இணங்கப், பிராந்தியத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான சேவைகளையும், வசதிகளையும் ஏற்பாடு செய்வதை ஒருங்கிணைத்தல்;

(உ) அப்பிராந்தியத்தில் ஏதேனும் கைத்தொழில் சம்பந்தமான ஏதேனும் முதலீட்டு முடிபைச் செயற்படுத்துவதற்கு எவரேனும் முதலீட்டாள ருக்கு உதவி செய்தல்; அத்துடன்

(ஊ) அப்பிராந்தியத்திற்கு பிராந்திய கைத்தொழில் சேவை நிலையமொன் றைத் தாபித்தல்.

18. பிராந்தியக் கைத்தொழில் சேவைக்குழுவின் கூட்டமைவும், அத் தகைய குழுவினால் அலுவல்கள் கையாளப்படுதலும் விதித்துரைக்கப்பட்டவா வாறாக இருத்தல் வேண்டும்.

19. கைத்தொழிற் பெருந்தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக் களையும், அறிவியற் பூங்காக்களையும் வேறு குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பையும் பின்வருவன உட்படத் தாபித்தலும், நிருவகித்தலும்:—

(அ) கைத்தொழில் பெருந்தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக்களை யும் அறிவியல் பூங்காக்களையும், குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பையும் தாபித்தற்கான விண்ணப்பங்கள், அத்தகைய பெருந்தோட்டம், பூங்கா அல்லது உள்ளமைப்பு தாபிக்கப்பட்டுள்ள அல்லது தாபிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்தியத்திற்கு நியமிக் கப்பட்ட பிராந்திய கைத்தொழில் குழுவுக்கு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடில், பதிவாளருக்குச் செய்யப்படும் முறை;

(ஆ) ஏலவேயுள்ள கைத்தொழில் பெருந் தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக்களையும், அறிவியற் பூங்காக்களையும் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளையும் பதிவு செய்வதற்கான விண் ணப்பங்கள், அத்தகைய பெருந் தோட்டம், பூங்கா அல்லது உள் ளமைப்பு தாபிக்கப்பட்டுள்ள பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள பிராந்திய கைத்தொழில் குழுவுக்கு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடில், பதிவாளருக்குச் செய்யப்படும் முறை;

(இ) அத்தகைய பெருந் தோட்டங்களினுள் அல்லது பூங்காக்களினுள் உள்ள கட்டிடங்களையும் வேறு கட்டமைப்புகளையும் கட்டியெழுப்புதற்கும், மாற்றியமைப்பதற்கும், அழிப்பதற்கும் ஆன அங்கீகாரம் வழங்கப் பெறுவதற்கான விண்ணப்பங்கள், அத்தகைய பெருந்தோட்டம் அல் லது பூங்கா தாபிக்கப்பட்டுள்ள பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்ட பிராந்திய கைத்தொழில் குழுவுக்கு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடில், பதிவாளருக்குச் செய்யப்படும் முறை; அத்துடன்

(ஈ) அத்தகைய பெருந் தோட்டங்களை, பூங்காக்களை அல்லது குறித் துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பை முகாமை செய்தல்,

விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

20. (1) ஏதேனும் கைத்தொழில் பெருந் தோட்டம், கைத்தொழில், பூங்கா, அறிவியற் பூங்கா அல்லது குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள் ளமைப்பு 19 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் தேவைப்

படுத்தப்பட்ட அங்கீகாரமின்றித் தாபிக்கப்படுமிடத்து அல்லது தேவைப்படுத்தப் பட்ட முறைக்கு முரணாக முகாமை செய்யப்படுமிடத்து அல்லது ஏதேனும் கட்டிடம் ஏதேனும் அத்தகைய பெருந்தோட்டத்தில் அல்லது பூங்காவில் 19 ஆம் பிரிவினில் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமின்றி நிறுவப்படுமிடத்து, பதிவாளர் அத்தகைய பெருந்தோட்டத்தை அல்லது பூங்காவை அல்லது விதித்துரைக்கப் பட்ட கைத்தொழில் உள்ளமைப்பை அல்லது கட்டிடத்தை அழிக்கப் பணிக்கும் கட்டளையொன்றுக்கு அல்லது அத்தகைய பெருந் தோட்டம் அல்லது பூங்கா அல்லது விதித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பு அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கு இசைய முகாமை செய்யப்படுத்தப்படுவதைத் தேவைப்படுத்தும் கட்டளையொன்றுக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்று, விடயத்திற் கேற்பக் கைத்தொழில் பெருந்தோட்டம், கைத்தொழில் பூங்கா, அறிவியற் பூங்கா, அல்லது குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பு என்றும் அது 19 ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப் பட்ட அங்கீகாரமின்றித் தாபிக்கப்பட்டிருக்கின்றது அல்லது அத்தகைய பெருந் தோட்டம் அல்லது பூங்கா அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு முரணாக முகாமை செய்யப்படுகின்றது அல்லது அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஒரு கட்டிடம், ஒரு கைத்தொழில் பெருந் தோட்டத்தில் கைத்தொழில் பூங்காவில், அல்லது அறிவியற் பூங்காவில் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றதுடன், அத்தகைய கட்டியெழுப்புதலானது, 19 ஆம் பிரிவினால் தேவைப்பட்ட அங்கீகாரமின்றி செய்யப்பட்டிருக்கின்றது என்றும் பயன்படவமைந்த பதிவாளரின் கைப்பட வழங்கப்படும் சான்றிதழொன்று, இப்பிரிவின்கீழ் தொடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், இதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாகவிருத்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ளான இடப்பரப்பு தொழில் முயற்சியொன்றுக்கு அல்லது உரிமம் பெற்ற தொழில் முயற்சியொன்றுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

21. (1) அமைச்சர், மாகாணமொன்றின் பிரதம அமைச்சரின் கலந்தா லோசனையுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், மாகாணத்தினுள் ஏதேனும் இடப்பரப்பை ''கைத்தொழில் இடப்பரப்பு'' ஒன்றாக வெளிப்படுத் தலாம்;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய இடப்பரப்பு 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப் பட்ட நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றினுள் அமையுமிடத்து, நகர அபி விருத்தி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட் டுடன் தவிர, அமைச்சரினால் வெளிப்படுத்துகை எதுவும் இவ்வுட்பிரிவின் கீழ்ச் செய்யப்படுதலாகாது.

(2) அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பு அமைந்துள்ள பிராந்தியத்துக்கு 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பிராந்திய கைத்தொழில் சேவைக்குழு, அத்தகைய கைத்தொழில்இடப்பரப்பினுள் கைத்தொழில்களுக்கான உள்ளமைப்பை

வழங்குவதற்கான திட்டங்களையும், செயற்றிட்டங்களையும், அத்துடன் அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பினுள் சேவைகளினதும், வசதிகளினதும் ஒருங்கிணைப்பையும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அமைச்சர், ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றவாறான அத்தகைய எவையேனும் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் அங்கீகரிக்கலாம்.

(4) ஒரு கைத்தொழில் இடப்பரப்புத் தொடர்பில் 3 ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு திட்டம் அல்லது செயற்றிட்டம் அங்கீகரிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பு அமைந்துள்ள பிராந்தியத்துக்கென நியமிக்கப்படும் பிராந்திய கைத்தொழில் சேவைக்குழு அத்தகைய திட்டத்தை அல்லது செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானதாகவிருத்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு அல்லது செயற்றிட்டத்திற்கு அவசியமானவாறான ஏதேனும் கட்டிடம் அல்லது கட்டமைவு எந்த நியமனங்களுக்கு இணங்கக் கட்டியெழுப்பப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைத்தல் வேண்டும்.

(6) அத்தகைய திட்டம் அல்லது செயற்றிட்டம், நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடப்பரப்பில் கட்டிடங்களைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது மாற்றியமைப்பதற்கு அங்கீகாரம் வழங்க ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரசபை, ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், (5) ஆம் உட்பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க அது இருப்பின், அவ்வாறு கட்டியெழுப்புதலுக்கு அல்லது மாற்றியமைத்தலுக்கு அங்கீகாரம் வழங்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அங்கீகாரம், அதற்கான விண்ணப்பம் செய்யப்படும் தேதியிலிருந்து எட்டு வாரங்களுக்குள் வழங்கப்படுதலும் வேண்டும்.

(7) அத்தகைய ஏதேனும் திட்டத்தின் அல்லது செயற்றிட்டத்தின் நோக்கங்களுக்காக கைத்தொழில் இடப்பரப்பொன்றில் ஏதேனும் கட்டிடத்தைக் கட்டியெழுப்புவதற்கான அல்லது மாற்றியமைப்பதற்கான விண்ணப்பம் ஒன்று அத்தகைய அங்கீகாரத்தை வழங்க எழுத்திலான சட்டத்தின் மூலம் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகார சபைக்குச் செய்யப்பட்டு, அத்தகைய அதிகாரசபை அத்தகைய அங்கீகாரத்தை அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்ட எட்டு வாரங்களுக்குள் தவறுமிடத்து, அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பு அமைந்துள்ள பிராந்தியத்துக்கு நியமிக்கப்பட்ட பிராந்திய கைத்தொழில் சேவைக் குழு, அத்தகைய எழுத்திலான சட்டத்தில் அத்தகைய அங்கீகாரத்தை வழங்கத் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபை, அலுவலர் அல்லது ஆள் பற்றிய குறிப்பீடுகள், அத்தகைய குழு பற்றிய குறிப்பீடு ஒன்று என்றாற்போன்ற அதே முறையில் அத்தகைய அங்கீகாரத்தை வழங்குதல் அதற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

22. (1) நியமித்த தேதியன்று தொடங்கி, 1994 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, கட்டிடம் எதுவும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் விதித்துரைக்கப்பட்ட, நியமங்களுக்கு ஒத்தியையவிருந்தாலன்றி, கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றின் நோக்கங்களுக்காகக் கட்டியெழுப்பப்படுதலோ, பயன்படுத்தப்படுதலோ, ஆகாது.

(2) அத்தகைய கட்டியெழுப்பலை அல்லது பயன்படுத்தலை அங்கீகரிப்பதற்கு எழுத்திலான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபை வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்தகைய கட்டியெழுப்பல் அல்லது பயன்பாடு விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு ஒத்தியையவிருந்தால் அதனை அங்கீகரித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவில் உள்ள எதுவும்—

(அ) 1979 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் இடப்பரப்பு தொழில் முயற்சியினால் அல்லது உரிமம் பெற்ற தொழில் முயற்சியினால்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாத இடப்பரப்பொன்று எனக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் சனாதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் இடப்பரப்பில்;

(இ) 19 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்படும் ஏதேனும் கைத்தொழில் பெருந் தோட்டத்தில் கைத்தொழில் பூங்காவில், அறிவியற் பூங்காவில் அல்லது கைத்தொழில் உள்ளமைப்பில்; அத்துடன்

(ஈ) 21 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கைத்தொழில் இடப்பரப்பில்,

கட்டியெழுப்பப்படும் அல்லது பயன்படுத்தப்படும் கட்டிடங்களுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

23. (இதனகத்துப் பின்னர் ''நியாய வியாபார ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நியாய விபாயார ஆணைக்குழுவானது ஏதேனும் பொருளின் விலையை மீளாய்வு செய்யலாம் என்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக விசாரணையொன்றையும் நடாத்தலாம். அத்தகைய ஏதேனும் விசாரணையின் பின்னர் அத்தகைய பொருளின் விலை நியாயமற்றதெனவும், அத்தகைய பொருட்களின் இறக்குமதியை அனுமதிப்பதன் மூலம் போட்டி நிலையை ஊக்குவிப்பது அவசியமாகும் எனவும் நியாய வியாபார ஆணைக்குழு தீர்மானித்தால், நியாய வியாபார ஆணைக்குழு, வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையானது, அத்தகைய பொருட்களின் இறக்குமதி மீது அறவிடப்பட வேண்டிய சுங்க இறுப்பு வரி எதுவுமிருப்பின், அதனையும் விதந்துரைத்தல் வேண்டும்.

24. கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வியாபார, வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் குறித்துரைக்கப் படுகின்றவாறான அத்தகைய விளைபொருட்கள் தவிர்ந்த எல்லா விளைபொருட் களும், 1991 யூலை 1 ஆம் தேதியிலிருந்து, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவின் ஏற்பாடு களிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

25. (1) இச்சட்டத்துக்கான ஓராம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் கைத்தொழில்களை இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்துவது பொது மக்கள் நலனுக்கு உகந்ததென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(2) பாராளுமன்றம், தீர்மானம் மூலம், இச்சட்டத்திற்கான ஓராம் அட்ட வணையைத் திருத்தலாம்.

26. (1) ஆள் எவரும், ஓராம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் ஒன்றாகவுள்ளதும் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ளதுமான கைத்தொழில் ஒன்றை, அமைச்சரின் அமைச்சுக்கான செய லாளரினால் அதற்கென வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் கீழன்றியும், அதன் நிபந்தனைகளுக்கு இணங்கவல்லாதும், கொண்டு நடாத்துதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமம் ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் முறையும், அத்தகைய உரிமத்தை வழங்க மறுப்பதற்கெதிரான மேன்முறையீடுகளும், விதித் துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வோர் உரிமமும், இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள நியதி, நிபந்தனைகளுக்கு அமைவான தாகவிருத்தல் வேண்டும்.

(4) ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கைத் தொழில் ஒன்றை, அவ்வுட்பிரிவின் கீழ் அதற்கென வழங்கப்படும் உரிமமொன் றினைக் கொண்டு நடாத்துமிடத்துப் பதிவாளர், அத்தகைய தொழிலை அத் தகைய ஆள் கொண்டு நடாத்தாது தடைசெய்யும் கட்டளையொன்றுக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(5) அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழிலானது, அதனைக் கொண்டு நடாத்துவதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்று தேவைப்படும் கைத்தொழில் ஒன்று என்றும், அத்துடன் அவ்வுட்பிரிவின் கீழ் அது தொடர்பில் உரிமம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் பயன்பட வமைந்த பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்று, (4) ஆம் உட்பிரிவின் கீழ்த் தொடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏல் தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வு களுக்கான முதற்றோற்றச் சான்றாகவிருத்தலும் வேண்டும்.

27. (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக கைத்தொழில் பதிவாளர் ஒருவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிக் கைத்தொழில் பதிவாளர்களும், உதவிக் கைத்தொழில் பதிவாளர்களும் பெயர் குறித்தோ பதவி குறித்தோ நியமிக்கப்படலாம்.

(2) ஒவ்வொரு பிரதிக் கைத்தொழில் பதிவாளரினதும், உதவிக் கைத்தொழில் பதிவாளரினதும் நியமனமானது, அவர் எவ்விடப் பரப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைக் குறித்துரைத்தல் வேண்டும். அவ்வாறு குறித்துரைக்கப்படும் இடப்பரப்பு இதனகத்துப் பின்னர் ''அவரது நியமன இடப்பரப்பு'' எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பிரதிக் கைத்தொழில் பதிவாளரும், ஒவ்வோர் உதவிக் கைத்தொழில் பதிவாளரும், பதிவாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ்ப் பதிவாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும், அவரது நியமன இடப்பரப்பினுள் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

28. பதிவாளரும் பிரதிப் பதிவாளரும், உதவிப் பதிவாளரும், இச்சட்டத்தின் கீழ் எவையேனும் பணிகளை நிறைவேற்றும் வேறு எவரேனும் அலுவலரும், தமது கடமைகளைச் செய்யத் தொடங்கு முன்னர், அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்று தொடர்பிலான எல்லாக் கருமங்கள் சம்பந்தமாகவும் கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடிக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளும் வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்துகை மூலம், நீதிமன்றத்தினால் வெளிப்படுத்துமாறு தேவைப்படுத்தப்படும் போது தவிர, அத்தகைய கருமங்கள் எல்லாவற்றையும் வெளிவிடாதிருக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளுதலும் வேண்டும்.

29. (அ) 4 ஆம் பிரிவின்கீழ் அவர் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆண்டு விபரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறும்;

(ஆ) 4 ஆம் பிரிவின்கீழ் அவரால் கொடுத்துதவப்படும் ஏதேனும் ஆண்டு விபரத்திரட்டில் ஏதேனும் பொய்யான அல்லது செம்மையற்ற கூற்றைத் தெரிந்துகொண்டே செய்யும்;

(இ) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற,

ஒவ்வோர் ஆளும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

30. அமைச்சர், ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவது பற்றி எழுத்திலான அத்தகைய பொதுப் பணிப்புக்களை ஆணைக்குழுவுக்கு வழங்கலாம் என்பதுடன், ஆணைக்குழு அத்தகைய பணிப்புக்களைப் பயனுறுத்துதலும் வேண்டும்.

31. (1) சனாதிபதி, அமைச்சரதும் இயைபான எவரேனும் அமைச்சரதும் கலந்தாலோசனையுடன், கைத்தொழில் கொள்கையை நிறைவேற்றுவதற்குத் தடையாகவிருக்கும் நிருவாகஞ்சார் தடைகளையும், வேறு தடைகளையும் நீக்கும் நோக்கத்துக்காகவும் போட்டி முறையான கைத்தொழில் சூழலை மேம்படுத்துவதற்காக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் பயனுறு வகையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காகவும், பொதுவில் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான நிறுவனஞ்சார் ஆற்றல்களையும், ஏனைய ஆற்றல்களையும் சீராக்குவதற்காகவும் ஆணைக்குழுவுக்குப் பணிப்புக்களை வழங்கலாம்.

(2) அரசாங்க நிறுவனம் எதற்கும், அதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பு எதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு, ஆணைக்குழு பணிப்புரைகள் எவற்றையும் வழங்குமிடத்து, அப்பணிப்புரைகளுடன் இசைந்தொழுகுவது, அந்நிறுவனத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்குக் கடமையாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சனாதிபதியினால் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிச் சனாதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

32. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 18 முதல் 26 வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"விலைக்கட்டுப்பாட்டாளர் குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலைகளை நிர்ணயிக்குமாறு ஆணைக் குழுவை வேண்டலாம்.

18. (1) இப்பிரிவில் ''குறித்துரைக்கப்பட்ட பொருள்'' என்பது ஏதேனும் உணவுப் பொருள் அல்லது ஏதேனும் மருந்தாக்கல் உற்பத்திப் பொருள் எனப் பொருளாகும்.

(2) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொருளின் விலையில் நியாயமற்ற அதிகரிப்பு எதுவும் உள்ளதென அல்லது எழும் சாத்தியம் உள்ளதென அல்லது அது விற்பனைக்கெடுக்கப்படும் விலை மிகையாகவுள்ளதென விலைக்கட்டுப்பாட்டாளருக்குத் தோன்றினால், அவர் ஆணைக்குழுவை, ஒன்றில்—

(அ) அத்தகைய பொருள் எந்த ஆகக்கூடிய சில்லறை விலைக்கு மேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக் கூடிய சில்லறை விலையை நிர்ணயிக்குமாறு அல்லது அத்தகைய ஆகக் கூடிய விலையமைப்பு எவ்விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அந்த விலையமைப்பைத் தருமாறு; அல்லது

(ஆ) அத்தகைய பொருள் எந்த ஆகக் கூடிய விலைக்கு விற்கப்படுதலாகாதோ அந்த ஆகக் கூடிய விலையை நிர்ணயிப்பதாக அல்லது, அத்தகைய ஆகக் கூடிய விலை எந்த விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப் படலாமோ அந்த விலையமைப்பை எடுத்துக் கூறுவ தாக அப்போதைக்கு வலுவிலுள்ளதும் இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழானதுமான கட்டளையொன்று குறி த்துரைக்கப்பட்ட பொருளின் தொடர்பில் இருக்கின்ற விடயத்தில், அத்தகைய கட்டளைமூலம் நிர்ணயிக்கப் பட்ட ஆகக் கூடிய விலையை அல்லது விலையமை ப்பை வேறுபடுத்துமாறு,

வேண்டலாம்.

(3) இயைபான முகவர் நிலையமொன்று, எக்குறித்துரைக் கப்பட்டுள்ள பொருள் ஒன்று தொடர்பில் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதோ அக்குறித்துரைக்கப்பட்ட பொருள் தொடர்பில், அத்தகைய கட் டளையினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அல்லது விலை யமைப்பை மாற்றியமைக்குமாறு ஆணைக் குழுவை வேண்ட லாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றைப் பரிசீலித்த பின்னர், அத்தகைய வேண்டுகோள் நியாயமானதென ஆணைக் குழு திருப்தியடைந்தால், அது—

(அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்ச் செய்யப்பட்ட வேண்டுகோள் ஒன்றின் விடயத் தில், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடு செய்யப்பட் டுள்ள குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் எந்த ஆகக் கூடிய அல்லது சில்லறை விலைக்கு மேல் விற்கப் படலாகாதோ அந்த ஆகக் கூடிய விலையை அல்லது சில்லறை விலையை நிர்ணயித்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆகக் கூடிய விலைகள் எந்த விலையமைப் புக்கு இணங்க நிர்ணயிக்கப்படுதல் வேண்டுமோ அந்த விலையமைப்பை எடுத்துக் கூறுதல் வேண்டும்; அல் லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செய்யப்படும் வேண்டுகோள் ஒன்றின் விடயத்தில், அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரை க்கப்பட்ட பொருட்கள் எந்த ஆகக் கூடிய சில்லறை விலைக்கு மேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக் கூடிய சில்லறை விலையை நிர்ணயிப்பதான அல்லது

அத்தகைய ஆகக் கூடிய விலைகள் எந்த விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அந்த விலையமைப்பைத் தருவதான கட்டளையை வேறுபடுத்தலாம்.

இவ்வுட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அமைச்சர் (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(6) அமைச்சரினால் (5) ஆம் உட்பிரிவின் கீழ்க் கட்டளையொன்று ஒழிக்கப்படுகின்றவிடத்து அல்லது வேறுபடுத்தப்படுகின்றவிடத்து அத்தகைய ஒழித்தல் அல்லது வேறுபடுத்தல்பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ்ச் செய்யப்பட்ட அல்லது உறப்பட்ட எதற்கும், அல்லது அதன் கீழ்க் கொள்ளப்பட்ட, திரண்ட, உறப்பட்ட ஏதேனும் உரிமைக்கு, கடப்பாட்டுக்கு, அல்லது பொறுப்புக்குப் பங்கமின்றி விடயத்திற்கேற்ப, ஒழிக்கப்பட்டதாக, அல்லது வேறுபடுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

33. (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரால், பேரவையின் உறுப்பினர் ஒருவரால், அல்லது பிராந்தியக் கைத்தொழில் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரால் அல்லது பதிவாளரால், பிரதிப் பதிவாளரால் அல்லது உதவிப் பதிவாளரால் அல்லது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் பணியைப் புரிகின்ற வேறுஎவரேனும் அலுவலரினால் இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்கும், அத்தகைய உறுப்பினருக்கு, பதிவாளருக்கு, பிரதிப் பதிவாளருக்கு, உதவிப் பதிவாளருக்கு அல்லது வேறு அலுவலருக்கு எதிராகத் துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு எதிராக, இச்சட்டத்தின் கீழ் அவரால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

34. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது வெளியிடப்படும் தேதியன்று

அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவில், அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

35. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

(பிரிவு 25)

(1) வெளிநாட்டு மூதலீட்டுடனான ஏதேனும் கைத்தொழில்.

(2) உயர் தொழினுட்பத்தைக் கொண்ட ஏதேனும் கைத்தொழில்.

(3) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்குப் பண்டங்களை உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(4) கனிப்பொருட்களை அல்லது மீளப் புதுப்பிக்கப்படற்பாலனவல்லாத மூலவளங்களை வெளிக்கொணரும், பிரித்தெடுக்கும், அல்லது பதப்படுத்தும், ஏதேனும் கைத்தொழில்.

(5) ஆயுதங்களையும், சுடுபடைக்கலங்களையும், வெடிப் பொருட்களையும், இராணுவ வாகனங்களையும், உபகரணத்தையும், வானூர்தியையும், வேறு ஏதேனும் இராணுவ ஆயுதங்களையும் எந்திரங்களையும் உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(6) நஞ்சுகளை, போதைப் பொருட்களை, மதுசாரம், அபாயகரமான அவுடதங்களையும், அதனுடன் நச்சுத்தன்மையான தீங்கு விளைவிப்பதான, புற்றுநோய் விளைவிப்பதான பொருட்களை உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(7) நாணயத் தாள்களையும், நாணயக் குற்றிகளையும், பிணைய ஆவணங்களையும் உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(8) கைத்தொழில் எதிலும்—

(அ) பொறித்தொகுதியில் அத்துடன் உபகரணத்தில் மூலதன முதலீட்டின் பெறுமதியானது நாற்பது இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்துடன்

(ஆ) அத்தகைய கைத்தொழிலில் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை ஐம்பதை விஞ்சுகின்றவிடத்து,

(9) அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கம் பெரும்பான்மைப் பங்குகள் வைத்திருக்கும் கம்பனியொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் கைத்தொழில்.

## இரண்டாம் அட்டவணை

(பிரிவு 26)

(1) ஆயுதங்களையும், சுடுபடைக்கலங்களையும், வெடிப் பொருட்களையும், இராணுவ வாகனங்களையும், உபகரணத்தையும், வானூர்தியையும், வேறேதேனும் இராணுவ ஆயுதங்களையும், எந்திரங்களையும் உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(2) நஞ்சுகளை, போதைப் பொருட்களை, மதுசாரத்தை, அபாயகரமான அவுடதங்களை, அத்துடன் நஞ்சுத் தன்மையான தீங்கு விளைப்பதான, புற்று நோய் விளைப்பதான பொருட்களை உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்,

(3) நாணயத் தாள்களையும், நாணயக் குற்றிகளையும், பிணைய ஆவணங்களையும் உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்.

## மூன்றாம் அட்டவணை

(பிரிவு 26)

(1) ஏதேனும் அத்தகைய கைத்தொழிலில் பேணப்படவேண்டிய பாதுகாப்பு நிலைமையின் தராதரம்.

(2) உற்பத்தி ஆக்கப்பொருள்களைக் களஞ்சியப்படுத்துதல், உற்பத்தி ஆக்கப் பொருள்களின் பாவனை, பாவனை செய்யப்படாத உற்பத்தி ஆக்கப் பொருள்களையும் கழிவுப் பொருள்களையும் தள்ளிக் கழிக்கப்பட்ட பொருள்களையும் கையுதிர்த்தல் என்பன உட்பட, ஏதேனும் அத்தகைய கைத்தொழிலினால் எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள்.

(3) கைத்தொழிலின் உற்பத்திப் பொருட்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒப்படைக்கப்படவேண்டிய முறை.

(4) பேணப்படவேண்டிய சுகாதார நிலைமையின் தராதரம்.

(5) ஏதேனும் அத்தகைய கைத்தொழிலினால் பயன்படுத்தப்பட வேண்டிய உற்பத்தி ஆக்கப் பொருட்கள்.

# 1990 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1990, திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1991 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2.(1) இச்சட்டத்தில், ''நிதியாண்டான 1991 ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1991 ஆம் ஆண்டு சனவரிமாதம் 01 ஆந் தேதி தொடங்கி 1991 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக ஒன்பதினாயிரத்து ஐந்நூற்றி முப்பத்தெட்டுக் கோடி பதினொரு இலட்சத்து தொண்ணூற்றி மூவாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால், அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும்

பெறப்படல் வேண்டும்.

ஆகவே, எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது ஆறாயிரத்து அறுநூற்றெண்பது கோடி ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண் முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒன்பதினாயிரத்து ஐந்நூற்றி முப்பத்தெட்டுக் கோடி பதினொரு இலட்சத்துத் தொண்ணூற்றி மூவாயிரம்

ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1991 ஆம் ஆண்டின் போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின், அத்தேறிய மேன்மிகையானது நிதியாண்டின் 1991 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:—

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி, அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு, என்பன, ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1991 ஆம் ஆண்டின்போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1991 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது; அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சி மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் V ஆம் நிரையி

லுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1991 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப் பட்டுள்ள எவையேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத் தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமா ளிப்பதற்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறா யினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத் தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக் கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ் வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப் பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழும், மீண்டுவருஞ் செலவினத் திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவ ரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப் பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற் குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டமெதன்கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெவையும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க் கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத் திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகை

களை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் II ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளுள் எதனையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1992 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அட்டவணையில் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும்; அத்துடன்

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக் கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சிகள் தொடர்பிலான ஆகக் குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.